


விலை ரூபா 80

பக்கங்கள் - 12 +XII

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 09 குரோதி வருடம்
கார்த்திகை மாதம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (08.12.2024)




# உலகை வியக்க வைத்த மாற்றுத்திறனாளியின் நாடாளுமன்ற ஆரம்ப உரை

## மாற்றுத்திறனாளிகளின் கொடுப்பனவை ரூ.10,000ஆக அதிகரிக்க முடிவு

(கனுஷியா புஷ்பகுமார்)

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் முதல் தடவையாக விழிப்புலனற்றவர் என்ற வகையில் இலங்கை பார்வையற்ற பட்டதாரிகள் சபையின் தலைவர் சுகத் வசந்த டி சில்வா நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு தகுதி பெற்றிருந்தார்.

வெள்ளிக்கிழமை (06) இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் அவர் தனது முதலாவது உரையை ஆற்றியிருந்தார். எதிர்வரும் வரவு- செலவுத் திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான கொடுப்பனவு 7500 ரூபாவிலிருந்து 10,000 ரூபாவாக நிச்சயம் அதிகரிக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த சில்வா தெரிவித்தார்.

மேலும் அவரது நாடாளுமன்ற உரையில்,

" இந்த உயரிய சபையில் எனது ஆரம்ப உரை இது . மேலும், இது ஒரு வரலாற்றுக் கதை. இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் 76 ஆண்டு களுக்குப் பிறகு, மாற்றுத்திறனாளி ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு தகுதியானார். இது தற்செயலாக அல்லது ஏதோவொரு காரணத்தால் வழங்கப்பட்ட (தொடர்ச்சி...)

02



சுகத் வசந்த டி சில்வா எம்.பி சபையில்...

# நாணய நிதிய உடன்படிக்கை திருத்தப்படாது

## இழுத்தடிப்புகள் செய்தால் பொருளாதாரம் வீழும் - அரசு

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போது ஏற்படுத்திக்கொண்டுள்ள இணக்கப்பாடுகளை மீண்டும் திருத்தியமைக்க முடியாது. அதில் காலதாமதங்களை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை சவாலுக்கு உட்படுத்த முடியாதென வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இடைக்கால கணக்கறிக்கை மீது வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

எமக்கு பாரிய பொறுப்பொன்றுசுமத்தப்பட்டுள்ளது. அதனை முழுமையாக பின பற்ற அனைவரும் கட்டுப்பட்டுள்ளோம்.நாங் கள் நீண்டகால திட்டங்களை

நாணய (தொடர்ச்சி...)

02



### சிவப்பு சீனி மீதான பெறுமதி சேர் வரியை நீக்க தீர்மானம்

சிவப்பு சீனி மீதான பெறுமதி சேர் வரியை நீக்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படும்



என கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்துள்ளார். இடைக்கால கணக்கறிக்கை (தொடர்ச்சி...)

02

## அவசரம்; 10,000 மெ.தொ அரிசி உடனடி இறக்குமதி

அரசாங்கம் இறக்குமதி செய்யத் திட்டமிட்டுள்ள 70,000 மெற்றிக் தொன் அரிசியில் 10,400 மெற்றிக் தொன் அரிசியை உடனடியாக இறக்குமதி செய்ய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக லங்கா சதொச தலைவர் டொக்டர் சமித்த பெரேரா தெரிவித்தார்.

அரிசி இறக்குமதி செய்யப்பட்டவுடன் உடனடியாக அது விநியோகிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த அரிசி விரைவில் இலங்கைக்கு கொண்டு வரப்படுவதாகவும் இத்தொகையில் லங்கா சதொச மற்றும் அரச வர்த்தக கூட்டுத்தாபனம் 5,200 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (தொடர்ச்சி...)

02

## ஆணையை மீறி செயல்பட வேண்டாம் ஐ.எம்.எப். உடன்பாட்டை திருத்த ஆதரவு

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



தற்போதைய அரசாங்கம் பெரும் மக்கள் ஆணையைப் பெற்று, நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சந்தர்ப்பத்தில் இந்த அரசாங்கம் மக்கள் ஆணையை மீறி மக்களின் உரிமைகளுக்கு துரோகம் இழைத்துள்ளது. ஏலவே எட்டியிருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டை அவ்வாறே தொடர்வதானது அண்மைக் காலத்தில் நடந்த மிகப் பெரிய துரோகம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அரசாங்கத்தின் சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாடு தொடர்பில் வெள்ளிக்கிழமை(06) (தொடர்ச்சி...)

02



தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பணியகத்தின் (SCA) உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லு தலைமையிலான அமெரிக்க பிரதிநிதிகள் வெள்ளிக்கிழமை (06) வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை சந்தித்தனர். இச்சந்திப்பில் அமெரிக்க தூதுவர் உட்பட முக்கிய பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

### ஹெரோயின்: 17 வயது சிறுவன் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள காந்திநகர் பிரதேசத்தில் வீடு ஒன்றை முற்றுகையிட்ட விசேட அதிரடிப்படையினர் ஹெரோயின் மற்றும் கேரளா கஞ்சாவுடன் 17 வயது சிறுவன் ஒருவனை (தொடர்ச்சி...)

02

### உள்ளூராட்சி தேர்தலுக்கு புதிதாக வேட்புமனு கோர கட்சித் தலைவர்கள் இணக்கம்?

(கனுஷியா புஷ்பகுமார்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக இரண்டு வருடங்களுக்கு முன்னர் பெறப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்து புதிதாக பெறப்பட்ட வேட்புமனுக்களின் அடிப்படையில் தேர்தலை நடத்துவது தொடர்பில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சித் தலைவர்கள் கலந்துரையாடி இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது வரையில் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் பெறப்பட்ட வேட்புமனுக்களை (தொடர்ச்சி...)

02

### கோபா தலைமை பதவி எதிர்க்கட்சிக்கு

(கனுஷியா புஷ்பகுமார்)

பொதுக் கணக்காளர்கள் சபையின் (கோபா) தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றில் தெரிவித்தார்.

பொது நிறுவனங்கள் தொடர்பான குழுவின் (கோப்) தலைவர் பதவியை அரசாங்கம் பெற்றுக்கொள்ளும் எனவும் அவர் தெரிவித்தார். கடந்த அரசாங்கத்தின் (தொடர்ச்சி...)

02

## ஆளும் கட்சித் தலைவரை கைது செய்ய உத்தரவிட்ட தென் கொரிய ஜனாதிபதி!



தென் கொரியாவின் ஜனாதிபதி யூன் சுக் யோல் (Yoon Suk Yeol) செவ்வாய் (03) இரவு இராணுவச் சட்டத்தை அறிவித்தபோது, அவரது சொந்த ஆளும் கட்சியின் தலைவர் ஹான் டோங்-ஹுனை கைது செய்ய உத்தரவிட்டதாக தெரியவந்துள்ளது.

கைது பட்டியலில் பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியின் தலைவர் லீ ஜே-மியுங் மற்றும் மூன்று எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் அடங்குவர் என்று தேசிய புலனாய்வு சேவையின்(தொடர்ச்சி...)

02

### லால்காந்தவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



விவசாயத்துறை அமைச்சர் லால்காந்த நாடாளுமன்றத்தில் தெரிவித்ததாகக் கூறப்படும் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து (தொடர்ச்சி...)

02

## சதொசவில் தேங்காய்க்கு மக்கள் முண்டியடிப்பு

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

சதொச கிளைகளில் மானிய விலைகளில் நாட்டு அரிசி மற்றும் தேங்காய்கள் விற்பனை செய்யப்படுவதால் சதொச கிளைகளில் வியாழக்கிழமை முதல் நுகர்வோரின் வரிசைகள் அதிகரித்திருந்தன.

கொழும்பு உள்ளிட்ட மக்கள் கூட்டம் அதிகமாக உள்ள பகுதிகளில் மக்களை கட்டுப்படுத்த (தொடர்ச்சி...)

02



## ஆணையை...

நாடாளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரை நிகழ்த்துகையில்,இந்த இணக்கப்பாட்டில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். முன்னைய அரசாங்கத்தின் பிரேரணையின் பிரகாரம் டிசம்பர் 12 ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்பட்டு, இந்த இணக்கப்பாடு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு, விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் போது எதிர்க்கட்சி இதற்கு ஆதரவு வழங்கத் தயார்.

நமது நாடு கானாவைப் போல செயல்பட வேண்டும். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி பாராமல் இதற்கு உதவத் தயாராக உள்ளோம். ஒரு நாடாக கானா சென்ற வழியில் நாமும் செல்ல வேண்டும். தற்போதுள்ள இணக்கப்பாடு நிறைவேற்றப்பட்டால், பாதகமான கடன் சுழற்சியில் சிக்குண்டு அதன் பங்குதாரர்களாக மாறி, பல தசாப்தங்களாக கடன் சுமையில் தவிக்கும் நாடாக மாறுவோம். ஆகையால், எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் இணக்கப்பாட்டினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

"வளமான நாடு–அழகான வாழ்க்கை" தேர்தல் விஞ்ஞாபனத்தில் பக்கம் 105 இன் படி, மாற்று கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வு மூலம் திசைகாட்டி அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டும் இணக்கப்பாட்டை தொடர்ந்து முன்னெடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய முறைமையின் மூலமா அல்லது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் பின்பற்றிய வழிமுறைமையின் ஊடாகவா அண்மையில் இணக்கப்பாடு எட்டப்பட்டது என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு கேள்வி எழுப்பினார்.

வளமான நாடு–அழகான வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கான பயணம் தற்போதுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தொடருமானால், பயணம் வீழ்ச்சியடையும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தற்போதுள்ள IMF இணக்கப்பாட்டின் மூலம் நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்த வேண்டாம்.

IMF இன் மார்ச் 2023 அறிக்கையில், 2033 இல் இருந்து கடன் திருப்பிச் செலுத்துதலை ஆரம்பிக்குமாறு அழைப்பு விடுத்திருந்தது. திருத்தங்களை மேற்கொள்ளாது ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த புதிய இணக்கப்பாட்டின் மூலமும், 2028 இல் கடன் செலுத்தும் பணியையே மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. இன்னும் 4 வருடங்களில் கடனை திருப்பிச் செலுத்தும் வகையில் வலுவான பொருளாதாரத்தை கட்டமைப்பதற்கு எந்த அரசாங்கத்தாலும் முடியாது போயுள்ளது. இந்த இணக்கப்பாட்டின் மூலம் நாட்டை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளனர். தற்போதைய அரசாங்கமும் ஜனாதிபதியும் முன்னாள் ஜனாதிபதியின் அடிச்சுவடுகளையே பின்பற்றி வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

இந்த அரசாங்கம் IMF அறிக்கைகளை ஆராயாமல் உடன்பட்டு, நீட்டிக்கப்பட்ட கடன் வசதிகளைப் பெறுவதற்காக மட்டுமே செயல்படுவது ஆபத்தான சூழ்நிலையாகும். தற்போதுள்ள இணக்கப்பாடு பலவீனமானது, இதற்கு அப்பால் சென்று, திருத்தங்களை மேற்கொண்டு புதிய இணக்கப்பாட்டை எட்ட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கானாவின் வழிமுறையை நாமும் பின்பற்ற வேண்டும்.

நமது நாட்டில் பிணை முறி பத்திர கொடுக்கல் வாங்கல்கள் ஒப்பந்தத்தில் தலையிட்ட அதே நிறுவனமே கானாவில் கடன் வெட்டிலும் தலையிட்டது. செலுத்த வேண்டிய கடனில் 37% வெட்டப்பட்டது. அதேபோல் 6% வட்டி விகிதத்துக்கு கானா இணக்கப்பாட்டையும் எட்டியது. இதற்கு முற்றிலும் மாறுபட்ட ஒன்றே இங்கு நடக்கிறது.

2025–2028 ஆம் ஆண்டில் நமது நாட்டின் சராசரி மொத்த உள்நாட்டு உற்பத்தி 107 பில்லியனாக இருக்கும் என்று கருதினால், தற்போதுள்ள கடனை விட 2.3 பில்லியன் அதிகமாக கடனை செலுத்த வேண்டி வரும். அவ்வாறே 2028 முதல் வட்டி விகிதம் 6.8மூ ஆகவும், 2032 க்கு மேல் வட்டி விகிதம் 9.65மூ ஆகவும் அமைந்திருக்கும்.

கானா இந்த முன்மொழிவுகளை நிராகரித்து சிறந்தொரு இணக்கப்பாட்டை எட்ட முடியுமாக இருந்தால், எம்மாலும் அது முடியும். தற்போதைய சூழ்நிலைக்கு மத்தியில் எங்களால் கடன் வெட்டை எட்ட முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

எமது தீர்வு குறித்தும் அவதானம் செலுத்துங்கள்.

இதன் காரணமாக, கடன் சுமை அதிகரிக்கும், பீடனைகளும் அழுத்தமும் அதிகரிக்கும், வறுமை அதிகரிக்கும். சமூகத்தின் நலிந்த பிரிவினர் மேலும் பாதிக்கப்படுவார்கள். இந்த அதிகப்படியான கடனுக்கு அரச வருவாயில் இருந்து அதிக பணம் செலுத்த வேண்டியிருக்கும் போது, கல்வி, சுகாதாரம், மீன்பிடி, விவசாயம் மற்றும் பொதுமக்களுக்கு செய்யக்கூடிய முதலீடுகள் குறையும். இந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைக்க தாம் விரும்புவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

## லால்காந்தவுக்கு..

சிவில் அமைப்பினர் கடந்த வெள்ளிக்கிழமையன்று காலை பத்தரமுல்லை பொல்துவ சந்தியில் போராட்டமொன்றில் ஈடுபட்டனர். "வன விலங்குகளை கொல்ல அனுமதியளிக்கின்ற லால்காந்தவின் அறிக்கையை எதிர்ப்போம்" "கிராமங்களுக்குள் வருகின்ற யானைகளை வன யானைகளாக மாற்றுவோம்" "இலங்கையில் வனவிலங்குகளுக்கு வாழ உரிமை உண்டு" போன்ற பதாகைகளை ஏந்தியவாறு இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## ஐ.தே.க குழுத் தலைவராக ஜீவன்



பொதுத் தேர்தலில் சிலிண்டர் மற்றும் யானை சின்னத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் குழுவின் தலைவராக ஜீவன் தொண்டமான் வெள்ளிக்கிழமை(06) நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி நுவரெலியா மாவட்டத்தில் நாடாளுமன்றத்திற்கு தெரிவான ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் ஆவார்.

## ஆளும்...

துணை பணிப்பாளர் ஹாங் ஜாங்–வோன் கூறியுள்ளார்.

வெள்ளிக்கிழமை முழுவதும் நாட்டின் அரசியல் கட்சிகள் அவசர கூட்டங்களை நடத்தியும், யூன் மீதான குற்றச்சாட்டுக்கு வாக்கெடுப்பு நடத்த எம்.பி.க்கள் திட்டமிட்டுள்ள நிலையில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

சனிக்கிழமையன்று திட்டமிடப்பட்டுள்ள இந்த பிரேரணைக்கு மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தால் நிறைவேற்றப்படும்.

300 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிக்கு பெரும்பான்மை உள்ளது.

ஆனால் பதவி நீக்கப் பிரேரணையை நிறைவேற்றுவதற்குத் தேவையான 200 வாக்குகளைப் பெற குறைந்தபட்சம் எட்டு ஆளும் கட்சி எம்.பி.க்களின் ஆதரவு தேவை.

அவரது சொந்தக் கட்சி இப்போது எதிர்க்கட்சியுடன் இணைந்து வாக்களிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், ஆளும் கட்சியின் தலைவர் வெள்ளிக்கிழமை (06) யூனை விரைவாக இடைநீக்கம் செய்ய அழைப்பு விடுத்தார்.

அவர் ஆட்சியில் நீடித்தால் ஜனநாயகத்திற்கு "பெரிய ஆபத்தை" ஏற்படுத்துவார் என்று கூறினார்.

செவ்வாயன்று "அரசவிரோதக் குற்றச்சாட்டில்" முக்கிய அரசியல்வாதிகளை கைது செய்ய யூன் உத்தரவிட்டார் என்பதற்கு "நம்பகமான ஆதாரங்கள்" இருப்பதாக வெள்ளிக்கிழமை தேசிய புலனாய்வு சேவையின் துணை பணிப்பாளர் ஹாங் ஜாங்–வோன் குறிப்பிட்டார்.சியோலுக்கு தெற்கே உள்ள குவாச்சியோனில் உள்ள தடுப்பு மையத்தில் கைது செய்யப்பட்ட அரசியல்வாதிகளை சிறையில் அடைக்க யூன் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

யூன் பதவியில் நீடித்தால், இராணுவச் சட்டப் பிரகடனம் போன்ற "தீவிர நடவடிக்கைகள்" மீண்டும் நிகழலாம் என்று

## உள்ளூராட்சி...

இரத்து செய்து, புதிய வேட்புமனுக்களை பெற செய்ய வேண்டிய விடயங்கள் குறித்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடப்படவில்லை எனவும், எதிர்வரும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மேலும் கலந்துரையாடப்பட உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் பெறப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்து புதிய வேட்புமனுக்களை அழைப்பதில் கட்சித் தலைவர்கள் கவனம் செலுத்தியுள்ளனர்.

ஏனெனில் வேட்பு மனுப் பட்டியலில் உள்ளவர்களில் சிலர் உயிரிழந்தும், வெளிநாடுகளுக்குச் சென்றும், கட்சி மாறியும், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலில் இலட்சக்கணக்கான வாக்குகள் குறைவாக இருந்ததே காரணமாகும்.

கடந்த நவம்பர் மாதம் 25ஆம் திகதி நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக வழங்கப்பட்ட வேட்புமனுக்கள் இரத்துச் செய்து, வேட்புமனுக்களை மீண்டும் ஒப்படைத்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகவும் இது தொடர்பில் எந்தவொரு கட்சி மற்றும் கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படவில்லை எனவும் ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளரும் அமைச்சரவை ஊடகப் பேச்சாளருமான அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், குறித்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அனைத்துக் கட்சிகளும் பிரதிநிதித்துவப்படுத்தப்படாத காரணத்தினால், அன்றைய தினம் பங்குபற்றாத கட்சிகள், அதாவது 12 கட்சித் தலைவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுவின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு இது தொடர்பாக கட்சித் தலைவர் கூட்டம் நடத்தப்படும் தீர்மானம் எட்டப்படும்.

அன்றைய தினம் பங்குபற்றாத கட்சிகள், அதாவது 12 கட்சித் தலைவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுவின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட அந்தக் கட்சித் தலைவர் கூட்டத்தில் அனைத்துக் கட்சிகளும் பிரதிநிதித்துவப்படுத்தப்படாததால், அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும், பின்னர் ஒரு அதிகாரியும் இது தொடர்பாக கட்சித் தலைவர் கூட்டம் நடத்தப்படும் முடிவு எடுக்கப்படும் என்றார். கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கான திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை கூடிய விரைவில் நடத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தயாராகி வருகிறமை குறிப்பிடத்தக்கது.

## நாணய நிதிய...

செயல்படுத்த உள்ளோம். அதற்காக ஒரு சிறந்த பொறிமுறையை கையாள வேண்டும். அதற்காகதான் நாடாளுமன்றத்தில் குறுகியகால தீர்மானங்கள் சில எடுக்கப்படுகின்றன.

அதன் ஒரு கட்டமாகதான் இடைக்கால கணக்கறிக்கையொன்றை முன்வைத்துள்ளோம். இதில் நீண்டகால இலக்குகள் இல்லை. இடைக்கால கணக்கறிக்கையில் நீண்டகால பொருளாதாரத் திட்டங்களை முன்வைக்க முடியாது. என்றாலும், வரவு – செலவுத் திட்டத்தில் நீண்டகால இலக்குகள் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு முன்னோக்கி செல்வோம்.

நீண்டகால திட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டமும் ஒன்றும். நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அத்திட்டத்தை முன்னோக்கி கொண்டுசெல்ல வேண்டியுள்ளது. அத்திட்டத்தை நிறுத்த முடியாது. அவ்வாறு செய்தால் நாடு பின்னோக்கி செல்லும். அதனால் இத்திட்டத்தில் உள்ள குறைப்பாடுகளை நீக்கி பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்யவே எதிர்பார்க்கிறோம்.

நீண்டகால பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நகர உற்பத்தி பொருளாதாரம் அதிகரிக்க வேண்டும். அந்த இலக்கை நோக்கிதான் நாம் பயணிக்கிறோம். 12ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட முன்னர் மீண்டும் இதில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளுமாறு எதிர்க்கட்சி கோருகிறது. அதற்கு கால அவகாசம் போதுமானதாக இல்லை. அவ்வாறு செய்யவும் முடியாது.

ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடுகளின் பிரகாரம் கடன் மறுசீரமைப்பு பணிகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படும். அடுத்த வருடம் வரவு – செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. அதில் எமக்கு சில இலக்குகள் உள்ளன. அதனால் இத்திட்டத்தை தொடர்ந்து இழுத்தடிப்பு செய்ய முடியாது.

பொருளாதாரத்தில் இருந்து மீண்டெழ விரைவாக அந்நிய செலாவணியை பெற்றுக்கொள்ளும் துறைகள் குறித்து அவதானம் செலுத்தியுள்ளோம். அதில் சுற்றுலாத்துறை முக்கியமானது. அத்துடன், வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொள்வதும் முக்கியமானது. இந்த விடயங்களில் நேரடி நடவடிக்கைகளை எடுக்க உள்ளோம்.

ரணில் விக்ரமசிங்கவின் திட்டங்களை நாம் கொண்டுசெல்வதாக சிலர் தெரிவிக்கின்றனர். ரணில் விக்ரமசிங்க யார் என அவ்வாறு கூறுபவர்களைவிட எமக்கு நன்றாக தெரியும். ரணிலின் தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பில் உங்களுக்கு நன்றாக தெரியும். ஆனால், அவரது கொள்கை என்ன என்பது தொடர்பில் எமக்கு நன்றாக தெரியும்.

ரணில் பின்பற்றிய கொள்கை இந்த நாட்டு மக்களுக்கு இருள் சூழ்ந்தவையாகும். ஆனால், நாம் அந்த கொள்கையில் இல்லை. ஐ.எம்.எப். திட்டத்துக்கு நாம் தொடர்புடவில்லை. ஐ.எம்.எப். திட்டத்தை ஆரம்பித்தது ரணில் அல்ல. பசில் ராஜபக்சவே ஆரம்பித்திருந்தார். ஐ.எம்.எப் உடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போது அதனை பகிரங்கப்படுத்தவில்லை என பசிலிடம் கேள்வி கேட்டது ரணில் விக்ரமசிங்கவே.

பசில்தான் அதனை செய்திருந்தார். இது ரணிலின் செயல் திட்டம் இல்லை. ரணிலா அல்லது யார் நாட்டின் தலைவராக இருக்கிறார் என ஐ.எம்.எப் க்கு முக்கியமானதல்ல. நாட்டின் தலைவர் யார் என்பதுதான் முக்கியம். ஆகவே, நாம் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில்தான் செயல்படுவோம்.

அதனால் வரவு – செலவுத் திட்டத்தில் மக்களுக்கு சலுகைகளை வழங்கும் பாரிய திட்டங்களை முன்னெடுக்க உள்ளோம்." என்றார்.

## ஹெரோயின்...

வெள்ளிக்கிழமை (06) கைது செய்து ஒப்படைத்ததாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்லடி விசேட அதிரடிப்படையினரு க்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து குறித்த முகாம் பொறுப்பதிகாரியின் தலைமையில் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொக்குவில் பொலிஸ் பிரிவில் காந்திநகர் பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றை முற்றுகையிட்டு சோதனை மேற்கொண்டபோது விசேட அதிரடிப்படையினரைக் கண்ட சிறுவன், தனது உடைமையில் மறைத்து வைத்திருந்த போதைப் பொருட்களை வீசியுள்ளான்.

இதில் 10 கிராம் 950 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும் பொதி செய்யப்பட்ட 650 மில்லிகிராம் கொண்ட 5 பக்கற்றுகளாக கேரள கஞ்சாவும், 7 கிராம் 200 மில்லிகிராம் கேரள கஞ்சாவை அதிரடிப்படையினர் மீட்டதுடன் சிறுவனை கைது செய்து சான்று பொருட்களுடன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

## அவசரம்...

லங்கா சதொச மற்றும் அரச வர்த்தக கூட்டுத்தாபனம் முறையே 40,400 மெற்றிக் தொன், 20,200 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய விலைமனு கோரியுள்ளதாகவும், இங்கு ஸ்வர்ண நாடு அரிசி மட்டுமே இறக்குமதி செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரிசி இறக்குமதி தனியாருக்கு திறக்கப்பட்டு எள்ளதால், தனியார் துறையினரால் இறக்குமதி செய்யப்படும் அரிசி அடுத்த சில நாட்களில் இலங்கையை வந்தடையும் என்றும் அரிசி இறக்குமதியாளர்களின் அரிசி மாதிரிகள் பல அரச நிறுவனங்களுக்குப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கோபா...

விடயங்களை முதலில் விசாரிக்க வேண்டும் என்பதே இதற்குக் காரணம் எனவும் சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

## சிவப்பு சீனி....

மீதான விவாதம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், இறக்குமதி செய்யப்படும் வெள்ளை சீனிக்கு பெறுமதி சேர் வரி அறவிடப்படுவதில்லை, இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் சிவப்பு சீனிக்கு 18 வீத பெறுமதி சேர் வரியும் 2.5% வரி விதிக்கப்படுகிறது.தொழிற்சாலை யிலிருந்து வெளிவரும் சிவப்பு சீனி 300 ரூபாவாகவும் இறக்குமதி செய்யப்படும் வெள்ளை சீனி சந்தைக்கு வெளியே 220 ரூபாவாகவும் காணப்படுகிறது.

சிவப்பு சீனி அத்தியாவசியமற்ற பொருளாக வகைப்படுத்தப்பட்டுள்ளதையும் இறக்குமதி செய்யப்படும் வெள்ளை சீனி அத்தியாவசியப் பொருளாகவும் பார்க்கப்படுகிறது.

எனவே சிவப்பு சீனி மீதான பெறுமதி சேர் வரியை நீக்குவதனூடாக நியாயமான விலைக்கு விற்பனை செய்ய முடியும்.

சீனி வரியில் ஏமாற்றியவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் இந்த சர்ச்சை தீர்க்கப்பட வேண்டும்" என்றார்.

## உலகை...

ஆனை அல்ல. இதற்கு பின்னால் ஒரு குழுவினர் கடுமையாக உழைத்துள்ளனர். 17 இலட்சத்துக்கும் அதிகமான எனது மாற்றுத்திறனாளி சமூகத்தின் சார்பாக அந்தக் குழுவுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

குறித்த சமூகத்திற்கு முடிவுகளை எடுப்பதற்கு பிரதிநிதி ஒருவர் தேவை என்பதை தேசிய மக்கள் சக்தி மட்டுமே புரிந்து கொண்டது.

மாற்றுத்திறனாளி என்பவர் இந்த உலகத்திற்கு அழகைக் கொண்டு வந்த தூதுவர்.

நான் உங்களிடையே பார்வையற்றவன் என்பதால், இங்கு பன்முகத்தன்மை எழுந்துள்ளது. அந்தச் சிறப்பினால்தான் மனித சமுதாயத்தின் சிறப்பே உருவானது.

இந்த இயலாமை நாம் பலவந்தமாகப் பெற்றதல்ல" என்றும் சுகத் வசந்த தெரிவித்தார்.

எமது நாட்டின் மக்கள் தொகையில், சுமார் 20 இலட்சம் பேர் விசேட தேவையுடையவர்களாக உள்ளனர்.

நாட்டின் மொத்த சனத்தொகையில் சுமார் 9 வீதமான இந்த பிரிவினர் சார்பில் வரலாற்றில் முதல் தடவையாக நாடாளுமன்றத்திற்கு ஒரு பிரதிநிதி நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சதொசவில்...

உள்ள பகுதிகளில் மக்களை கட்டுப்படுத்த முடியாத நிலையும் ஏற்பட்டது.

கடந்த ஒரு மாதகாலமாக நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், சந்தையில் மக்கள் அதிகம் உண்ணும் நாட்டு அரிசிக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரிசிக்கான தட்டுப்பாட்டை நீக்க ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளையும் உடனடி தீர்மானங்களையும் எடுத்துள்ளது.

இதன் பிரகாரம், இந்தியாவிலிருந்து 70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதித்தது. இந்த தீர்மானத்தின் அடிப்படையில் இதுவரை 40ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதுடன், சதொச வலையமைப்பின் ஊடாக விநியோகிக்கும் பணியும் ஆரம்பமாகியுள்ளது.

சதொச ஊடாக மானிய விலையில் அரிசி மற்றும் தேங்காய் வழங்கப்படுவதாக பரவிய செய்தியால் சதொச கிளைகளில் பாரியளவில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்ததுடன், கட்டுப்படுத்த முடியாத நிலையும் அதன் பணியாளர்களுக்கு ஏற்பட்டது. குறிப்பாக 130 ரூபாவுக்கு தேங்காய்கள் சதொச ஊடாக விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை 220 ரூபா என்ற கட்டுப்பாட்டு விலையில் சதொச கிளைகளில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளமையை அடுத்தே இவ்வாறு வரிசைகள் அதிகரித்தன. அத்துடன், அரிசி, தேங்காய்களுக்கான கேள்விகளும் சதொசயில் அதிகரித்துள்ளன.

# சுற்றுலாப் பயணியின் தொலைபேசி பறிப்பு

## விரைந்து செயற்பட்ட பொலிஸாரால் இருவர் கைது



(க.கிஷாந்தன்)

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கிச் சென்ற உடரட்ட மெனிக்கே ரயிலில் பயணித்த வெளிநாட்டு பெண்ணொருவரை தடியால் தாக்கி, அவரின் கையடக்க தொலைபேசியை பறித்த இருவரை வட்டவளை பொலிஸார் கைது செய்தனர்.

விசாரணைகளின் பின்னர் இரு சந்தேக நபர்களும் ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட வேளை இருவரையும் எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹற்றன் நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரொசல்ல மற்றும் விக்டன் பகுதிகளைச் சேர்ந்த 23 மற்றும் 26 வயதுகளுடைய இருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு கோட்டையில் இருந்து டிசம்பர் 04 ஆம் திகதி எல்ல நோக்கி பயணித்துக்கொண்டிருந்த 36 வயதான ஸ்பெயின் நாட்டு பெண் சுற்றுலாப் பயணி ஒருவர், ரயில் கதவுப் பகுதியிலிருந்தவாறு தனது தொலைபேசிமூலம் வீடியோ எடுத்துக்கொண்டு பயணித்துள்ளார்.

ரயில் தண்டவாளத்துக்கு அருகில் இருந்த இரு இளைஞர்கள் தனது கையை தடியால் தாக்கினர் எனவும், இதனையடுத்து 5 இலட்சம் ரூபா பெறுமதியான தொலைபேசி கீழே விழுந்தது எனவும், தனது தலைபகுதியிலும் காயம் ஏற்பட்டுள்ளது எனவும் குறித்த பெண் எல்ல சுற்றுலா பொலிஸில் முறையிட்டார்.

ஹற்றனுக்கும், வட்டவளைக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து இது தொடர்பில் வட்டவளை பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டு விசாரணையை முன்னெடுத்த பொலிஸார் அன்று இரவு சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்தனர்.

# விளம்பரங்களுக்கு சிறுவர்களை பயன்படுத்தத் தடை

ஜனவரி முதலாம் திகதி முதல் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களை விளம்பரங்களில் பயன்படுத்துவதைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார மற்றும் வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் வைத்தியர் ஹசங்க விஜேமுனி தெரிவித்துள்ளார்.

அதற்கான வர்த்தமானி அறிவித்தலை அமுல்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக வெள்ளிக்கிழமையன்று (01) நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரதி அமைச்சர் தெரிவித்தார்.



”குறிப்பாக 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களை ஜனவரி 1ம் திகதி முதல் விளம்பரங்களுக்குப் பயன்படுத்துவதை தடுப்போம். அதற்கான வர்த்தமானியை அமுல்படுத்துவதற்கான அனைத்து பணிகளையும் செய்துள்ளோம். ஏனெனில் கடந்த அரசாங்கங்கள் இதனை 7-8 வருடங்களாக இழுத்தடிப்பு செய்தன. கடந்த வாரம் நாங்கள் ஒரு முடிவை எடுத்தோம், அதை நாங்கள் இழுத்தடிக்கப் போவதில்லை. ஜனவரி 1 முதல் இதை அமுல்படுத்துவோம்.” என்றார்.

## வெளிநாட்டவர் உயிரிழந்த சம்பவம்

# விசாரணைகள் ஆரம்பம்

(எஸ்.டொரின்)

கொள்ளுப்பிட்டி பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றிலிருந்து வெளிநாட்டவர் ஒருவர் குதித்து தற்கொலை செய்து கொண்ட காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலானது.

குறித்த நபர், கடந்த 3ஆம் திகதி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதுடன் உயிரிழந்தவர் 51 வயதான அவுஸ்திரேலியர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் அவர் மனநலம் பாதிக்கப்பட்டவராகவும் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரட்டை குடியுரிமை கொண்ட அந்த நபர், அடுக்குமாடிக் குடியிருப்பில் நீண்டகாலமாக வசித்து வந்துள்ளார்.

சம்பவ தினத்தன்று அந்நபர் 7வது மாடியிலிருந்து குதிக்க முயற்சிப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததையடுத்து பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று அந்த இடத்திற்குச் சென்று அவரைத் தடுக்க முற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அவர் பொலிஸ் அதிகாரிகளைத் தாக்கியதாகவும் அவர்களிடமிருந்து தப்பி ஓடி தற்கொலை செய்து கொண்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்த வெளிநாட்டுப் பிரஜை, தான் தங்கியிருந்த குடியிருப்பின் சொத்துக்களை சேதப்படுத்தியுள்ளதாகவும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரயில் ஒன்லைன் ஆசன முன்பதிவு மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி

இணைத்தளம் மூலம் ரயில் ஆசனம் முன்பதிவு செய்யும் போது தேசிய அடையாள அட்டை எண் அல்லது கடவுச்சீட்டு எண்ணை உள்ளிடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆசனம் முன்பதிவு செய்வதில் அசௌகரியம் மற்றும் முறைகேடுகளை தடுக்கும் வகையில் இந்த முறை பின்பற்றப்படுவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. எல்ல ஒடிசி போன்ற ரயில்களில் ஆசனங்களை முன்பதிவு செய்து அதிக விலைக்கு விற்கும் சம்பவங்கள் நடந்துள்ளன. இவ்வாறான மோசடிகளை தடுப்பதற்காகவே இந்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# நடைபாதையில் இருசக்கரங்களின் ஆக்கிரமிப்பு




பாதசாரிகளுக்கென அமைக்கப்பட்டுள்ள நடைபாதைகளில் மோட்டார் சைக்கிள்கள் பயணம் செய்வது இன்று அன்றாட காட்சியாகியுள்ளது. இதனால் அநேகமான சந்தர்ப்பங்களில் விபத்துக்களும் நடக்கின்றன. இது குறித்து போக்குவரத்து பொலிஸாரும் கவனத்தில் கொள்வதில்லை என பாதசாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# மருந்து கேட்டு வீதியில் இறங்கியதற்காக பயங்கரவாத பொலிஸார் விசாரணை

(பார்த்திபன்)

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டில் ஏற்பட்டிருந்த மருந்துப் பற்றாக்குறைக்குத் தீர்வு காணுமாறு கோரி போராட்டங்களை முன்னெடுத்த கிழக்கு மாகாண மனித உரிமை செயற்பாட்டாளர் ஒருவரிடம் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினர் (CTID) இந்த வருடத்தில் இரண்டு தடவைகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். திருகோணமலை நாராயணபுரத்தைச் சேர்ந்த அறுபது வயதுடைய நவரத்தினராசா அஞ்சலி தேவியிடம் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் திருகோணமலைப் பிரிவினர் டிசம்பர் 4ஆம் திகதி காலை 10:00 மணி முதல் 12:30 மணி வரை விசாரணை நடத்தியதாகவும் ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட காரணத்தைக் கூறாத அழைப்பாணைக்கு அமைய, பயங்கரவாதத் தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் திருகோணமலைப் பிரிவிற்குச் சென்ற அவரிடம், நாட்டில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்ட 2022ஆம் ஆண்டு, திருகோணமலையில் அரசாங்கத்திற்கு எதிராகப் போராட்டம் நடத்தியமை தொடர்பாக வாக்குமூலத்தை பதிவு செய்ய அழைக்கப்பட்டதாக அங்கிருந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரணில் விக்ரமசிங்க ஆட்சியிலிருந்தபோது, 2024 பெப்ரவரி 7ஆம் திகதியும் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினர் அவரிடம் வாக்குமூலத்தைப் பதிவு செய்திருந்ததாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான போராட்டத்தை முன்னெடுப்பதற்கான காரணம் குறித்து, நவரத்தினராசா அஞ்சலிதேவிடம் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் வினவியபோது, விவசாயிகள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு கோரி போராட்டங்களை முன்னெடுப்பது போல, ஏனைய மக்களும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு கோரி போராட்டங்களை முன்னெடுப்பது போல, மருந்து பற்றாக்குறையை எதிர்கொள்ளும் மக்களுக்காக தானும் போராட்டம் நடத்தியதாக அஞ்சலிதேவி குறிப்பிட்டுள்ளார்.

அஞ்சலிதேவியின் கடவுச்சீட்டு இலக்கம் மற்றும் அவரது தனிப்பட்ட விபரங்களை வைத்துள்ள அதிகாரிகள், அவர் சுவிற்சர்லாந்து உள்ளிட்ட வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பிலும் அவரிடம் விசாரணை நடத்தியுள்ளனர். விசாரணைக்காக பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் திருகோணமலை பிரிவில் டிசம்பர் 4ஆம் திகதி முன்னிலையாகுமாறு, டிசம்பர் 2ஆம் திகதி, நிலைய பொறுப்பதிகாரியினால் கையொப்பமிடப்பட்டு அவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட பொலிஸ் படிவம் 256 சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டமை குறித்தும் அவரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

தனக்கு விடுக்கப்பட்ட அழைப்பாணை தொடர்பான சட்ட ஆலோசனையைப் பெறுவதற்காக தனது சட்டத்தரணிக்கு மாத்திரமே அதனை தான் அனுப்பியதாகத் தெரிவித்துள்ள அஞ்சலிதேவி, அது எவ்வாறு சமூக ஊடகங்களுக்குப் பகிரப்பட்டது என்பது தொடர்பில் தனக்குத் தெரியாது எனவும் அதிகாரிகளிடம் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பான மேலதிக வாக்குமூலத்தை வழங்குவதற்காக எதிர்வரும் நாட்களில் அவர் மீண்டும் அழைக்கப்படலாம் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனமொன்றின் முன்னாள் செயற்பாட்டாளரான நவரத்தினராசா அஞ்சலிதேவி பிரதேசத்தில் பெண்களின் உரிமைகளுக்காகச் செயற்பட்டு வருவதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.



லீசிங் கட்டணம் செலுத்தப்படாது நிலுவையிலுள்ள வாகனங்களைப் பலவந்தமாக பறிமுதல் செய்து லீசிங் நிறுவனங்களுக்கு வழங்குகின்ற “சீஸர்“களின் வேலையை பொலிஸார் மேற்கொள்வதாகவும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து லீசிங் மற்றும் தவணைக் கடன் செலுத்துவோர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று கடந்த வெள்ளியன்று பொலிஸ் தலைமையகத்திற்கு முன்னால் நடைபெற்றதைப் படத்தில் காணலாம்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்த்திகை மாதம் 23ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை

**மேஷம்** விரும்பிய ஆடை, ஆபரணங்கள், பிடித்தமான நல்ல உணவு, ஆகியவை கிடைக்கும்.

**ரிஷபம்** வெளியூர் பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம்.

**மிதுனம்** தேவை இல்லாத காரியங்களுக்காக அலையும் நிலை ஏற்படும்.

**கடகம்** எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிட்டும்

**சிம்மம்** புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகளில் வெற்றி பெருவீர்கள்.

**கன்னி** பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும்.

**துலாம்** சுபகாரியச் செலவுகள் ஏற்பட்டு வீட்டில் மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுக்கும்.

**விருட்சிகம்** எல்லா வகையிலும் சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம்.

**தனுசு** கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றி அனைவரின் பாராட்டினையும் பெற்றுத் தரும்.

**மகரம்** எதிர்பாராத விதமாகப் பணவரவு அதிகரிப்பதால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும், தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

**கும்பம்** உங்கள் திறமைக்கேற்ற, சக்தி மிக்க, அதிகாரமிக்க பதவிகள் உங்களைத் தேடிவரும்.

**மீனம்** வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தனலாபம் அதிகரிக்கும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** காலை 07:52 பிறகு வரை சப்தமி பின்பு அஷ்டமி திதி.
**நட்சத்திரம்:** இன்று பிற்பகல் 02: 37 சதயம் பின்பு பூரட்டாதி.
**யோகம்:** சித்த.
**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** பூசம், ஆயில்யம்.
**சூலம்:** மேற்கு.
**இராகு காலம்:** மதியம் 04:30 முதல் 06:00 வரை,
**குளிகை:** மதியம் 03:00 முதல் 04:30 வரை,
**எமகண்டம்:** மதியம் 12:00 முதல் 01 :30 வரை,

# டெங்கு: கியூபாவிடம் நிபுணத்துவம் பெற அரசு தீர்மானம்



நாட்டில் அதிகரித்து வரும் டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கு கியூபா சுகாதார அதிகாரிகளிடம் இருந்து சிறப்பு அறிவைப் பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கைக்கான கியூபா தூதுவர் மற்றும் இலங்கை சுகாதார அதிகாரிகளுக்கு இடையில் சுகாதார அமைச்சில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் பின்னர் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின் போது டெங்கு நோயைக் கட்டுப்படுத்த கியூபா அரசாங்கம் மேற்கொண்ட வெற்றிகரமான நடவடிக்கைகளை வலியுறுத்திய தூதுவர், இலங்கையில் டெங்குவை ஒழிப்பதற்கு கியூபா அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்கும் எனவும் உறுதியளித்தார்.

இலங்கையில் பொது சுகாதார திட்டங்களை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான நிபுணத்துவம் மற்றும் அறிவை வழங்குவதே கியூபா அரசாங்கத்தின் நோக்கம் என இதன்போது தெரிவிக்கப்பட்டது. கலந்துரையாடலின் போது நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும் பல முறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

ஒருவனின் நோக்கில்...
No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# சிறப்புரிமைகளும் நாடாளுமன்ற உரைகளும்!

இலங்கை நாடாளுமன்ற செயற்பாட்டுக்கு வரலாறு உண்டு. அந்த வரலாறு பிரித்தானிய ஆட்சியில் இருந்து 1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்து பின்னர் 1972 இல் இறைமையும் தன்னாட்சியும் உள்ள நாடாக மாறிய பின்னரும் துயரங்களோடு தொடர்கின்றது. இன முரண்பாட்டோடு தொடர்கின்ற வரலாறு அது.

பிரித்தானியர் ஆட்சி காலத்திலிருந்த சட்டவாக்க கழகம், அரசுக் கழகம் என்ற முறைகள் மாற்றப்பட்டு 1948 இல் முதன் முறையாக நாடாளுமன்ற முறை அறிமுகம் செய்யப்பட்டது.

பிரித்தானிய நாடாளுமன்ற பண்புகளைக் கொண்டதாகவே இலங்கை நாடாளுமன்றம் அமைந்துள்ளது. 1972 இல் இலங்கை இறைமையும்தன்னாட்சியும்கொண்ட நாடாகபிரித்தானியாவிடமிருந்து அங்கீகாரம் பெற்ற பின்னர் உருவாக்கப்பட்ட முதலாவது அரசியல் யாப்பில் நாடாளுமன்றம் தேசிய அரசுப் பேரவை என்ற பெயரில் இயங்கியது.

1978 இல் உருவான இரண்டாவது அரசியல் யாப்பில் நாடாளுமன்றம் என்ற பெயர் மீண்டும் பயன்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், இலங்கையின் நாடாளுமன்ற செயற்பாட்டு முறைமைகள் பிரித்தானிய விதிமுறைகளை கொண்டமைந்தது. குறிப்பாக, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நாடாளுமன்ற செயற்பாடுகளுக்கும் உரிய நிலையியற் கட்டளைச்சட்டம் பிரித்தானிய நாடாளுமன்ற அமைப்பு விதிகளுக்கு ஒப்பானது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமை இதில் மிக முக்கியமானது. இந்த சிறப்புரிமையின் பிரகாரம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரைகள் செயற்பாடுகள் அமைந்திருக்கும். ஒரு உறுப்பினர் தன் உரையில் குறிப்பிடுகின்ற பல விடயங்களை எவரும் கேள்விக்குட்படுத்த முடியாது. ஆனால், ஏனைய உறுப்பினர்கள் குறித்த உறுப்பினர் உரையாற்றிக் கொண்டிருக்கும் போது அந்த உரை தொடர்பான மேலதிக கேள்விகளை அல்லது விளக்கங்களை அல்லது மறுப்புகளை வழங்க முடியும்.

நாடாளுமன்றத்திற்கு வெளியில் ஒரு உறுப்பினரின் உரைக்கு எதிராக எந்தவொரு சட்டநடவடிக்கையும் எடுக்க முடியாது. ஏனெனில், அது உறுப்பினர்களின் சிறப்புரிமைக்குரிய அம்சமாகும். இதன் பிரகாரம், ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படும் தமிழ் பிரதிநிதிகள் பலர் ஆழமான சிந்திக்க கூடிய உரைகளை நிகழ்த்தியுள்ளனர்.

அதேநேரம், வேறு சில உறுப்பினர்கள் அர்த்தமற்ற உரைகளையும் நிகழ்த்தியிருக்கின்றனர். தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும் ஆயுதப் போராட்டங்கள் பற்றியும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பற்றியும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசியிருக்கின்றனர். விடுதலைப் புலிகளின் கொடி ஐக்கிய நாடுகள் சபையில் தமிழர்களின் தேசியக் கொடியாக பயன்பாட்டுக்கு வரும் என்று சிவாஜிலிங்கம் நாடாளுமன்றத்தில் அடித்துக் கூறியிருந்தார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் நிகழ்த்துகின்ற மாவீரர் நாள் உரைகளை அமரர் சம்பந்தன் நாடாளுமன்றத்தில் ஆங்கில மொழியில் தனது உரையின் போது மேற்கோள் காட்டியிருந்தார். மாவீரர் நாள் உரைகளின் சில குறிப்புகளை சபையில் சமர்ப்பித்திருந்தார்.

ஆகவே, தமிழ் உறுப்பினர்கள் பலர் ஈழ விடுதலை போராட்டம் தொடர்பாக ஆக்ரோஷமாகவும் அறிவு பூர்வமாகவும் பேசியிருக்கின்றனர். சில உரைகள் நிலையியல் கட்டளைச்சட்டங்களின் பிரகாரம் சபாநாயகருக்கு முறையிட்டு ஹன்சார்ட் பதிவுப் புத்தகத்தில் இருந்து நீக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. உதாரணமாக வட மாகாணத்திலுள்ள 40,000 இராணுவத்தினரையும் சடலங்களாக சவப்பெட்டிக்குள் வைத்து அனுப்புவோம் என்று செல்வராஜா கஜேந்திரன் 2004 ஆம் ஆண்டு தனது முதலாவது உரையில் ஆவேசமாக கூறியிருந்தார். இதற்கு எதிர்ப்பு வெளியிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபாநாயகரிடம் முறையிட்டு அந்த வாசகத்தை ஹன்சார்ட் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கம் செய்தனர். அந்த வாசகங்கள் எந்தவொரு ஊடகங்களிலும் வெளிவரக்கூடாது எனவும் சபாநாயகர் உத்தரவிட்டார். ஆனால், அந்த உரைக்கு எதிராக கஜேந்திரன் மீது எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

2007ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வின் போது கஜேந்திரன் சபா மண்டபத்திற்கு முன்னால் தீபம் ஏற்றியிருந்தார். ஆனால், அதற்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இருந்தாலும் அதுவொரு பெரும் விவகாரமாக உறுப்பினர்களாலும், சிங்கள நாளிதழ்களிலும் விமர்சிக்கப்பட்டன. ஆகவே, சிறப்புரிமையைப் பயன்படுத்தி ஆவேசமாகவும் உணர்ச்சிகரமாகவும் நிகழ்த்துகின்ற உரைகள், செயற்பாடுகள் எந்தவித பயன்பாடுகளையும் தரப்போவதில்லை.

ஆனால், சில தமிழ் உறுப்பினர்களுடைய அறிவுபூர்வமான மற்றும் ஆதாரங்களோடு நிகழ்த்தப்பட்ட பல உரைகள் தமிழ்த் தேசியப் போராட்ட வரலாறுகளுக்கு ஆதாரமாக சான்று பகர்கின்றன.

ஆகவே, சர்வதேச அரசியலையும் சர்வதேச சட்டங்களையும் நுட்பமாக ஆராய்ந்து நிகழ்த்துகின்ற உரைகளும் நியாயமான ஆதாரங்களோடு எடுத்துக்கூறுகின்ற நாடாளுமன்ற உரைகளுமே இன்றைய அவசியத் தேவையாகும். இதைவிடுத்து, அர்த்தமற்ற உணர்ச்சி வெளிப்பாடுகளும் பயனற்ற ஆவேச பேச்சுக்களும் தமிழ்த் தேசிய அரசியலுக்கு அவசியமற்றவை. தமிழர்களின் சுயமரியாதையும், சுய நிர்ணய உரிமையும் நியாயப்படுத்த வேண்டுமானால் சமகால புவியியல் அரசியல் நிலைமைகள் நன்கு ஆராயப்பட வேண்டும்.

மாறாக, கட்சி அரசியல் பிரமுகர் செயற்பாடுகள் மற்றும் பிரபல்யத்துக்கான வியூகங்களை மாத்திரம் வகுத்து நாடாளுமன்றத்துக்குள் உரையாற்றுவதும் செயற்படுவதும் தமிழ் நாகரிகத்திற்கு பெரும் அவமானம். மக்கள் நம்பிக்கையோடும் உணர்வோடும் வழங்கிய வாக்குகளை தங்கள் பிரபல்ய சித்து விளையாட்டுக்களுக்காக பயன்படுத்தும் உறுப்பினர்களை மக்கள் பகிரங்கமாக கண்டிக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய சாயம் பூசிக்கொண்டும் அதேநேரம் வேண்டுமென்றே தமிழ்த் தேசிய கோட்பாட்டை மலினப்படுத்தும் வெளிச் சக்திகளின் வியூகத்துக்கு அமைவாகவும் செயற்படும் உறுப்பினர்களையும் மக்கள் அடையாளம் காண வேண்டும்.

அதேவேளை, இலங்கையின் ஒற்றையாட்சி நாடாளுமன்றம் என்பது தமிழர்களின் அரசியல் விடுதலையைப் பெறக்கூடிய இடம் அல்ல என்பதையும் உணர வேண்டும். நாடாளுமன்றம் ஒரு பேச்சு மேடை. ஆகவே, இலங்கை நாடாளுமன்றத்துக்கு வெளியில் நின்று தீர்வு காண வேண்டும் என்ற தமிழ்த் தேசிய கோட்பாட்டுக்கு வலுச் சேர்க்கும் கட்டமைப்புகள் தான் இன்றைய தேவையாகும்.

# கெச்சிமலை தர்ஹாவில் புனித புஹாரி தமாம் மஜ்லிஸ்



**பேருவளை பீ.எம் முக்தார்**

கி.பி 11 ஆம் நூற்றாண்டில் இஸ்லாமியர்கள் இலங்கையில் குடியேறி வாழ்ந்தார்கள். இன்றும் பேருவளை கடற்பாங்காவுள்ள கெச்சிமலைப் பள்ளிவாசல் இலங்கையில் முஸ்லிம்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வருகிறார்கள் என்பதற்கு சான்றாகவுள்ளது என்றும் பட்டுப் பாதையூடாக பிரயாணம் செய்த "ஆம்கோவேல்ட்" நிறுவனத்தின் பிரபல பத்திரிகையாளர்களான டேவிட், ஆம்டிட் குழுவினரின் ஆய்வறிக்கை ஒன்று குறிப்பிடுகிறது.

இறைநேசச் செல்வர்கள், நல்லோர்கள் வழியில் மக்களுக்கு அறிவுரை வழங்கி தாங்களும் வாழ்ந்து காட்டி மனித சமுதாய மறுமலர்ச்சிக்காக உழைத்தார்கள். இத்தகைய ஸூபியாக்கள் பலரும் இலங்கைக்கு வருகை தந்த பாவா ஆதம் (அலை) என்று அழைக்கப்படும் (Adam's Peak) புனித தளத்தை தரிசித்து சென்ற வரலாறு உள்ளது.

கெச்சிமலையில் அடங்கியுள்ள செய்னு அஷ்ரப் வழியுள்ளாஹ் அவர்கள் இதே நோக்கத்தோடு தான் கப்பல் மூலமாக இலங்கை வந்தார்கள். கடலின் அகோரமும், காற்றின் யோகமும் கப்பலை திசை திருப்பி மெச்சுப் புகழ் கெச்சிமலை அண்மித்தே பேருவளையில் இறங்கச் செய்தது. அல்லாஹ்வின் நாட்டம் இதுவாக இருக்கலாம் என உணர்ந்த அல்லாஹுவின் அன்பர் அஷ்ரப் வழியுள்ளாஹ் தங்கள் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டார்கள். அங்கிருந்து இறைபணியைத் தொடர்ந்தார்கள். ஆத்மீக மலர்ச்சி கண்டார்கள்.

1882 ஜோஜ் அரசின் (the 6th king Gorge) இன் ஆளுநராக இலங்கையில் கடமையாற்றிய சேர் ஆதர் ஹென்றி கோடன் (Sir Athar u;enry Gorden) அவர்கள் காலிக்கு தன்னுடைய உத்தியோக கடமைக்காகச் செல்லும் வழியில் அவர் பயணம் செய்த குதிரை, வழி தவறி பேருவளை சுங்கப் பாதை (Customs Road) வழியில் சென்று ஓர் இடத்தில் தறித்து நின்றது. அங்கு இருந்த ஒரு பழைய புதைகுழியின் அருகில் நின்று பணிந்து வணங்கியது.

இந்த ஆச்சரியமான சம்பவம் ஆளுநரை சிந்திக்கச் செய்தது குதிரை. அந்த இடத்தை விட்டும் அசைய மறுத்தது. அங்குள்ள மக்களிடம் ஆளுநர் விசாரித்ததில் , இந்த இடம் "கெச்சிமலை" என்றும் அடங்கப்பட்டிருக்கும் அற்புதமான வழியுள்ளாஹ் பற்றியும் கூறப்பட்டது. உடனே ஆளுநர் தன்னுடைய காரியதரிசியிடம், அரசின் சார்பில் இந்த இடத்தை அன்பளிப்பாக வழங்கும்படி உத்தரவிட்டார்கள்.

இதேநேரம் இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பத்திரத்திற்கான ஆவணம் காலம்சென்ற சங்கைக்குறிய அஷ் ஷெய்ஹ் ஹம்ஸா பின் முஹம்மத் அப்துல்லாஹ் ஆலிம் அலவியதுல் காதிரி அவர்கள் வசம் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

1989 ஆம் ஆண்டு கெச்சிமலை தர்காவில் அல் குல்லியதுல் அஷ்ரபிய்யா அரபுக் கலாபீடம் அமைக்கப்பட்டது. அத்துடன் களுத்துறையில் மின்னதுல் ஹஸனிய்யா அரபுக் கல்லூரியும் ஆரம்பிக்கப்பட்டது.

சேஹ் அப்துல்லாஹ் ஆலிம் அவர்கள் ஒருநாள் உபதேசம் தலைசிறந்த அரபுக் கல்லூரி ஒன்றை உருவாக்கியது. கொடைவள்ளலான எம்.டி.எச் அப்துல் கபூர் இம்மஜ்லிஸில் கேட்ட உபதேசத்தால் மஹரகமையில் கபூரியா அரபுக் கல்லூரியை நிர்மாணித்தார்கள்.

07ஆம் திகதி இரவு ராதிப், விஷேட மார்க்கச் சொற்பொழிவினையடுத்து தர்ஹாவில் அடங்கப்பட்டுள்ள அஷ் ஷெய்க் அஷ்ரப் வலியுல்லாஹ் ஸிமயாரத் நிகழ்ச்சியும் இடம்பெறும். 08 ஆம் திகதி அதிகாலை அல் குர்ஆன் தமாம் வைபவம் நடைபெறும்.

# அர்த்தமுள்ள நத்தார் மரம்

**து.சிந்துஜா**



கிறிஸ்மஸ் பண்டிகை அண்மித்தாலே கிறிஸ்மஸ் மரம் முக்கிய இடத்தை வகிக்கும்.

அப்படிப்பட்ட மரத்துக்கென்று ஒரு சிறப்பு தினம் உள்ளது.

ஆம், உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 08 ஆம் திகதி சர்வதேச நத்தார் மர தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

கிறிஸ்மஸ் மரமானது, கிறிஸ்மஸ்க்கு சில நாட்களுக்கு முன்பு வீட்டுக்குள்ளேயோ அல்லது வெளியிலோ வைக்கப்பட்டு, வண்ண விளக்குகளாலும் அழகூட்டப் பொருட்களாலும் அலங்கரிக்கப்படும்.

குறிப்பாக மரத்தின் உச்சியில் ஒரு முக்கோண அல்லது நட்சத்திர வடிவமொன்று காணப்படும்.

### கிறிஸ்மஸ் மரத்தின் தோற்றம்

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பச்சை இலைகளையும் கொம்புகளையும் வீட்டின் வாசல்களில் தொங்கவிட்டால் தீய ஆவிகள் நம்மை நெருங்காது எனும் ஆழமான நம்பிக்கை பிரித்தானியாவில் இருந்தது.

அதன்படி, கிறிஸ்மஸ் மரத்தின் பிறப்பிடம் என்னும் சிறப்பை ஜேர்மனி நாடு பெருகிறது.

சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்பு புனித போனிபேஸ் என்பவர் ஜெர்மனியில் கிறிஸ்தவ மத போதனைகளைச் செய்து வந்தார்.

அப்போது அங்குள்ள மக்கள் "ஓக்" எனும் மரத்தை வழிபடுவதைக் கண்டார்.

அதனைக் கண்டு கோபமடைந்த அவர், அம் மரத்தை வெட்டி வீழ்த்தினார். அதனடியிலிருந்து உடனடியாக ஒரு கிறிஸ்மஸ் மரம் முளைத்ததாக கூறப்படுகிறது. இதுவே பலரால் கிறிஸ்மஸ் மரம் குறித்து கூறப்பட்டு வரும் கதையாக உள்ளது.

எனவே இம் மரம் முளைத்த கதையையும் இயேசுகிறிஸ்து பிறந்த கதையையும் தொடர்புபடுத்தி தனது போதனையை அவர் தீவிரப்படுத்தினார்.

ஆனாலும் அக் காலத்தில் இம் மரம் அலங்காரப் பொருளாகவோ அல்லது கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டங்களிலோ பயன்படுத்தப்படவில்லை.

ஜேர்மனியர்களே முதன் முதலில் கிறிஸ்மஸ் மரத்தை வீடுகளுக்குள் அனுமதித்தார்கள்.

மேலும் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் கிறிஸ்மஸ் மரங்கள் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடப்பட்டு விழாக்களில் பயன்படுத்தப்பட்டன.

சரியாக ஆயிரத்து ஐநூறாம் ஆண்டில் மார்ட்டின் லூதர் கிங் கிறிஸ்மஸ் காலத்தில் பனி படர்ந்த வீதி வழியாக நடந்து சென்றார்.

அப்போது சிறு சிறு பச்சை மரங்களின் மீது படர்ந்திருந்த பனி வெளிச்சத்தில் அழகுடன் ஒளிர்வதைக் கண்டார். அப்போது உடனே ஒரு "ஃபிர்" மரத்தை எடுத்து அதனை மெழுகுவர்த்திகளால் அலங்கரித்து அதனை கிறிஸ்து பிறப்பு விழாவில் பயன்படுத்தினார்.

### கிறிஸ்மஸ் மரம் விழாக்களில் இவ்வாறுதான் நுழைந்துள்ளதாக கூறப்படுகிறது.

அதேபோல் 1521 ஆம் ஆண்டு பிரான்ஸ் இளவரசி ஹெலீனா அவரது திருமணத்தின் பின்னர் கிறிஸ்மஸ் மரம் ஒன்றை பாரிஸ் நகருக்கு கொண்டு வந்து விழா கொண்டாடியதே கிறிஸ்மஸ் மரம் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களில் நுழைந்த முதல் நிகழ்வு என வரலாறு கூறுகிறது.

அதன்பின்னர் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ஜேர்மனி போன்ற நாடுகளில் கிறிஸ்மஸ் மர அலங்காரம் பரவியது.

அதேபோல் இங்கிலாந்து ராணி விக்டோரியா ஜேர்மனி நாட்டு இளவரசர் அல்பர்ட்டுடனான திருமணத்தின் பின்னர் 1841 ஆம் இங்கிலாந்து திரும்பியபோது, அரசர் அல்பர்ட் அலங்காரம் செய்த மரத்தை இங்கிலாந்திலுள்ள விண்ட்ஸர் மாளிகையில் வைத்து கொண்டாடினார்.

அந்த மரம் சிறு சிறு இசைக்கருவிகள், பழங்கள், மெழுகுவர்த்திகள், நகைகளால் அலங்கரிக்கப்பட்டது.

எனவே இதுதான் கிறிஸ்மஸ் மரத்தின் இங்கிலாந்து பிரவேசம்.

**அந்த மரம் சிறு சிறு இசைக்கருவிகள், பழங்கள், மெழுகுவர்த்திகள், நகைகளால் அலங்கரிக்கப்பட்டது**

அதுமட்டுமின்றி கிறிஸ்மஸ் மரத்தின் கிளைகள் சிலுவையின் அடையாளமாகவும் அதன் உச்சிப் பகுதி முக்கோண வடிவம் அதாவது, தந்தை, மகன், தூய ஆவி என்ற அர்த்தத்தைக் கொண்டிருப்பதாகவும் இருந்தது.

1830 ஆம் ஆண்டு அமெரிக்காவில் கிறிஸ்மஸ் மரமொன்று மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டது. அதன்பின் இருபது வருடங்கள் கழித்து ஒரு ஆலயத்தின் வெளியில் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்துக்காக வைக்கப்பட்டது.

இந் நிகழ்வு கிறிஸ்மஸ் மரம் அமெரிக்காவில் பரவ காரணமாயிற்று.

இயற்கை மரங்களைப் போல காலப்போக்கில் செயற்கை நத்தார் மரங்களும் கவனம் பெற்றன.

செயற்கை மரங்கள் தயாரிப்பில் கொரியா, தாய்வான், ஹொங்கொங் போன்ற நாடுகள் முன்னணியில் உள்ளன.

கிறிஸ்தவர்களிடையே நத்தார் மரங்கள் புனிதமானதாக பார்க்கப்படுகிறது.

இவ்வாறு நத்தார் மரம் மேலைத்தேய நாடுகளில் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களில் முக்கியத்தும் பெற்று அவ்வாறே உலகின் அனைத்து நாடுகளுக்கும் பரவிற்று.

எதுவித மத பேதமின்றி அனைவரும் நத்தார் மரத்தை வீடுகளில் வைத்து கொண்டாட ஆரம்பித்து விட்டனர்.

சிறிய அளவிலிருந்து ஆகப் பெரிய நத்தார் மரங்களும் உண்டு, அதிலும் வெள்ளை மற்றும் பச்சை வண்ணங்களில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு மிகவும் சிறப்பும் முக்கியத்துவமும் வாய்ந்த நத்தார் மரத்தின் புனிதத்தை வெளிப்படுத்தும் விதமாக இன்று சர்வதேச நத்தார் மர தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.



# எகிறிச் செல்லும் வாழ்க்கைச் செலவு



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

**சமீபத்திய மழையுடனான சீரற்ற காலநிலையினால் இலங்கை மக்கள் கடந்த சில தினங்களாக எதிர்கொண்டிருந்த அவலம் மெல்ல மெல்ல நீங்கி வருகிறது. மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள்.**

இயற்கை இடரினால் உண்டான மிக அழிவுகரமான நிலை தற்போது படிப்படியாக நீங்கி வருகின்றபோதும் நாளாந்த வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பொருட்களின் தாங்கொணா விலையேற்றம், வியாபாரிகளின் கொள்ளை இலாபம் அடிக்கும் நடவடிக்கைகள் என்பனவற்றினால் மக்கள் சொல்லொணா நெருக்கடியை எதிர்கொண்டுள்ளார்கள்.

இதனால் மக்கள், தாங்கள் வாழ முடியாது தடுமாறிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கின்றார்கள். தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

தற்போது வாழ்க்கைச் செலவு எகிறிக் கொண்டு போகின்றது. மக்கள் கதிகலங்கிப் போய்நிற்கின்றார்கள்.

இந்த சந்தர்ப்பத்தை தக்க வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ளும் சில வியாபாரிகள் பொருட்களின் விலையைத் தம் இஷ்டப்படி அதிகரித்து கொள்ளை இலாபம் அடிக்கின்றார்கள். இதனால் மக்களுக்கு பாரிய அநியாயம் இடம்பெறுகின்றது.

மக்களின் பசிப்பிணியைப் போக்க ஒரு வேளைச் சோறு முக்கியம். ஆனால், தற்போது சோறு சமைப்பதற்கான அரிசிக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது. அரிசி விலை எகிறிக் கொண்டு போகிறது. அரிசி விலையேற்றத்தால் அரிசிக் கடைகளை வைத்திருந்த பல சிறிய அரிசிக் கடை வியாபாரிகள் கடைகளை மூடிவிட்டு முடங்கிக் கிடக்கிறார்கள். அரிசி விலையேற்றத்தால் சந்தையில் பச்சை அரிசியைக் கூட வாங்க முடியாத நிலையில் தட்டுப்பாடு நிலவுகிறது.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், அரிசிக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் என அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீண்டகால வேலைத்திட்டத்தை தயாரிப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என அதன் தலைவர் யு. கே. சேமசிங்க குறிப்பிட்டு ள்ளார்.

"இந்தப் பிரச்சினைக்கு நீண்ட காலத் தீர்வைக் காண வேண்டும், இல்லையென்றால், மீண்டும் இந்த நெருக்கடிக்கு முகம்கொடுக்க வேண்டியிருக்கும். இந்த நெருக்கடியை தீர்ப்பதற்கு அரிசி சந்தைப்படுத்தல் வாரியம் ஒரு முறையான திட்டத்தை தயாரிக்க வேண்டும், குறுகிய காலத் தீர்வாக அரசாங்கம் விரைவில் வெளி நாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய வேண்டும். இல்லையென்றால் சந்தையில் அரிசிக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும்" என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மரக்கறிகளின் விலைகளும் கணிசமான அளவு அதிகரித்துள்ளன. இதனால் மக்கள் மரக்கறிகளை வாங்கத் தயங்குகிறார்கள். மரக்கறிகளை மக்கள் நெருங்காததால் அவை சில தினங்களில் அழுகி விடுகின்றன. அவற்றை கடைக்காரர்கள் குப்பைகளில் கொட்டுகிறார்கள். இது மரக்கறிகள் அதிகளவில் உற்பத்தியாகும் நுவரெலியாவில் தொடங்கி விற்பனை செய்யப்படும் தொலைதூர இடம்வரை நடக்கிறது. ஒரு கிலோ பச்சை மிளகாய் சுமார் ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்படுகிறது.

சந்தையில் ஏதேனும் ஒரு பொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டால், மாற்றுப் பொருட்களை கொள்வனவு செய்வது அவசியம் என வாடிக்கையாளர் விவகார மற்றும் தகவல் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்துள்ளார்.

சில காரணங்களால் சந்தையில் தட்டுப்பாடு ஏற்படும் பொருட்களை தொடர்ந்து தேடுவதாலும் அவ்வாறான பொருட்களை வீட்டில் சேமித்து வைப்பதாலும் குறிப்பிட்ட பொருள்களுக்கு சந்தையில் அவசியமற்ற தேவை அதிகரிக்கின்றது.

இதனால் அநாவசிய விலை அதிகரிப்பும் ஏற்படுகிறது.

மேலும், சந்தையில் காணப்படும் அரிதான பொருட்களுக்குப் பதிலாக வேறு மாற்றுப் பொருட்களில் கவனம் செலுத்துவது முக்கியம்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் வாடிக்கையாளர்களை மாற்றுப் பொருட்களுக்கு வழிநடத்துமாறு அறிவுறுத்துவது உத்தமம் என பண்டார சுட்டிகாட்டியுள்ளார்.

கடந்த நாட்களாக எரிவாயு, எரிபொருள், பால் மா உள்ளிட்ட பல்வேறு பொருட்களுக்கு சந்தையில் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் பொருட்களுக்கு அவசியமற்ற தேவை காணப்படுகின்றது. மக்கள் மாற்றுப் பொருட்களை உட்கொள்ளப் பழகுவதன் மூலம் பணமும் மீதமாகும் என வாடிக்கையாளர் விவகார மற்றும் தகவல் பணிப்பாளர் அசேல பண்டார மேலும் குறிப்பிட்டுள்ளார்.



இலங்கையில் பல நகர்ப்புறங்களில் தேங்காய் ஒன்றின் விலை 200 ரூபா வரை உயர்ந்துள்ளது பாவனையாளர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை கிராமப்புறங்களிலும் தேங்காய் ஒன்று 160 ரூபாய்க்கு மேல் விற்கப்படுகிறது. அதேவேளை கொழும்பின் சில பிரதேசங்களில் தேங்காய்ப் பாதி ஒன்று 100-120 ரூபாவிற்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

இலங்கை மக்களின் அன்றாட அவசிய உணவுப்பொருட்களில் தேங்காயும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது

இதேவேளை, தேங்காய்த் தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் வகையில் ஒரு வாடிக்கையாளருக்கு 03 தேங்காய்கள் மற்றும் 05 கிலோ அரிசியை மாத்திரமே கொள்வனவு செய்ய அனுமதி வழங்கப்படும் என லங்கா சதொச தலைவர் டொக்டர் சமித்த பெரேரா தெரிவித்துள்ளார்.

கட்டுப்பாட்டு விலை என்பது நாட்டில் எப்பாகத்திலும் இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது. முன்னரெல்லாம் கட்டுப்பாட்டு விலைப்பட்டியல் என்றொரு பலகை கடைகளின் முன்னால் நுகரவோருக்குத் தெரியும்படியாகத் தொங்கவிடப்பட்டிருக்கும். ஆனால், இப்போதெல்லாம் அப்படியான ஒரு விலைப்பட்டியலை எங்குமே காண முடிவதில்லை.

ஆளுக்கொரு விலை, நாளுக்கொரு விலை, இடத்துக்கொரு விலை என்றாகிவிட்டிருக்கிறது நிலைமை. கோத்தபாயவின் ஆட்சியிலேதான் இந்த இடத்துக்கொரு விலை என்ற நிலை உருவாக்கப்பட்டது. தற்போது 12.5 கிலோ சமையல் எரிவாயுவின் விலை கொழும்பில் 3600 ரூபாவாக இருக்க, மட்டக்களப்பில் அதன் விலை 4000 ரூபாய். இதனைக் கேட்பாரும் இல்லை பார்ப்பாரும் இல்லை என்றாகிவிட்டது.

விலையை மீறி கொள்ளை இலாபம் அடிக்கும் வர்த்தகர்களை அவதானித்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு நிருவாகம் முன்வரவேண்டும்.

மக்களின் சமகால கொருளாதாரக் கஷ்டங்களைக் கருத்திற் கொண்டு விலையை மேலும் அதிகரிக்க அரசு அனுமதிக்கக் கூடாது. கடந்த வாரம் எரிபொருள்களின் விலையைக் குறைத்த அரசு, ஏழைகளின் வாழ்வுக்கும் வாழ்வாதாரத்திற்கும் உதவிகரமாக இருக்கும் மண்ணெண்ணெயின் விலையை 5 ரூபாவால் அதிகரித்துள்ளது.

இது அநியாயம் என்றே தோன்றவில்லையா என ஏழை எளிய மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இது ஒரு புறமிருக்க காலநிலைச் சீர்கெட்டின் காரணமாக பெய்த கன மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ள நிலைமையில் பல போக்குவரத்து மார்க்கங்களில் நேரடியாகப் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

அதனால் போக்குவரத்துக்காக பல மாற்று வழிகள் பயன்படுத்தப்பட்டன. மாற்று வழிகளால் பயணிக்கும் தூரமும் நேரமும் ஒன்றாகத்தான் இருந்த போதிலும், இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட பல தனியார் பஸ் காரர்கள் பயணிகளிடம் கொள்ளை இலாபம் அடிப்பதில் ஈடுபட்டனர். சாதாரணமான பயணக் கட்டணத்திற்குப் பதிலாக இரு மடங்குக்கு மேலாகப் பணம் பெற்றதைக் காணக் கூடியதாக இருந்தது. சாதாரணமான 100 ரூபாய் பயணக் கட்டணத்துக்கு 250, 300 ஷரூபாய் வரையில் கட்டணம் அறவிட்டிருந்தார்கள். இந்த விடயத்தில்

## கொள்ளை இலாபம் அடிப்பதால் வேதனையில் துவளும் மக்கள்

பொதுப் போக்குவரத்து ஆணைக்குழு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று பொது மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இலங்கையர்கள் தற்போது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி, அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு, அதிகரித்த விலை, உணவுப் பஞ்சம் என இந்த ஒட்டு மொத்த நெருக்கடியும் செயற்கையானதா அல்லது இயற்கையானதா என்ற வாத விவாதங்களுக்கப்பால் மக்கள் விரக்தியின் விளிம்புக்கே சென்று கொண்டிருக்கின்றார்கள் என்பதுதான் உண்மை.

இலங்கை தற்போது மனிதாபிமான நெருக்கடியின் விளிம்பில் உள்ளது போலத் தோன்றுவதாக நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடியால் இலங்கையிலுள்ள 70 சதவீதம் குடும்பங்கள் தங்களது தினசரி உணவுத் தேவையை பூர்த்தி செய்வதற்கே சிரமப்படும் சூழ்நிலை நிலவி வருவதால், மக்களால் தாங்கள் முன்பு வாங்கி வந்த பொருட்களை இப்போது வாங்க முடியவில்லை.

எனவே, மக்கள் உணவு உண்பதையும், குறிப்பாக சத்தான உணவு உண்பதைக் குறைக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். ஊட்டச்சத்து குறைபாடு நாட்டின் மிகப் பெரிய பிரச்சினை என்ற நிலையை நோக்கி நகர்கிறது.

உங்களிடமுள்ள எதையாவது எங்களுக்கு இலவசமாக அல்லது கடனாகத் தருகிறீர்களா என்று கேட்குமளவுக்கு நெருக்கடி நிலை வந்துவிட்டது.

யாழ்ப்பாணத்தில் கிராம அலுவலரிடம் சென்று பசிக்கும் தன் குழந்தைகளுக்கும் தாய்க்கும் வயிற்றுக்கு சோற்றுப் பார்சல் கேட்கச் சென்றவரை பொலிஸில் பிடித்துக் கொடுத்து அடைத்து வைத்திருந்த சம்பவமும் இடம்பெற்றிருக்கிறது.

கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை – கற்கோவளம் பகுதியில் வெள்ளத்தால் இடம்பெயர்ந்து முகாமில் தங்கியிருந்த குடும்பத்தவர்கள் இருவர், தங்களது குழந்தைகளுக்கும் வீட்டிலுள்ளோருக்கும் பசிக்கு உணவு கேட்டு கிராம அலுவலரிடம் முரண்பட்டார்கள் அரச கடமைக்கு இடையூறாக இருந்தார்கள் என்ற அடிப்படையிலே பொலிஸில் முறைப்பாடளிக்கப்பட்டதன் காரணமாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

எனினும், புதனன்று (4ஆம் திகதி) அவர்களுக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்திலே பிணை வழங்கப்பட்டது.

கைக்குழந்தை பசியால் அழுத காரணத்தினாலே அந்தக் குழந்தைக்கும் வீட்டிலுள்ளோருக்கும் பசியைப் போக்குவதற்கு கிராம அலுவலரிடம் சென்று உணவு கேட்டபோது குழந்தையின் தந்தையையும் குழந்தையின் தாயின் சகோதரரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்கள்.

குழந்தையின் தாயினுடைய தந்தை சமீபத்திய வெள்ளத்திலே காணாமல் போயிருக்கிறார். இதுவரை அவர் மீட்கப்படவில்லை என்ற தகவலும் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டவர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. கிராம அலுவலரான பெண்ணின் கணவர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திலே கடமையாற்றுபவர் என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

இயற்கை இடரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து பசியால் வாடுவோரின் துயர் துடைக்க வேண்டிய அரச அலுவலர்கள் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவதை இனிமேலும் அனுமதிக்கக் கூடாது.

இந்த நிலைமையால் ஈவிரக்கம் உள்ள இலங்கையர் நாம் என்று பெருமை பாராட்டிக் கொள்வதிலும் தலைக் குனிவு ஏற்பட்டிருக்கின்றது.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களில் பெரும்பாலானோர் தூரப்புறக் கிராமங்களில் வாழ்பவர்கள். இவர்களுக்கு நகரப்புற வாசனையும் சொகுசும் தேவையில்லை. அதனை அவர்கள் விரும்புவதுமில்லை. ஆனால், இன்று அந்த மக்களின் நிலை என்ன, நடுத் தெருவில் விடப்பட்டுள்ளார்கள். இது என்ன கொள்கை? ஒரு அரச கொள்கையை மக்களிடம் அமுலாக்கும் போது அதற்கு ஒரு சீராக்கம் இருக்க வேண்டாமா?

பொதுவாக நோக்குமிடத்து இலங்கைக்கு என்று தேசியக் கொள்கைகள் ஏதுமில்லை.



# அவலக்குரலின் ஓசை



நூருல் ஹுதா உமர்

அம்பாறை மாவட்டத்தில் இருந்து ஒட்டுமொத்த இலங்கையின் பிரதான செய்திகளில் ஒன்றாக இருந்து இப்போது அது பற்றிய கதைகள் படிப்படியாக குறைந்து பழைய நிலைக்கு மக்கள் திரும்பி விட்டது.

காரைதீவு பிரதேச மாவடிப்பள்ளி பகுதியில் நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரி மாணவர்கள் உள்ளடங்களாக உழவு இயந்திரம் விபத்துக்குள்ளாகி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போனவர்களில் 08 சடலங்கள் (ஜனாஸாக்கள்) மீட்கப்பட்ட சம்பவம். மத்ரஸா முடிந்து மாணவர்களும் உழவு இயந்திர சாரதி மற்றும் உதவியாளரும் பயணித்துக் கொண்டிருந்த தருணத்தில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

அதன் பின்னரான மீட்பு பணியின் போது விலை உயர்ந்த மோட்டார் சைக்கிள்கள் இரண்டும், உழவு இயந்திரமும் மீட்கப்பட்டதுடன், இதில் பயணித்தவர்கள் எத்தனை பேர், எத்தனை பேர் காணாமல் போனார்கள் என்பதை துல்லியமாக கூற முடியாத நிலை இருந்தது.

காரைதீவு – மாவடிப்பள்ளி பகுதியில் உழவு இயந்திரத்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்த மத்ரஸா மாணவர்கள் உள்ளிட்ட பலர் வெள்ளத்தில் சிக்கி காணாமல் போயிருந்த நிலையில் முதல் நாள் மாலை மீட்புப் படையினரின் தேடுதல் நடவடிக்கையின் போது 5 மாணவர்கள் வெள்ளத்தில் இருந்து உயிருடன் காப்பாற்றப்பட்டனர். இருள், பனி, மழை, விஷ ஜந்துக்களின் ஆபத்து, காற்று, இரவு சூழ்ந்திருந்த போதிலும் மீட்புப் படையினரின் தேடுதல் நடவடிக்கை தொடர்ந்து நான்கு நாளாக நடைபெற்று மொத்தமாக 08 ஜனாஸாக்கள் மீட்புப்பணியாளர்களினால் மீட்கப்பட்டு சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அதில் றமளான் முஹம்மது தஸ்ரிப் – வயது 16, பாறூக் முஹம்மட் நாஸிக் – வயது 15, முஹம்மட் ஆஷிக் முஹம்மட் அப்னான் – வயது 15, பாறூக் முஹம்மட் சஹ்ரான் – வயது 15, முஹம்மட் ஜெஸீல் முஹம்மட் சாதிர் – வயது 17, அலியார் முஹம்மது யாசீன் – வயது 12 ஆகிய மத்ரஸா மாணவர்களும் வாகன சாரதியான உதுமாலெவ்வை முஹம்மட் அகீப் – வயது 20 உம் கல்முனை புகைப் பரிசோதனை நிலைய ஊழியரான அப்துல் ரஸீட் அஜ்மீர் – வயது 28 ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

இவர்களின் மரணம் பேசுபொருளாக மாறியுள்ள இந்த காலகட்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த விடயம் நாடாளுமன்றத்திலும் ஒலித்தது. இந்த துயர சம்பவம் தொடர்பில் சுயாதீனமான விசாரணையை நடத்த வேண்டும் என்று அன்றைய தினம் (03) நாடாளுமன்ற அமர்வில், ஒழுங்கு பிரச்சினை ஒன்றை முன்வைத்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன், அஸ்ரப் தாஹீர், எம்.எஸ். உதுமாலெப்பை போன்ற பலரும் சபையில் வலியுறுத்தினார்.

இந்த சம்பவம் இடம்பெற்ற போது, பொலிஸார் கடமையில் இருந்திருக்கிறார்கள். வெள்ளப் பாதிப்பினால், மத்ரஸாவில் இருந்து வெளியேறுவதற்கு வழி இல்லாததன் காரணமாகவே, மத்ரஸா நிர்வாகம் மாணவர்களை உழவு இயந்திரத்தில் ஏற்றி அனுப்பியிருக்கின்றது. இவ்வாறு அவர்கள் அந்தப் பாதையில் பயணித்த போது, வீதியில் வெள்ளம் பெருக்கு எடுத்திருந்த நிலையில், பொலிஸார் வீதியை மூடாமல், போக்குவரத்துக்கு அனுமதி அளித்த மையானது பொறுப்பற்ற செயற்பாடாகும். அவர்களை தடுத்து நிறுத்தி நிலைமையை விளக்கி இருக்க வேண்டும்.

அதுமட்டுமின்றி, சம்பவம் இடம்பெற்று சுமார் நான்கு மணித்தியாலயங்களுக்கு பிற்பாடு, கடற்படையினர் வருகை தந்து, அவர்களை காப்பாற்றும் பணியில் ஈடுபட்டு இருக்கிறார்கள். அதுவரைக்கும், பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. குறிப்பாக, அங்கிருந்தவர்கள் இரண்டு உயிர்களை முயற்சி செய்து காப்பாற்றி இருக்கிறார்கள். இதன்போது, அங்கிருந்த பொதுமக்கள், வெள்ளத்தில் சிக்குண்டவர்களை காப்பாற்றுமாறு பொலிஸாரிடம் கெஞ்சியபோது, பொலிஸ் நிலையத்தில் சென்று முறைப்பாடு செய்யுமாறு பொலிஸார் தெரிவித்திருகின்றார்கள். பொலிஸ் நிலையத்துக்கு அவர்கள் சென்று, ஒரு மணித்தியாலம் வரை முறைப்பாட்டை செய்வதற்காக காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

ஓர் அனர்த்தம் ஏற்பட்டிருக்கிறது என்றால், அதற்கான துரித பாதுகாப்பு நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடாது, இந்த மக்களை இவ்வாறு அங்குமிங்கும் செல்லுமாறு பணித்திருப்பது கவலை தருகின்ற விடயம். எனவே, இந்த சம்பவம் தொடர்பில் சுயாதீனமான விசாரணை ஒன்றை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் முன்னெடுக்க வேண்டும் என்று, இந்த உயர் சபையில் கோரிக்கை விடுக்கின்றேன்" என்று றிசாத் எம்.பி தனது உரையில் கூறினார்.

றிசாத் எம்.பிக்கு பதில் வழங்கிய சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க,"மேற்படி, சம்பவம் தொடர்பில் ஏலவே நாம் கலந்துரையாடியுள்ளோம். மேலும், கட்சித்தலைவர்கள் கூட்டத்திலும் விரிவாக ஆராய எண்ணியுள்ளோம். இந்த விடயம் தொடர்பில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உரிய நடவடிக்கையினை மேற்கொள்வார்" என்று கூறினார்.









## மாவடிப்பள்ளி முதல் நாடாளுமன்றம் வரை




ஆனால் விபத்து நடந்து ஓரிரு நாட்களின் பின்னர் சமூகமளித்த பிரதியமைச்சர் ஒருவர் தனக்கு பாதுகாப்பு பிரச்சினை இருப்பதாக கூறி நழுவி சென்றுவிட்டார். அம்பாறை மாவட்டத்தில் 05 ஆளும் தரப்பு எம்.பிக்கள் இருந்தும் அவர்கள் இந்த விடயத்தில் முழுமையான அக்கறை செலுத்தவில்லை என்ற குற்றசாட்டு அப்பிரதேச மக்களிடம் இருக்கிறது. அதனால் தான் சம்பவம் நடந்து நான்காவது நாள் ஸ்தலத்துக்கு வருகை தந்த ஆளும் தரப்பு எம்.பி ஒருவருக்கு அங்கு பலத்த எதிர்ப்பு கிளம்பியதும், அவர் உடனடியாக அவ்விடத்திலிருந்து தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்களினால் அழைத்து செல்லப்பட்ட சம்பவமும் நடைபெற்றது.

ஆனாலும் இந்த விபத்து விடயத்தில் முஸ்லிம் தலைவர்களின் வகிபாகம் என்ன என்ற கேள்வியும் இருக்கிறது. சில நாடுகள் இராணுவப் பயிற்சியைக் கட்டாயமாக்கியுள்ளன. இயற்கை அனர்த்தங்கள் போன்ற செயற்பாடுகளுக்கு முகங்கொடுப்பதற்காக அந்நாடுகள் இவ்வாறு பயிற்சிகளை கட்டாயமாக்கி வைத்திருக்கிறார்கள். அது மாத்திரமன்றி, பாடசாலைகளிலும் இவ்வாறான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். இலங்கையில் பிரபலமான பாடசாலைகளில் நீச்சல் தடாகங்கள் உள்ளன. அவர்களுக்கு நீச்சல் பயிற்சி வழங்கப்படுகின்றது. இதர பயிற்சிகளெல்லாம் உள்ளன. அம்பாறை, மட்டக்களப்பு, வன்னி உள்ளிட்ட சிறுபான்மை மக்கள் உள்ள பகுதிகளிலும் பெரும்பான்மை மக்கள் வாழுகின்ற சேருநுவர போன்ற பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் மேற்கூறிய வசதிகளில்லை. ஆனால், இங்கு கடல், ஆறு உள்ளன.

பயிற்றுவிப்பாளர்கள், இராணுவத்தினர் அப்பகுதிகளில் மாணவர்களை பயிற்சிகளில் ஈடுபடுத்த வேண்டும். விழிப்புணர்வு நிகழ்வுகள் நடாத்தட வேண்டும். வெள்ள அனர்த்தங்கள் எவ்வாறு ஏற்படுகின்றது? எவ்வாறு தடுப்பது போன்ற திட்டங்களை இதனூடாக மிகச்சிறப்பாகச் செயற்படுத்த முடியும். இதில் அரசாங்கம் உடனடியாக கவனஞ்செலுத்த வேண்டும். இனி வரும் காலங்களில் இவ்வாறான அழிவுகளிலிருந்து பாதுகாப்புப்பெற வேண்டும் என்ற ஆலோசனைகளும் இப்போது சமூக ஆர்வலர்களினால் முன்வைக்கப்பட்டு வருகிறன.

அம்பாறை மாவட்ட கிட்டங்கி மற்றும் மாவடிப்பள்ளி பிரதேசத்தில் அடிக்கடி இடம்பெறும் உயிரிழப்புக்களையும், விபத்துக்களையும் கட்டுப்படுத்த குறித்த பிரதேசங்களில் வீதிப்பாதுகாப்பு தடுப்புக்களை ஏற்படுத்துவதுடன் வீதிகளை அகலமாக்கும் நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கடிதமொன்றை அனுப்பி உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது. அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட மாவடிப்பள்ளி, கிட்டங்கி ஆகிய இரு இடங்களில் மாவடிப்பள்ளியில் 6 சிறுவர்கள் மற்றும் 2 பெரியவர்கள் மற்றும் அம்பாறை மாவட்டம் கிட்டங்கியில் ஒருவர் உட்பட 9 பேர் உயிரிழந்தமை வருத்தமளிக்கும் ஒன்றாகும். இது போன்று அடிக்கடி குறித்த பிரதேசங்களில் உயிரிழப்புக்கள் இடம்பெறுவது வழமையாகி வருகிறது.

முக்கியமாக குறித்த இந்த இரண்டு இடங்களின் பாலங்கள் எதிர்காலத்தில் விபத்துக்களையும், மரணத்தைத் தவிர்க்கும் விதமாக மாற்றியமைக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியம் பெறுகிறது என்பதை அடிக்கோடிட்டு காட்டவேண்டியுள்ளது.

மேலும், ஒவ்வொரு இடத்தின் இருபுறமும் பாலத்தில் இருந்து சாலை வரை 500 மீட்டர் தூரத்திற்கு வலுவான தடுப்புகள் அமைப்பதுடன், வெள்ள அளவைக் குறிப்பதுடன், எதிர்காலத்தில் இப்பகுதி மற்றும் பிற பகுதிகளின் பயணிகளின் இத்தகைய மரணங்கள் கடுமையாகத் தவிர்க்கப்படும். தென்கிழக்கு பிராந்திய கடலோரப் பகுதியை முழு அம்பாறை மாவட்டம் மற்றும் நாட்டின் பிற பகுதிகளுடன் இந்த சாலைகள் இணைக்கும் என்பதால், ஒவ்வொரு ஆண்டும் பருவகால வெள்ளம் காரணமாக, இந்த இடங்களில் ஏதேனும் ஒன்றில் அல்லது இரண்டு இடங்களிலும் இதுபோன்ற சம்பவங்கள் துரதிர்ஷ்டவசமான மரணத்துடன் இடம்பெறுகின்றன. எனவே, தொழிநுட்ப பிரிவைக் கொண்டு இப்பகுதியின் செயல்பாட்டு சூழலை ஆய்வு செய்து, இரண்டு பாலங்களுக்கும் மிகவும் வலுவான தடுப்புகளை அமைக்க அவசியம் அரசாங்கம் முன்வர வேண்டும்

காரைதீவு பாலத்தில் கடந்த 26 ஆம் திகதி பிற்பகல் உழவியந்திரம் வெள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அரபுக் கல்லூரி மாணவர்கள் 06 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் அரபுக் கல்லூரியின் அதிபர், ஆசிரியர் மற்றும் 02 உதவியாளர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் மத்ரஸாவின் அதிபர் மற்றும் ஆசிரியர் ஆகிய இருவரும் 02 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டு அதிபர் மற்றும் ஆசிரியர் ஆகியோர் தலா இரண்டு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் இந்த வார ஆரம்பத்தில் விடுவிக்கப்பட்டனர். பொலிஸார் தனது தப்பை மறைக்க முயல்வதாக பரவலான குற்றச்சாட்டுக்கள் எழுந்துவரும் நிலையில் சட்டம் தனது கடமையை சரியாக செய்தாலும் கூட இந்த விபத்தின் உண்மை நிலவரம் என்ன என்பதை புலனாய்வுத்துறை சுயாதீனமாக விசாரிக்க கடமைப்பட்டுள்ளது.

ஆனால், இங்கு கடற்பகுதியுள்ள பிரதேசம் அதிகளவான மீனவர்களைக்கொண்ட பகுதி. இங்கே எமது தொப்புள் கொடி உறவுகளான தமிழ்ச் சகோதரர்கள் கூட நாங்கள் இவ்விடயத்தில் உதவி செய்ய முன் வருகிறோம் எனத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், அங்கு பாதுகாப்புக்காரணங்களைக் காட்டி அவர்களை மீட்புப்பணியில் அனுமதிக்காதமை இங்கே சுட்டிக்காட்டப்பட வேண்டியது தான். எனவே, இம்மீனவர்களை அனுமதித்திருந்தால், மீட்புப்பணி சுலபமாக இருந்திருக்கும். ஆனால், பாதுகாப்புத்தரப்பினர் எந்தவித செயற்பாடுகளை முன்னெடுக்காமல் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததாக பொதுமக்கள் குற்றஞ்சுமத்தி இருக்கிறார்கள். எனவே, ஜனாஸா வீடுகளுக்குச்சென்று அரசியல் செய்ய வேண்டாம். பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உரிய நீதி கிடைக்கப்பெற வேண்டும் என 'வி ஆ வண்" அமைப்பின் இணைப்பாளர் முகம்மட் ரஸ்மின் கூறியுள்ள கருத்து ஆழமாக ஆராயப்படவேண்டியதும், ஆய்வு செய்யப்பட வேண்டியதுமாகும்.

இந்தப் பணியில் உயிரை பணயம் வைத்து போராடி ஐந்து உயிர்களை காப்பாற்றி 08 ஜனாஸாக்களை கரைசேர்த்த மீட்பு பணியாளர்கள் பாராட்ட மட்டுமல்ல நன்றிக்கும் உரித்தானவர்கள். ஆரம்பம் முதல் இறுதிவரை இந்த பணியை எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாது முன்னெடுத்த மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பினர், அவர்களுக்கு பக்கபலனாக உழைத்த காரைதீவு இராவணா தொண்டர் அணி, சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை, கல்முனை பிரதேச சுழியோடிகள், பாதுகாப்பு தரப்பினர், அரச உயர் அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் நன்றிக்குரியவர்கள். இந்த மீட்பு பணியாளர்களை கௌரவிக்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை மீஸான் பௌண்டஷன், ஸ்ரீலங்கா அரசுக்கு முன்வைத்துள்ளது. இவர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவை ஏனையோருக்கும், இவர்களுக்கும் ஊக்கமளிக்கும் விதமாக, சமூக நல்லிணக்கத்தின் வெளிப்பாடாக உயர் மட்டங்களில் பாராட்டப்பட வேண்டும். நீதி நிலைநாட்டப்பட வேண்டும். அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்க வேண்டும். – இதுதான் மனிதத்தை நேசிப்பவர்கள் எதிர்பார்ப்பது. ■

## ரூ.9 இலட்சம் கொள்ளை

# இ.போ.ச டிப்போ காவலாளி கொலை



(கு.கிஷாந்தன், திவாகரன்)

நுவரெலியா இ.போ.ச டிப்போவில் கடமையாற்றிய காவலாளியை கொலைசெய்து டிப்போவில் வைப்பிலிடப்படவிருந்த சுமார் ஒன்பது இலட்சம் ரூபாய் பணம் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

டிப்போவில் காவலாளியாக பணியாற்றிய நுவரெலியா கல்பாய பிரதேசத்தை சேர்ந்த கே.லோகேஸ்வரன் என்ற 85 வயதுடைய நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சிலர் காவலாளியை கொன்றுவிட்டு டிப்போ பெட்டகத்தில் இருந்த சுமார் ஒன்பது இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

காவலாளி தனது பாதுகாப்பு அறையில் கடமையில் இருந்த போது சில கும்பல் குறித்த நபரை கூரிய ஆயுதத்தால் தலையில் தாக்கி பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

கொலைச் சம்பவத்தின் போது, டிப்போவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரும், காசாளரும் டிப்போவில் தங்கியிருந்த போதிலும், அவர்கள் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா இ.போ.ச டிப்போவில் வியாழக்கிழமை (05) பிற்பகல் பயணத்தில் ஈடுபட்ட பஸ்களின் வருமானம் வங்கியில் வைப்பிலிடுவதற்காக பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்ததாக டிப்போவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# போதைப்பொருள் விற்ற இராணுவ வீரர் கைது



(ராமு தனராஜா)

பண்டாரவளை பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் ஓய்வுபெற்ற இராணுவ சிப்பாய் ஒருவரை 33,000 மில்லிகிராம் ஹெரோயினுடன் பண்டாரவளை விசேட புலனாய்வு பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை பெரேரா மாவத்தையில் வசிக்கும் 40 வயதுடையவரே கைது செய்யப்பட்டவராவார்.

இவர் இராணுவத்தில் கடமையாற்றும் போது அங்கவீன முற்றதால் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சந்தேகநபர் பண்டாரவளை பகுதியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய அவரின் வீட்டை சோதனையிட்ட போது, விற்பனைக்கு தயார்படுத்தப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்த 320 சிறிய ஹெரோயின் பொதிகளை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இதன் போது சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, தான் அம்பகஸ்தோவ பகுதியில் வசிப்பவர் எனவும், பண்டாரவளை நகரில் வாடகை வீட்டில் இருந்து வட்ஸ்அப் இலக்கம் ஊடாக போதைப்பொருட்களை விற்பனை செய்வதாகவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

சம்பவம் தொடர்பில் பண்டாரவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக அமைச்சர் பேராசிரியர் ஹினிதும் சுனில் செனவி , பெருந் தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோர் வெள்ளவத்தை மயூராபதி பத்திரகாளியம்மன் ஆலயத்தில் வழிபாட்டில் கலந்து கொண்டனர். இதன்போது ஆலய அறங்காவலர் சபையின் தலைவர் பி .சுந்தரலிங்கம் உட்பட அங்கத்தவர்கள் விசேட பூஜை வழிபாடுகளை ஏற்பாடு செய்திருந்ததோடு அமைச்சர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

# மனித கடத்தல்-மனித வியாபாரத்தை தடுக்க கூட்டிணைந்த திட்டம்

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன தெரிவிப்பு



அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டு மூலங்களில் மனித கடத்தல் மற்றும் மனித வியாபாரத்தை தடுப்பதற்கு

கூட்டிணைந்த நடவடிக்கை ஒன்று தயாரிக்கப்படும் என மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன (5) தெரிவித்துள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்களுக்காக தேசிய செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மனித கடத்தல் தடுப்பு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சி பத்தரமுல்ல வோட்டர்ஸ் எஜ் ஹோட்டலில் நடைபெற்றது. நிகழ்வில் பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, தொழிலாளர் திணைக்களம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு, சமூக சேவைகள் திணைக்களம் , தொழிலாளர் அமைச்சு, சர்வதேச தொழிலாளர் அமைப்பு, இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு, சுவிஸ் தூதரகத்தின் பிரதிநிதிகள் சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கால் வழுக்கி கிணற்றில் விழுந்த சிறுவன் மரணம்

## யாழ்.இருபாலையில் சோகம்

(பு.கஜிந்தன்)

இருபாலை பகுதியில் சவர்க்காரத்தில் கால் வழுக்கியதில் சிறுவன் ஒருவன் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளான். இருபாலை கிழக்கு, இருபாலை பகுதியைச் சேர்ந்த நிரோசன் விமாத் (வயது 04) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த சிறுவன் அயல்வீட்டு சிறுவனுடன் விளையாடிவிட்டு வாளியைக் கொண்டு கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து கை கழுவியுள்ளான். இதன்போது சவர்க்காரம் கீழே விழுந்த நிலையில் சவர்க்காரத்தின் மீது கால் பட்டதில் வழுக்கி கிணற்றினுள் விழுந்துள்ளான்.

இந்நிலையில் குறித்த சிறுவனை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்துள்ளனர். இருப்பினும் குறித்த சிறுவன் சிகிச்சை பலனின்றி மறு நாள் காலை உயிரிழந்துள்ளான்.

அவனது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# கம்பஹா பகுதியில் மலசலகூட குழியில் சிறுமியின் சடலம் மீட்பு

கம்பஹா பகுதியில் 14 வயது சிறுமி ஒருவரை கொலை செய்து சடலத்தை நிர்மாணிக்கப்பட்டு வரும் வீட்டின் மலசல கூட குழியில் போட்டு மூடப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கம்பஹா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2ஆம் திகதி முதல் தனது 14 வயது மகள் காணாமல் போயுள்ளதாக கம்பஹா, அகரவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமியின் தாய் (5) ஆம் திகதி இரவு செய்த முறைப்பாட்டையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர், இந்தக் கொலைக்கான அடிப்படைக் காரணத்தை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் கொலைக்கு தனது இரண்டாவது கணவர் மீது சந்தேகம் இருப்பதாக சிறுமியின் தாய் தெரிவித்துள்ளார்.

இதன்படி, முறைப்பாட்டாளரின் இரண்டாவது கணவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

விசாரணையில் அவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்படி, சந்தேகநபர் சிறுமியைக் கொன்று, நிர்மாணிக்கப்பட்டு வரும் வீட்டின் பின்புறமுள்ள மலசல கூட குழியில் சடலத்தை போட்டு கொங்கிரீட்டால் மூடியதாகத் தெரியவந்துள்ளது.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன், கம்பஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழுந்து பறித்த பெண், சிறுத்தை தாக்குதலில் படுகாயம்



தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண் தொழிலாளி ஒருவர் சிறுத்தை தாக்குதலுக்கு இலக்காகி பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது படுகாயமடைந்த 53 வயதுடைய பெண், பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக டிக்கோயா– கிளங்கள் ஆதார வைத்திசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். குறித்த பெண் பொகவந்தலாவ – மோரா பகுதியியை சேர்ந்தவர் எனவும் போபத்தலாவ பகுதிக்கு கொழுந்து பறிக்க சென்ற வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும், குறித்த பெண்ணின் உடல் முழுவதும் சிறுத்தை தாக்கியதில் நக காயங்கள் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# சந்நிதியான் ஆச்சிரமம் வெள்ள நிவாரண உதவி





(பு.கஜிந்தன்)

இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் – கந்தரோடை, இக்கிராளை கிராம சேவையாளர் பிரிவுகளான J/212> J/200 ஆகிய கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட 75 குடும்பங்களுக்கு, 375,000 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இக்கிராளை துர்க்கா சனசமூக நிலையத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

# சிறுமியின் தலைமயிரை வெட்டி கொடூரமாக தாக்கிய பெண் கைது

ரிதீமாலியத்த பிரதேசத்தில் 14 வயது சிறுமியை கொடூரமாக தாக்கி, தலைமுடியை வெட்டி கொடுமைப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் சிறுமியின் சிறிய தாய் (5) கைது செய்யப்பட்டதாக ரிதீமாலியத்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரிதீமாலியத்த பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய பெண்ணொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறிய தாயின் கொடுமையால் காயமடைந்த 14 வயது பாடசாலை மாணவி மஹியங்கனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறுமியின் தாய் சில வருடங்களுக்கு முன்னர் மரணமடைந்து விட்டதாகவும், தந்தை குறித்த பெண்ணை திருமணம் செய்து கொண்டு ஒரே வீட்டில் வசித்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தனியார் வகுப்புக்குச் சென்ற சிறுமி வீடு திரும்ப தாமதமானதால் ஆத்திரமடைந்த சிறிய தாய், சிறுமியை கொடூரமாக தாக்கி, பக்கத்து வீட்டில் இருந்து கத்திரிக்கோல் ஒன்றை கொண்டு வந்து சிறுமியின் தலைமயிரையும் வெட்டி சிறுமிக்கு காயத்தை ஏற்படுத்தியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# இலக்குகளை அடைவதற்கு ஆதரவுகள் அவசியம்



மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்காக எதிர்பார்க்கப்படும் இலக்குகளை எட்டுவதற்கு முழுமையான ஆதரவை எதிர்பார்ப்பதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சர் கலாநிதி அநுர கருணாதிலக்க தெரிவித்தார்.

சபையின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமைகள் சம்பந்தமாக கலந்துரையாடலில் ஈடுபட்டார்.வடிகாலமைப்பு சபைக்கு விஜயம் செய்த அமைச்சர் கலாநிதி அநுர கருணாதிலக்க தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், நீர் மனித உரிமை என்றும், மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதற்கு அரசாங்கம் கடமைப்பட்டுள்ள தாகவும், அதற்கான பொறுப்பை நிறைவேற்ற வேண்டிய நிறுவனம் இச்சபை என்றும் தெரிவித்தார். இதன்போது இங்கு சபையின் தலைவர் தீப்தி A சுமனசேகரவினால் சுமார் 50 வருட காலப்பகுதியில் சபை அடைந்து கொண்டுள்ள முன்னேற்றம் மற்றும் உகந்த சேவை சம்பந்தமாக மிக தெளிவாக விளக்கினார்.

# அமைச்சுகளுக்கு செயலாளர்களை நியமித்தார் கிழக்கு ஆளுநர்

(முகம்மட் முக்தார்)

கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களை கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர். ஜயந்தலால் இரத்னசேகர மாற்றம் செய்துள்ளார்.

மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக கடமையா ற்றிய எம்.வை.பைசால் மாகாண முதலைமைச்சின் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராக எஸ்.லியாகத் அலி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மாகாண விவசாய விவசாய அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய எம்.எம்.நஸீர் மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய எச்.ஈ.எம். டப்ளியூ.ஜி.திசாநாயக்கா விவசாய அமைச்சின் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மாகாண ஆளுநரின் செயலாளராக கடமையாற்றிய எல் பி.மதன்னாயக்கா சுகாதார அமைச்சின் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# திருக்கோவிலில் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம்

(திருக்கோவில் எஸ்.கார்த்திகேசு)

அம்பாரை திருக்கோவில் பிரதேசத்தில் புதுயுகம் மாற்றுத் திறனாளிகள் அமைப்பினரின் ஏற்பாட்டில் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தின நிகழ்வு திருக்கோவில் பிரதேசத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வானது புதுயுகம் மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் செயலாளர் ஜேசுதாசன் கேசரிவர்மன் தலைமையில் திருக்கோவில் கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாற்றுத் திறனாளிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய மாற்றுத் திறனாளியின் பிள்ளைகளுக்கான கௌரவிப்பு மற்றும் மாற்றுத் திறனாளிகளின் கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் கலந்து கொண்டார். நிகழ்வில் அம்பாரை மாவட்ட சமூக



சேவை அதிகாரி ஹசன்,திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொது சுகாதார தாதியர் சகோதரி எஸ்.சிவமலர், கெப்பிட்டல்மெட்டல்ப் அமைப்பின் இணைப்பாளர் ஜெகதீஸ்வரி குணசிங்கம் பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் டீ பர்மிளா புதுயுகம் அமைப்பின் நிருவாகிகள் மற்றும் 200க்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# முன்பள்ளி பாடசாலையின் வருடாந்த பட்டமளிப்பு விழா

(ஆரையம்பதி நிருபர்)

வீச்சுக் கல்முனை BRIGHT-BEGINING முன்பள்ளி பாடசாலையின் வருடாந்த பட்டமளிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு வைஎம்சிஏ மண்டபத்தில் இடம் பெற்றது.

முன்பள்ளி ஆசிரியர் டினியா ஷிரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் 15 முன்பள்ளி சிறார்கள் பட்டமளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணனும் விசேட அதிதியாக ஆரையம்பதி மெதடிஸ்த திருச்சபை அருட்பணி வினோத் அடிகளாரும் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர். பிரதம அதிதியாக கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் முன்பள்ளி சிறார்களுக்கு சான்றிதழ் வழங்கி வைத்தார்.



ஆறு நாட்களுக்குப் பின்னர்

# மூன்று பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்பு



(கியாஸ் ஷாபி)

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பைசல் நகர், பாரதிபுரம் பகுதியில் ஆறு நாட்களுக்குப் பின்னர் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பைசல் நகர், பாரதிபுரம் பகுதியைச் சேர்ந்த, மூன்று பிள்ளைகளின் தந்தையான மஹ்மூது முகம்மது அலியார் (55 வயது)என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட, ஒரு பகுதியில் இருந்த, குடிசை ஒன்றில் இருந்து இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. இந்தக் குடிசைக்கு அண்மித்த பகுதியிலே இவர் வாழும் சிறிய குடிசை அமைந்துள்ளது. இந்த குடிசையின் சொந்தக்காரன், தனது குடிசையை பார்க்கச் சென்ற போதே, சடலம் ஒன்று கிடப்பது அவதானிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இது தொடர்பில் அவரது மனைவி மனாப் மன்சூரா(40) கருத்து தெரிவிக்கும் போது,

" அவரிடமிருந்த குடிப்பழக்கம் காரணமாக, அவரை விட்டு நாங்கள் நான்கு மாதமாக பிரிந்து வாழ்கிறோம். வெள்ளம் காரணமாக எனது குடிசையில் வாழ முடியாத நிலை ஏற்பட்டதனால் எனது பிள்ளைகளை அழைத்துக் கொண்டு, உப்பாறு பகுதியில் உள்ள எனது தாயின் வீட்டுக்கு சென்று விட்டேன். இந்த நிலையிலே, அவர் மரணமான செய்தியை கேள்விப்பட்டு, பிள்ளைகளோடு எனது வீட்டுக்கு வந்திருக்கிறேன். அவருக்கு என்ன நடந்தது என்று தெரியாது?

எங்களுக்கு பாடசாலைக்கு செல்கின்ற மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். நான் வீடு, வீடாக சென்று பிச்சை எடுத்துதான் பிள்ளைகளுக்கு சாப்பாடு கொடுத்து பாடசாலைக்கு அனுப்புகிறேன்.

வெள்ளம் வந்த பிறகு எனது குடிசையில் வாழ முடியாது கஷ்டப்படுகிறோம். என்னால் வெளிநாடும் செல்ல முடியாது. வெளிநாடு சென்றால் எங்களது பிள்ளைகளை யார் பராமரிப்பது. நான் ஒரு நோயாளியாகவும் இருக்கிறேன் என்றும் தெரிவித்தார்.

# பொலிவேரியன் மக்களுக்கு பஸ்யால மக்களிடமிருந்து உதவிகள்

(முகம்மட் முக்தார்)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாய்ந்தமருது பிரதேச செயலக வொலிவேரியன் சுனாமி மீள்குடியேற்ற கிராமத்தில் உள்ள மக்களுக்கு.கல்எலிய மஸ்ஜிதுஸ் சுப்ஹானி நம்பிக்கையாளர் சபை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பஸ்யால கிளை என்பன இணைந்து சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை வழங்கப்பட்டன.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் சாய்ந்தமருது– மாளிகைக்காடு கிளைக்கு வருகை தந்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வொலிவேரியன் கிராமத்தில் உள்ள வறிய மக்கள் வாழும் 80 வீடுகளுக்கு பாய், தலையணை, மெத்தை, படுக்கான போர்வைகள் போன்றவற்றைக் கையளித்தனர்.

இப்பொருட்கள் கடந்த(05) வியாழக்கிழமை ஜம்இய்யத்துல் உலமா கிளை காரியாலயத்தில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிகின் மேற்பார்வையின் கீழ் வழங்கி வைக்கப்பட்டன.

இக்கட்டான இக்கால கட்டத்தில் இவ்வாறான உதவியை செய்த , கல்எலிய மஸ்ஜிதுஸ் சுப்ஹானி நம்பிக்கையாளர் சபைக்கும், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பஸ்யால கிளை மற்றும் அவ்வூர் மக்களுக்கும் அனைத்து உலமாக்கள் சார்பிலும் நன்றிகளையும் துஆக்களையும் செய்துகொள்கின்றோம் எனஜம்இய்யத்துல் உலமாவின் சாய்ந்தமருது– மாளிகைக்காடு கிளையின் தலைவர் மௌலவி.எம்.எஸ். சலீமினால் இதன் போது தெரிவிக்கப்பட்டது.

# ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிபட்டறை



சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் ஏற்பாட்டில் யுனிசெப் நிறுவனத்தின் ஏற்பாட்டில் என்.எச்.கலெக்ஷன் விடுதியில் ஊடகவியலாளர்களுக்கான விசேட சிறுவர் அறிக்கையிடல் தொடர்பான பயிற்சிபட்டறை நடைபெற்றது.இதன்போது பட்டறையில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# காத்தான்குடி பௌஸ் மௌலவி காலமானார்



நாடறிந்த எழுத்தாளர் பண்மைத்துவ இலக்கிய ஆளுமை கவிஞர், மௌலவி காத்தான்குடி பௌஸ் (ஷர்க்கி) வெள்ளிக்கிழமை மாலை 65ஆவது வயதில் காத்தான்குடியில் காலமானார். இவர் பலப்பிட்டி ஜு®ம்ஆப்பள்ளிவாசல், பாணந்துறை ஊர்மனை ஜஸ்ரீம்ஆப்பள்ளிவாசல்களின் முன்னாள் பேஷ் இமாம் ஆவார். இவர் சிறிது காலம் சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் காலமானார். ஜனாஸா காத்தான்குடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# அல்ஹிலாலில் சின்னம் சூட்டும் விழா

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது அல்ஹிலால் பாடசாலையில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீமை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும் பாடசாலை மாணவர் மற்றும் வகுப்புத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும் சாய்ந்தமருது அல்ஹிலால் பாடசாலையில் நடைபெற்றன. சாய்ந்தமருது அல்ஹிலால் பாடசாலையின் பிரதியதிபர் ஏ.பி. ஷெறோன் டில்ராஸ் ஏற்பாட்டில் அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். மேலும் சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஏ.அஸ்மா மலிக், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன், கல்முனை வலயக் கல்வி அலுவலக ஆரம்பக்கல்வி வளவாளர் எஸ்.எம். எம். அன்சார் மற்றும் பாடசாலை அபிவிருத்திக்குழு செயலாளர் பொறியியலாளர் கமால் நிஷாத் மற்றும் பாடசாலையின் உதவி அதிபர் எம்.எச்.லாபிர், பிரதி அதிபர்களான எம்.சி.என். றிப்கா அன்சார், எம்.எச். நுஸ்ரத் பேகம், பகுதித் தலைவர்கள், ஆசிரிய ஆசிரியைகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பள்ளிவாசல்களின்

# நம்பிக்கையாளர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கொழும்பு மாவட்ட தெற்கு பிராந்திய பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸின் தலைமையில் தெஹிவலை, கல்கிஸ்ஸை பள்ளிவாசல்கள் சம்மேளனம் மற்றும் தெஹிவலை முஹைதீன் ஜ/ம்ஆப் பள்ளிவாசலில் நடைபெற்றது.



இந்த கருத்தரங்கில் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள், பள்ளிவாசல் எவ்வாறு ஒரு சமூக மையமாக செயற்படுவது, இலங்கை வக்பு சபை, இலங்கை வக்பு நியாய சபை மற்றும் முஸ்லிம் தர்ம நம்பிக்கை பொறுப்புகள் (Trust) ஆகியன தொடர்பில் நம்பிக்கையாளர்களுக்கு தெளிவூட்டப்பட்டன.

முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அறிமுகமும் அதன் சேவைகள் தொடர்பான தொடக்க உரையை திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் நடாத்தினார்.

இக் கருத்தரங்கில் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் சார்பாக வளவாளர்களாக திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹ்மத், வக்பு பிரிவின் அதிகாரி எம்.ஐ.முனீர், வக்பு நியாய சபை பதில் செயலாளர் எம்.என். எம். ரோஸன், ஆகியோர் கலந்து கொண்டு தெளிவுரைகளை வழங்கினர்.

மேலும் இச் செயலமர்வில் விஷேட அதிதியாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபைத் தலைவர் றிஸ்வி முப்தி கலந்து கொண்டதுடன் நம்பிக்கையாளர்ளின் சிறப்புகள் மற்றும் கடமைகள் தொடர்பாக சிறப்பு உரையையும் வழங்கியதுடன், கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் சட்டத்தரணி சிராஸ் நூர்தீனும் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வை கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்களுக்குப் பொறுப்பான எம்.ஐ.மஸீன் சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நாம் அஞ்சவில்லை

## ஜேவிபியும் தேசிய மக்கள் சக்தியும் ஒருங்கிணைக்கப்படவில்லை

மொழிபெயர்ப்பு: கனூஷியா புஷ்பகுமார்

மக்கள் விடுதலை முன்னணி கட்சியும், அரசாங்கமும் ஒருங்கிணைக்கப்படவில்லை. ஆனால், ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தாய்க் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச செயலாளர் ரில்வின் சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் பிரதான ஆங்கில பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் அரசாங்கத்தின் எதிர்கால யோசனைகள் தொடர்பிலும், சமூக வலைத்தளங்களில்  அவர் மீது வைக்கப்படும் விமர்சனங்கள் தொடர்பிலும் கருத்து வெளியிட்டிருந்தார்.

குறித்த பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலின் சிறிய பகுதி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது,

01. நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியானவுடன் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, உங்களது கட்சி பெற்ற மாபெரும் மக்கள் ஆணையின் ஆழம் தொடர்பில் நீங்கள் பேசியிருந்தீர்கள், அவ்வாறானதொரு மாபெரும் மக்கள் ஆணை கிடைத்ததால் நீங்கள் அச்சமடைந்துள்ளீர்களா?

நாங்கள் மாபெரும் மக்கள் ஆணையைப் பார்த்து அச்சமடையவில்லை. எங்களுடைய அரசியல் கட்சியானது ஏனையவற்றை விட முற்றிலும் மாறுபட்டது. கட்சிகளை எங்களது தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள மக்கள் ஆணையை நாங்கள் எதிர்ப்பார்க்கவில்லை. நாட்டை மீள கட்டியெழுப்புவது தற்போது அவசியமாகியுள்ளது. பெரும்பான்மையான மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைக்கும் போது அவற்றை ஆழமாக பொறுப்பேற்க வேண்டியிருந்தது. இந்த மாபெரும் ஆணை நாட்டை மீள கட்டியெழுப்ப வேண்டும் என்பதே.



02. உங்களுடைய கட்சியின் ஸ்தாபகர் ரோஹண விஜேவீர கொலை செய்யப்பட்ட அதே நவம்பர் மாதத்தில் தான் உங்களுக்கு இந்த மாபெரும் மக்கள் ஆணை கிடைக்கப்பெற்றது. அது தொடர்பில் என்ன நினைக்கிறீர்கள்?

அது ஒரு எதிர்ப்பாராத சம்பவம் மாத்திரமே. எங்களுடைய உயிரிழந்த சகோதரர்களை நினைவுகூரும் 35ஆவது நினைவேந்தலின் பின்னர் கிடைத்த இந்த தேர்தல் வெற்றி தொடர்பில் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். எங்களுடைய கட்சி நொறுக்கப்பட்டு 35 வருடங்களின் பின்னர் கிடைத்த இந்த வெற்றி சிறப்புமிக்கது. அதேபோல், எங்களுடைய வெற்றி நிச்சயமானது.

03. உங்களுடைய கட்சி ஆரம்பத்திலிருந்தே சர்வதேச நாணய நிதியத்தின் தலையீட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தது. தற்போது,ஆட்சியில் இருக்கும் உங்களுடைய கட்சி சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னோக்கி செல்கின்றது. இது தொடர்பில் உங்கள் கருத்து?

நாங்கள் சவால்களை மாத்திரமே சந்தித்து வருகின்றோம். ஒழுங்காக கட்டியெழுப்பப்பட்ட ஒரு நாடு எங்களுக்கு ஆட்சி செய்ய கிடைக்கவில்லை. வங்குரோத்தடைந்த ஓரிரு ஆண்டுகளாக செலுத்தப்படாத கடன்களுடன் கூடிய ஒரு நாட்டையே ஆட்சி செய்ய கிடைத்துள்ளது. இலாபமற்ற நிபந்தனைகளுடன் சர்வதேச நாணய நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்களுடன் சிக்கிய நாடாக காணப்பட்டது. தற்போது உள்ள வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை கட்டியெழுப்ப சர்வதேச நாணய நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்களில் சிக்காமல் இருப்பது மேலும் சிறந்தது. தற்போது ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு நிறைவடைந்துள்ளமையால் எங்களால் எதுவும் செய்ய முடியாது. அது இலங்கை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்டதொரு உடன்படிக்கை. எந்தவொரு அரசாங்கம் வந்தாலும் அதற்கு மதிப்பளிக்க வேண்டும் . தற்போது எங்களுக்கு மக்கள் ஆணையின்படி, சர்வதேச நாணய நிதியத்துடன் முன்செல்ல வேண்டும். எங்கே மாற்றங்களை கொண்டு வர முடியும் என்பது தொடர்பில் ஆராய வேண்டும்.

04. எதிர்காலத்தில் சர்வசே நாணய நிதியத்திடம் இருந்து விலகுவது தொடர்பில் ஏதேனும் திட்டங்கள் உங்களிடம் உண்டா? அது தொடர்பில் இன்னும் சிந்திக்க முடியவில்லை.

அதனை இப்போது செய்ய முடியாது. மேற்கொள்ளக்கூடிய மறுசீரமைப்புகளுடன் உடன்படிக்கையை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டிய நிலை உள்ளது. தற்போது ஒரு அளவில் பொருளாதார ஸ்திரத்தன்மை காணப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து கட்டியெழுப்புவது முக்கியம்.

05. தற்போது தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்துள்ளது. அதன் தாய்க்கட்சி ஜே.வி. பியாகும். கட்சியின் பங்களிப்பும், அரசாங்கத்தின் பங்களிப்பும் எவ்வாறு வேறுபடுகிறது?

கட்சி தேர்தல் வெற்றியை உறுதிப்படுத்தியதை மாத்திரமே செய்தது. தேர்தல் வெற்றியின் பின்னர் தற்போது ஆட்சியமைத்துள்ளோம். கட்சி, அரசாங்கம் இரண்டுமே ஒரு நோக்கத்துக்காகவே செயற்படுகிறோம். அரசாங்கத்தை மக்களுடன் இணைக்க கட்சி என்பது அவசியமாகிறது. அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு வழங்கப்படும் மக்கள் ஆதரவை உறுதி செய்ய கட்சியின் செயற்பாடுகள் அவசியம். கட்சியும், அரசாங்கமும் ஒருங்கிணைக்கப்படவில்லை ஆனால் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளது.

# மரணங்கள் நிறைந்த பிணவறைத் தொழிலாளியின் கதை

கிருக்ஷிகா பாலரூபன்



மரணத்தின் பின்னாலுள்ள புதிர்களை நீக்கக்கூடிய இடம்தான் பிரேத பரிசோதனைக்கூடம். இறப்பின் உண்மையான காரணம் தெரிந்துக்கொள்ளச் செய்யப்படுவதே பிரேதப்பரிசோதனை.  இது ஒரு சட்டம் சார்ந்த மருத்துவமாகும். இந்த உலகத்திலிருக்கும் எல்லா உயிரினத்திற்கும் முக்கியமானது உயிர். அது பிரிந்தால் எல்லாமே பிரேதம் தான். இறந்துக்கிடக்கும் சொந்தங்களின் உடலைக்கூட தொட யோசிக்கும் உலகமிது. அதன் இரத்தம், சதை என இரத்தத்திலேயே ஊறி பூதவுடலிலிருந்து வெளிவரும் துர்நாற்றத்தைக் காற்றாகச் சுவாசித்து இந்த உலகத்தின் பார்வையில் படாமல் இருட்டு அறைக்குள் வெளிச்சம் தேடும் மனிதரைப் பற்றிய கதையே இது.

என் பெயர் குமரன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) நான் முதலில் சுகாதார உதவியாளராக (Health Assistant) யாழ்ப்பாண வைத்தியசாலைக்குச் சென்றேன். பின் சந்தர்ப்ப சூழ்நிலையால் பிணவறைத்தொழிலாளராக பணியாற்ற வேண்டி ஏற்பட்டது. வைத்தியசாலையில்  என்ன பகுதியில் வேலைசெய்கின்றேன் என என் குடும்பத்தவர்கள் அறிந்திருக்கவில்லை. பிணவறையில் பணியாற்றுகின்றேன் என தெரியவருகையில் எதிர்ப்பு நிலை உருவானது. பின்பு என் நிலைப்பாட்டை எடுத்துக்கூற எதிர்ப்பு வலுக்கவில்லை. முதல் வருகையில் இப்படித்தான் வேலை எனத்தெரியாது. ஒருவித பய உணர்வு மேலோங்கியே காணப்பட்டது. அதன் பின்னர் சீனியர்களின் (Seniors) உதவியுடன் அவர்களின் அனுபவம் வாயிலாக கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். ஓரிரு மாதத்திலேயே பழக்கப்பட்ட வேலையாக மாறிவிட்டது. என்னுடைய முதல் அனுபவமே உறவினர்களால் கைவிடப்பட்டு தனியாக வசித்து வந்த ஒரு வயதான முதியவரின் இறந்த உடலத்தைக் கையாண்டதேயாகும். மாரடைப்பினால்  இறந்து, நான்கைந்து நாட்கள் சென்ற பின் அயலவர்களால் கண்டறியப்பட்ட சடலமே அதுவாகும். பெற்றுக்கொண்ட உடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனை செய்துவிட்டு இயலாத நிலையில் முதல்நாளே வேலையை விட்டுப் போய்விடலாமா? எனப்பல கேள்விகளுடன் என் மனம் அல்லாடியது. நண்பர்கள்தான் எனக்கு ஆறுதல்கூறி எப்போதும் இப்படியான நிலையில் உள்ள உடலங்கள் வராது, மன தைரியத்தோடு இரு என நம்பிக்கையளித்தனர். சாதாரணமாக இறந்தவர்கள், மாரடைப்பு, சயரோகம் போன்ற தொற்றா நோய்களால் இறத்தல், காய்ச்சல் போன்ற பற்றீரியா தாக்கத்தால் இறத்தல் (நிமோனியா, மூளைக்காய்ச்சல்), தொற்று நோய், விபத்துக்களால் இறத்தல், தூக்கிட்டு கொலை, தற்கொலை எரிந்த உடல், அடித்துக்கொலை செய்யப்பட்ட உடல், பாலியல் துஷ்பிரயோகம் செய்து இறத்தல். கடலில் வீழ்ந்து கரையொதுங்கிய உடல், கர்ப்பிணித்தாய்மார் இறத்தல் (பிரசவத்தின் முன்பும் பின்பும்) நஞ்சருந்தி தற்கொலை செய்தல் (மருந்து, கிருமிநாசினி) என இதுவரைக்கும் சராசரியாக  4000 உடலங்களைக் கையாண்டுள்ளேன். உடற்கூற்று பரிசோதனை செய்வதிலேயே மிகக்கடினமாகத் தோன்றுவது எரிந்த நிலையில் நீண்ட நாள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இறந்த உடலம் மற்றும் அழுகிய நிலையில் காணப்படும் உடலம் போன்றவையாகும்.

நீதிபதி அல்லது திடீர் மரண விசாரனை அதிகாரியால் வழங்கப்படும் கட்டளைக்கு அமைவாக சட்ட மருத்துவ அதிகாரியினால் உடற்கூற்று பரிசோதனை முன்னெடுக்கப்படும். அந்த வேளையில் சுகாதார உதவியாளர்களாகிய நாம் உடலத்தை எடுத்து முதலில் இறந்தவரின் அடையாளப்படுத்தல் அட்டையை பார்த்து உறுதி செய்த பின்னர் உடற்கூற்று பரிசோதனையை முன்னெடுப்போம். அதன்பின் குறிப்பிட்ட உடலத்தினை உடற்கூற்று பரிசோதனை செய்யும் மேசைக்கு எடுத்துச்சென்ற பின்னர் உடலத்தின் உயரம், தலைமயிரின் நீளம், பற்களின் எண்ணிக்கை, ஆடையின் வகை, நிறம் என்பவற்றை ஆய்வு செய்து வெள்ளைப்பலகையில் எழுதுவோம்.

அதேசமயம் இறந்தவர் தூக்கிட்டு இறந்தவராக இருந்தால் கழுத்தின் சுற்றளவு தூக்குப்போட்ட அடையாளத்தின் அகலம், ஆழம் மற்றும் கயிறு, துணியின் முடிச்சு எந்த பக்கம் உள்ளது, என்ன வகையான முடிச்சு போடப்பட்டுள்ளது என்பதை எழுதிக்கொள்வோம். மேலும் இறந்தவர் கொலை செய்யப்பட்டுள்ளார் எனும் சந்தேகம் எழும் பட்சத்தில் அவரது நகங்களை வெட்டி வலது, இடது எனப்பிரித்து அத்துடன் தலைமுடியையும் மாதிரி பரிசோதனைக்காக எடுத்துக்கொள்வோம். இறந்தவரின் உடலில் ஏதேனும் காயங்கள், எரிகாயங்கள், துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள், அடிப்பட்ட தழும்புகள், கண்டல்கள் ஏதேனும் இருக்கும்பட்சத்தில் குறித்து வைத்துக்கொள்வோம். இதன் பின்னர்தான் உடற்கூற்று பரிசோதனையினைச் செய்யத் தொடங்குவோம்.  பிணவறையில் மருத்துவருக்கு உதவியாக இருக்கும் எம் போன்ற பணியாளர்களின் உதவியுடனேயே மருத்துவர் கத்தியினைக் கையாளுகின்றார். பிரேதப் பரிசோதனை செய்யும் மருத்துவர் சடலத்தை வெட்டிப்பார்த்து பரிசோதனையை மேற்கொள்வார். அப்போதுதான் மரணத்துக்கான உண்மையை ஆராய முடியும். பின்பு உடலுக்குள் இருக்கும் இதயம், இரைப்பை, ஈரல், நுரையீரல், சிறுநீரகங்கள் ஆகியவை வெட்டியெடுக்கப்படும். காவல்துறையினர் பிரேதக்கிடங்கில் பிணத்தை ஒப்புவிக்கும்போதே அவர்களின் மரணவிசாரணையை அறிக்கையாக மருத்துவரிடம் அறிவித்து விடுவார்கள். இறப்பிற்கான சரியான காரணத்தினை அறிந்திருத்தல், நீண்டநாள் நோய் இருந்தல் போன்ற சரியான காரணங்களினை அடையாளப்படுத்தினால் திடீர் மரணவிசாரணை அதிகாரியினாலோ, விடுதிபொறுப்பு வைத்தியராலோ உடற்கூற்று பரிசோதனை செய்யாது உடலங்கள் நேரடியாக உறவினர்களிடமே கையளிக்கப்படும். ஆரம்பத்தில வேலை செய்யும் போது பயம் இருக்கும். இப்ப அதுக்கு இடமேயில்ல. முழுமையான லீவுநாட்கள், வீடுவந்து சேரும் போதுதான் மகிழ்ச்சி என்ற ஒன்று ஒட்டிக்கொள்ளும். பேய் பற்றி நிறைய பேர் கூறியிருக்கிறார்கள். என்னுடைய அனுபவத்தில் நான் காணவில்லை. சக ஊழியர்கள் பேயைக் கண்டதாக வேலையிலிருந்து இடைவிலகிச் சென்ற கதைகளும் உண்டு. மது அருந்தித்தான் உடற்கூற்று பரிசோதனை செய்யவேண்டுமென்ற கட்டாயமில்லை. நாம் அப்படிச் செய்வதுமில்லை. எனது பார்வையில் தற்கொலை என்பது மடமைத்தனமான செயற்பாடாகும். மனவிரக்தியெனின் சரியான உளநல ஆலோசனையைப் பெற்று மீண்டுகொள்ளலாமே ஒழிய முட்டாள்தனமாக தற்கொலை செய்துகொள்ளக்கூடாது. சாவு எங்களைத் தேடிவரணுமே தவிர நாம் சாவைத் தேடிசெல்லக்கூடாது. இறைவனால் படைக்கப்பட்ட உயிரை மாய்ப்பதென்பது என்னைப் பொறுத்தவரை தகுதியற்ற செயல் தான். கொரோனா என்ற சொல்லை உலகம் உச்சரிக்கத் தொடங்கிய ஆரம்ப காலகட்டத்தில் அதன் விளைவுகளை நாம் அறிந்திருக்கவில்லை. கொரோனாவால் பாதிக்கப்பட்ட உடலங்களினை எவ்வாறு கையாள்வது என தகுந்த பயிற்சியானது வைத்திய அதகாரிகளால் ஒரு கிழமை வழங்கப்பட்ட பிற்பாடே கொரோனாவின் தீவிரத் தன்மையினை அறிந்து கொண்டேன். அதனடிப்படையில் அதற்குரிய பாதுகாப்பு பொறிமுறையுடன் உடலங்களை பிணவறைக்கு எடுத்து வருவோம்.  கொரோனாவின் கோரத் தாண்டவம் அதிகரிக்க அதிகரிக்க தகனம் செய்வதற்குக் கூட நாமே செல்லவேண்டிய சூழல் ஏற்பட்டது. கொரோனா மரணங்கள் அதிகரிக்கையில் ஒருவித பயம் எம்மை பற்றிக்கொண்டது. பின்னர் ஒரு நாளைக்கு 7-10 வரையான உடலங்களை எடுக்க வேண்டி நேரிட்டது. அதன் பின்னர் கடமையைச் செய்ய வேண்டுமென்ற உணர்வோடு கொரோனா உடலத்தை எடுத்து தகுந்த முறையில் குளிர்சாதனப்பெட்டியில் வைத்து தகனத்துக்காக அனுப்புவோம். பெருந்தொகையான இறப்புக்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்த வேளையில் அதாவது  20-30 உடலங்கள் இருக்கும் போது அடையாளம் காணுவது மிகவும் சிரமமாய் இருந்தது மற்றும் இறந்தவரின் உறவினர்களுக்கு உடலத்தை கண்ணாடியூடாகக் காட்டும்போது உறவினர்கள் எம்மோடு வாக்குவாதப்படுவதும் எம்மை தாக்க வருவதும் நாம் சந்தித்த பெரிய சவாலாகும். நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளதால் அன்றாட கடமைகளைச் செய்தவண்ணம் இருக்கிறேன் என சிரித்த முகத்துடன் கூறியது இப்போதும் கண்கள் முன்னே வந்து நிழலாடுகிறது.

எல்லா வேலைகளிலும் கடினம், கஷ்டம் உண்டு இந்த வேலை மிகவும் கஷ்டமென எப்போதாவது கூறலாம். ஆனால் இவர்களுக்கு அது பொருந்தாது. கஷ்டம், சகிப்புத்தன்மை, கொடூரம், சோகம், அழுகை, கதறல் என மனிதர்களின் மறுபக்கத்துடன் தொடர்புடையது இவர்களது வாழ்க்கை. அதுவே இவர்களின் வேலைக்கான அடிப்படைத்தகுதியும் கூட. குப்பையள்ளும் வாகனம் சென்றாலே மூக்கை மூடிச்செல்லும் நமக்கு அழுகிய பிணங்கள் உள்ள கிடங்கில் வேலைசெய்யும் இவர்களின் நிலை புரியாது. புரியவும் வாய்ப்பில்லை. நமக்கு தெரிந்தவர்கள் இறந்துவிட்டாலே ஓரிரு நாட்கள் நமக்கான சிரிப்பு, மகிழ்ச்சி எல்லாம் நமக்குள் ஒழிந்துவிடும். தெருவில் மரணம் நிகழ்ந்தால் அந்த தெரு சோகத்துடன் கலை இழந்து காணப்படும். கண்முன்னே சாலையில் ஒருவர் விபத்தில் சிக்கி உயிர் அல்லாடிக்கொண்டிருந்தாலும் அவரை கண்டுங்காணாமல் செல்வதே இந்த சமூகத்தின் இயல்பு.

சவக்கிடங்கிலேயே சவங்களிடையே பொழுதைக் கழித்தாலும் ஓர் உயிரின் மதிப்பினை நம்மை விட இவர்கள் மிக நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள். மரணம் என்றால் இவர்களுக்குள்ளும் ஒரு பயம் இருக்கும். தினம்தினம் பிரேதங்கள், மரண ஓலங்கள் என மரண சத்தத்தில் வாழும் இவர்களுக்கான சிரிப்பும் மகிழ்ச்சியும் ஆகாயத்தில் தோன்றும் அமாவாசைஇ பௌர்ணமி போன்றதுதான்.

# பங்களாதேஷ் எல்லையில் கண்காணிப்பை தீவிரப்படுத்தியது இந்தியா



மேற்கு வங்கம் அருகே துருக்கியில் தயாரிக்கப்பட்ட ஆளில்லா விமானங்களை டாக்கா நிலைநிறுத்தியுள்ளதாக வெளியான தகவலைத் தொடர்ந்து, பங்களாதேஷ் எல்லையில் இந்தியா கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் அரசாங்கத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர், எல்லைப் பகுதிகளில் பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதன் பின்னணியில் இந்த அறிவிப்பு வெளியாகியிருந்தது. இந்திய எல்லைக்கு அருகில் பைரக்தார் ரிபி2 ஆளில்லா விமானங்கள் நிலைநிறுத்தப்படுவது குறித்த அறிக்கைகளை இராணுவம் சரிபார்த்து வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த ஆளில்லா விமானங்கள் உளவுத்துறை, கண்காணிப்பு, உளவுப் பணிகளுக்காக பங்களாதேஷின் 67 ஆவது இராணுவத்தால் இயக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷ் பாதுகாப்பு நோக்கங்களுக்காக இவற்றை இயக்குவதாக கூறினாலும், அத்தகைய மேம்பட்ட ட்ரோன்களை ஒரு முக்கியமான பகுதியில் நிலைநிறுத்துவதன் அவசியம் குறித்தும் கேள்விகள் எழுப்பபட்டுள்ளன.

ஹசீனாவின் ஆட்சிக் காலத்தில் ஒடுக்கப்பட்ட தீவிரவாதக் குழுக்கள், தற்சமயம் இந்திய எல்லைக்கு அருகில் உள்ள பகுதிகளில் மீண்டும் எழுந்துள்ளதாக இந்திய பாதுகாப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. பங்களாதேஷில் நிலவும் அரசியல் ஸ்திரமின்மையை பயன்படுத்தி பயங்கரவாத குழுக்களும், கடத்தல் வலையமைப்புகளும் இந்தியாவுக்குள் ஊடுருவி வருவதாகவும் இவை குறிப்பிடுகின்றன.

நாங்கள் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம், எங்கள் எல்லைகளின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான எதிர் நடவடிக்கைகளை எடுப்போம் என இந்தியாவின் மூத்த பாதுகாப்பு அதிகாரி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## டெல்லியில் தீ விபத்து

சுமார் 400 குடியிருப்புக்கள் அமைந்துள்ள ஷாக்தாரா மாவட்டத்தின் கீதா காலனி ராணி கார்டன் குடியிருப்பு பகுதியில் வெள்ளிக்கிழமை (06) தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதுவரை காயங்கள், விபத்துகள் ஏற்படவில்லையென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் மக்களின் உடைமைகளுக்கு பெருஞ்சேதம் ஏற்பட்டுள்ளதுடன் சில வளர்ப்பு ஆடுகள் இறந்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

சேரியில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து அதிகாலை 2.25 இற்கு வந்த தொலைபேசி அழைப்பினை அடுத்து தீயை அணைக்க 12 தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு மீட்புப் பணிகள் இடம்பெற்றதாக தீயணைப்பு அதிகாரி தெரிவித்துள்ளார். அத்துடன் இதுவரை எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை. விசாரணைக்கு பின்பு இழப்பீடுகள் குறித்து உறுதிப்படுத்த முடியும் என தெரிவித்தார்.

தீ அணைக்கப்பட்டதன் பின்பு மக்கள் சிறிய குடோன்களை அமைத்து தற்காலிகமாக வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## உத்தர பிரதேத்தில் விபத்து 6 பேர் உயிரிழப்பு; 5 பேர் காயம்




உத்தரப்பிரதேச மாநிலம் சித்ரகூடில் கார் , டிரக் மீதுமோதி 6 பேர் உயிரிழந்துள்ளதுடன் 5 பேர் காயமடைந்தனர் என காவல்துறை தெரிவித்துள்ளது.

வெள்ளிக்கிழமை (06) காலை 5:30 மணியளவில் குடும்ப உறுப்பினரின் அஸ்தியை கரைத்துவிட்டு பிரயாக்ராஜில் இருந்து சத்தர்பூரிற்கு திரும்பிக் கொண்டிருந்த 11 பேரை ஏற்றிச் சென்ற கார், டிரக் மீது மோதியதில் விபத்து ஏற்பட்டது.

கார் சாரதியின் கவனயீனத்தால் விபத்து ஏற்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

## ஐரோப்பிய செயற்கைக் கோள்களுடன் விண்ணில் பாய்ந்த இந்திய ராக்கெட்

ஐரோப்பிய விண்வெளி முவர் நிலையத்தின் (ESA) இரு செயற்கைக்கோள்களை சுமந்து செல்லும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோவின் பிஎஸ்எல்வி சி-59 ராக்கெட் வெற்றிகரமாக விண் நோக்கி ஏவப்பட்டது.

ஆந்திர மாநிலம், ஶ்ரீஹரிகோட்டாவில் அமைந்துள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து சுமார் 550 கிலோ எடை கொண்ட பிஎஸ்எல்வி சி-59 மற்றும் ப்ரோபா-3 என்ற செயற்கைக்கோள்களுடன் இந்திய ரொக்கெட் விண்ணில் ஏவப்பட்டது.

ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனம் - நியூ ஸ்பேஸ் இந்தியா நிறுவனம் இடையே அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புதிய ஒப்பந்தத்தின் பின்னர் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சூரியனின் வெளிப்புற வளிமண்டலமான கொரோனா மேற்பரப்பினை பற்றிய துல்லிய ஆய்வுக்காக இந்த செயற்கைக்கோள்கள் விண்ணில் ஏவப்பட்டுள்ளன. இவற்றின் மூலம், ஓர் ஆண்டில் 50 முறை செயற்கையாக சூரிய கிரகணத்தை உருவாக்கி, இந்த ஆய்வு மேற்கொள்ளப்படும். அத்தகைய ஆய்வுகள் ஒவ்வொன்றும் ஆறு மணிநேரத்திற்கு நீடிக்கும்.

சூரிய மண்டலத்தின் விண்வெளிப் பகுதியில் ஏற்படும் வானிலை மாற்றங்களான, சூரியப் புயல், சூரியக் காற்று ஆகியவற்றின் தோற்றுவாயாக இந்த கொரோனா படலம் இருப்பதால், அதை ஆய்வு செய்யும் இந்தத் திட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

மேலும், சூரியனால் வெளியேற்றப்படும் மின்காந்தக் கதிர்வீச்சு, சூரியத் துகள்கள் மூலம் விண்வெளியில் ஏற்படும் நிலைமைகளை அறியலாம். இந்த ஆய்வுத் திட்டம் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குச் செயல்படும். இதன்மூலம், நெருங்கவே முடியாத, அவ்வளவு எளிதில் ஆராய முடியாத சூரியனின் மேற்பரப்பில் இருக்கும் கொரோனா என்ற படலத்தை விஞ்ஞானிகள் ஆய்வு செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## கனமழைக்கான வாய்ப்பு; வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை

தமிழ்நாட்டில் காவிரிபடுகை பகுதிகளில் டிசம்பர் 11 ஆம் திகதி கனமழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகின்ற காரணத்தால், டிசம்பர் 11 ஆம் திகதி மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலும் காரைக்கால் பகுதியில் ஓரிரு இடங்களிலும் கனமழை பெய்யும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 12 ஆம் திகதி கடலோர தமிழகத்தில் அதிக இடங்களிலும் தமிழகத்திற்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள ஒரு சில இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் மிதமான மழை பெய்யக்கூடிய வாய்ப்பு காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அக்னி வீரர்கள் பகவத்கீதை, பைபிள், குர்ஆன் மீது சத்தியப்பிரமாணம்

நாட்டின் எல்லையில் பணிக்கு செல்லும் 570 அக்னி வீரர்கள் அக்னி வீரர்களுக்கான சத்தியப் பிரமாண நிகழ்ச்சி பேரக்ஸ் நாகேஷ் சதுக்கத்தில் வெள்ளிக்கிழமை (06) நடைபெற்றது.

நீலகிரி மாவட்டம் குன்னூர் வெலிங்டன் மெட்ராஸ் ரெஜிமென்ட் சென்டரில் கடந்த 2022ம் ஆண்டு முதல் அக்னி வீரர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இங்கு பயிற்சி பெறும் அக்னி வீரர்கள் நாட்டின் எல்லை பகுதிகளில் பணியாற்றி வருகின்றனர். தற்போது 4வது குழுவின் 570 அக்னி வீரர்கள், ஒழுக்கம், தொழில்முறை முக்கிய பண்புகளுடன் 31 வார கடுமையான பயிற்சியை முடித்துள்ளனர்.

இந்த அக்னி வீரர்களுக்கான சத்தியப் பிரமாண நிகழ்ச்சி பேரக்ஸ் நாகேஷ் சதுக்கத்தில் நடைபெற்றது. உப்பு உட்கொண்டு, தேசிய கொடி, பகவத் கீதை, பைபிள், அல்-குர்ஆன் மீது அக்னி வீரர்கள் சத்தியப்பிரமாணம் செய்தனர். சென்டரின் கமாண்டன்ட் பிரிகேடியர் கிருஷ்ணேந்து தாஸ் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு பயிற்சியில் சிறந்து விளங்கிய 11 பேருக்கு பதக்கம் மற்றும் கேடயங்கள் வழங்கினார். இந்த குழுவினர் நாட்டின் எல்லை பகுதிகளில் பணியாற்ற செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சியில் பெற்றோர் மற்றும் உறவினர்கள், இராணுவ வீரர்கள், அதிகாரிகள் திரளாக பங்கேற்றனர்.






# காசாவுக்குள் கால் வைத்தால்.. பணயக்கைதிகளை கொல்வோம்



## இஸ்ரேலுக்கு ஹமாஸ் பகிரங்க எச்சரிக்கை

கடந்த வருடம் முதல் இடம்பெற்றுவரும் இஸ்ரேல்–ஹமாஸ் இடையேயான போரில் தங்களிடம் உள்ள பணைய கைதிகளை மீட்க இஸ்ரேல் ஏதாவது முயன்றால் நொடியும் யோசிக்காமல் அவர்களைக் கொன்றுவிடுவோம் என்று ஹமாஸ் இயக்கத்தினர் மிரட்டல் ஒன்றை விடுத்துள்ளனர். இதன் காரணமாக அங்குப் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் ஓராண்டிற்கு மேலாக மோதல் போக்கு நிலவி வருவது அனைவருக்கும் தெரியும். இஸ்ரேல்– ஹிஸ்புல்லா இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட போதிலும் இஸ்ரேல்–ஹமாஸ் இடையே இதுபோல எந்தவொரு அமைதி ஒப்பந்தமும் ஏற்படவில்லை.

இதனால் இரு தரப்பிற்கும் இடையே தொடர்ந்து மோதல் போக்கே நிலவி வருகிறது. ஹமாஸ் தலைவர் சின்வார் கொல்லப்பட்ட போதிலும், ஹமாஸை குறிவைத்து இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. காசாவில் உள்ள அப்பாவி பாலஸ்தீனர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் இந்தச் சூழலில் இஸ்ரேலுக்கு எதிராக ஹமாஸ் படை இப்போது பகீர் மிரட்டலை விடுத்துள்ளது.

அதாவது இஸ்ரேல் மீது கடந்த ஆண்டு ஹமாஸ் நடத்திய தாக்குதலில் பலர் பணயக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டனர். அவர்கள் அனைவரும் இப்போது காசாவில் தான் வைக்கப்பட்டுள்ளனர். இதற்கிடையே காசாவில் உள்ள இஸ்ரேல் பணயக் கைதிகளை மீட்கும் நடவடிக்கையை மேற்கொள்ள இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதாக தங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அப்படி எதாவது நடவடிக்கை எடுத்தால் பணயக் கைதிகள் அனைவரும் கொல்லப்படுவார்கள் என்றும் ஹமாஸ் கடுமையான தொனியில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஹமாஸ் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் இஸ்ரேல் பணயக் கைதிகளைக் கொன்றால் என்னவாகும் என்ற விளைவுகள் குறித்து கருத்தில் கொள்ள வேண்டாம் என்றும் தனது உறுப்பினர்களிடம் கூறியிருக்கிறது. இஸ்ரேல் மீட்பு நடவடிக்கை எடுத்தால் மட்டுமே தாக்குதல் நடத்தப்படும் என்றும் அதற்கு இஸ்ரேல்தான் பொறுப்பாகும் எனவும் ஹமாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்..

# குலுங்கியது கலிபோர்னியா:

## மக்கள் பீதி



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டரில் அளவில் 7.0 ஆக பதிவானது. இதனால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இருப்பினும் அது சற்று நேரத்தில் விலக்கிக் கொள்ளப்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் அங்குள்ள கட்டிடங்கள் குலுங்கின. இதனால் மக்கள் பீதியடைந்து வீடுகளை விட்டு வெளியே ஓடி வந்தனர்.

கலிபோர்னியாவின் கடலோர பகுதியான கேப் மெண்டொசினா பகுதியில் இந்த நிலநடுக்கம் கடுமையாக உணரப்பட்டதுடன் சுனாமி எச்சரிக்கையும் விடப்பட்டதால் மக்கள் அச்சம் அடைந்தனர். இதனால் கடலோர பகுதிகளில் உள்ள மக்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர். எனினும் சிறிது நேரத்தில் சுனாமி எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டது.

முன்னதாக நிலநடுக்கத்தால் வீடுகளில் இருந்த பொருட்கள் அதிர்ந்தன. இது தொடர்பான காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது. இந்த நிலநடுக்கத்தையடுத்து பல இடங்கள் இருளில் மூழ்கின. இதனால் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகினர்.

அத்துடன் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டவுடன் கடலொர பகுதிகளில் உள்ள ஹோட்டல்களில் தங்கியிருந்த மக்கள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர். அதேபோல, பலரும் உயரமான கட்டிடங்கள் மீது ஏறி சென்று சுனாமி வருவதற்கான அறிகுறிகள் எதுவும் இருக்கிறதா? என பார்த்தனர். எனினும் சிறிது நேரத்தில் சுனாமி எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டதால் மக்கள் நிம்மதி பெருமூச்சு விட்டனர்.

நிலநடுக்கத்தால் சேதம் எதுவும் ஏற்பட்டதா என்பது குறித்து தற்போது வரை தகவல் எதுவும் இல்லை. மக்களுக்கு தேவையான உதவிகள் செய்ய அவசர குழுவினர் நிலநடுக்கம் உணரப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பட்டுள்ளதாக கலிபோர்னியா மாகாண அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆன்மீக நிகழ்வில்

# தவளை விஷம் குடித்த நடிகை பரிதாபமாக உயிரிழந்த சோகம்!

உடலைத் தூய்மைப்படுத்தும் மதச் சடங்கு ஒன்றில் கலந்துகொண்டிருந்த பிரபல நடிகை மார்செலா இராட்சத இலைத்தவளையின் விஷம் கொண்ட பானத்தைப் குடித்ததால் அவரது உடல்நிலை திடீரென மோசமாகி பரிதாபமாக உயிரிழந்தார்.

ஆனால், பகுத்தறிவு சிந்தனை இல்லாத சடங்குகளை நாம் முழுமையாக நம்பி அதைப் பின்பற்றினால் மோசமான விளைவுகளே இதனால் ஏற்படும். அப்படியொரு மோசமான சம்பவம் தான் இப்போது நடந்துள்ளது.

வட அமெரிக்காவில் உள்ள மெக்சிகோ நாட்டை சேர்ந்த பிரபல நடிகை மார்செலா அல்காசர் ரோட்ரிக்ஸ்.. இவர் மதச் சடங்குகளில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். அங்கு உடலில் இருக்கும் அழுக்குகளை நீக்கும் சடங்கு என்று ஒரு சிலர் வினோத சடங்கை நடத்தியுள்ளனர். அதில் இராட்சத இலை தவளை எனப்படும் அமேசானிய தவளையின் விஷத்தை குடிப்பதே இந்த சடங்காகும்.





இந்த இராட்சத இலை தவளை விஷம் நமது உடலில் சென்று, உடலில் இருக்கும் கெட்ட விஷயங்களை எல்லாம் அழித்துவிடும் என்பதாலேயே அப்படி செய்கின்றனர். ஆனால், அறிவியல் ரீதியாக இதற்கு எந்தவொரு ஆதாரமும் இல்லை. இருந்த போதிலும் நடிகை மார்செலா அந்த பாணத்தை அருந்தியதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில் அந்த பாணத்தை அருந்திய சற்று நேரத்திலேயே அவருக்கு வாந்தி, வயிற்றுப் போக்கு உள்ளிட்ட உடல்நிலை பாதிப்புகள் ஏற்பட்டதுடன் நேரம் செல்ல செல்ல அவரது உடல்நிலை மிக மோசமான நிலைக்கு சென்றது. இதனால் உடன் இருந்தவர்கள் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல அறிவுறுத்தியுள்ளனர். இருப்பினும், தனது உடலை இப்போது சுத்தமாவதாகவும் அதன் ஒரு பகுதியே இது எனச் கூறி அவர் மருத்துவ உதவிக்கு மறுப்புத் தெரிவித் நடிகை டிசம்பர் 1ஆம் திகதி பரிதாபமாக உயிரிழந்தார்.

# வேலைக்கு சென்ற இடத்தில் அடித்த அதிஷ்டம்



## 57 கோடிக்கு அதிபதி

வெளிநாட்டு வேலைக்காக சென்ற இடத்தில் " வாழ்நாள் முழுவதுக்குமான" என்ற வார்த்தையை நிஜமாக்கும் வகையில் இந்தியர் ஒருவருக்கு எதிர்பார்க்காத பணமழை கொட்டியுள்ளது. ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் வேலை செய்து வரும் கேரளாவை சேர்ந்த ஒருவருக்கு அந்நாட்டு லொட்ரி சீட்டிழுப்பில் ரூ.57 கோடி பரிசு கிடைத்துள்ளது. கடை ஒன்றில் விற்பனை பிரதிநிதியாக வேலைக்கு சென்ள அரவிந்த் அப்புக்குட்டன் தற்போது ஒரு கடையே வைக்கும் அளவுக்கு கோடீஸ்வரர் ஆகியுள்ளார்.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் பணியாற்றி வரும்நிலையில் சாரதி உள்பட பல்வேறு தொழில்களில் ஆசிய நாடுகளை சேர்ந்தவர்களே அதிகம் உள்ளனர். குறிப்பாக இந்தியாவில் கேரளா உள்ளிட்ட மாநிலங்களை சேர்ந்தவர்கள் அதிகம் அரபு நாடுகளில் பணியாற்றிவரும் நிலையில் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் பணியாற்றும் கேரளாவை சேர்ந்தவர்களுக்கு இந்த லொட்டரி பரிசும் கிடைத்துள்ளது.

கேரளாவில் லொட்டரி சீட்டுக்கள் விற்கப்படுவது போலவே, ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திலும் லொட்டரி டிக்கெட்டுகள் விற்பனை செய்யப்படுகிறது. இந்த லொட்டரி டிக்கெட்டுகளை அங்கு பணிபுரியும் வெளிநாட்டினரும் வாங்குவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இதில், சில நேரங்களில் லொட்ரியில் முதல் பரிசு அடித்து, அவர்களின் தலைவிதியயே மாற்றிவிடுவதையும் பார்க்க முடிகிறது. அந்த வகையில்தான் தற்போது அபுதாபியில் இந்தியருக்கு ரூ.57 கோடி ரூபாய் பரிசுத்தொகை லொட்டரியில் விழுந்துள்ளது. "வாழ்க்கை முழுவதுக்கு மான" என்ற வார்த்தையை நிஜமாக்கும் வகையில் உண்மையாகவே, வேலைக்கு போன இடத்தில் இந்தியருக்கு எதிர்பார்க்காத பணமழை கொட்டியுள்ளது.

தனக்கு இவ்வளவு பெரிய பரிசுத்தொகை விழுந்துள்ளதால் மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றுள்ள அரவிந்தன், நடப்பது நிஜமா இல்லை கனவா? என நினைக்க முடியாத அளவுக்கு இருப்பதாகவும் கூறிய அவர், எனக்கு லொட்ரியில் பரிசு அடித்து இருப்பதாக எனது நண்பர்தான் போன் செய்து கூறினார். முதலில் அதை நம்பவில்லை.. தற்போது கிடைத்து இருக்கும் பணத்தை கோண்டு புத்திசாலித்தனமாக செலவு செய்ய திட்டமிட்டுள்ளேன்" என்றார்.

## உண்மை முகம் வெளிவந்ததா?

# விஞ்ஞானிகள் உருவாக்கிய நத்தார் தாத்தாவின் புகைப்படம் வெளியீடு

உலகம் முழுவதும் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் களைகட்டி வருகிறது. இந்த கிறிஸ்மஸ் காலத்தில் இரவு நேரங்களில் நத்தார் தாத்தா, குழந்தைகளுக்கு பல பரிசுகளை வழங்கி சுற்றி வருவதை








காண முடியும். அடர்ந்து வளர்ந்த வெள்ளைத்தாடி, வெள்ளை பட்டி வைத்த சிகப்பு நிற வெல்வெட் அங்கி அணிந்த சிரித்த முகம், இவற்றோடு முதுமையை பிரதிபலிக்கும் உடல் அமைப்புடன் வசீகரமாக நத்தார் தாத்தா வலம் வருவார்.

கிறிஸ்தவ பாதிரியாரான நத்தார் தாத்தாவின் உண்மையான பெயர் சாண்டா நிக்கோலஸ். துர்க்கிஸ்தானில் உள்ள மயூரா நகரில் பிறந்த இவர் மலைப்பிரதேசத்தில் பனி நிறைந்த இடங்களில் வசிப்பதாக நம்பப்படுகிறது.

இந்நிலையில் நத்தார் தாத்தாவின் உண்மையான முகத்தை விஞ்ஞானிகள் வெளிப்படுத்தி உள்ளனர். நத்தார் தாத்தாவின் நிஜ வாழ்க்கையானது ஆயரான புனித நிக்கோலசின் மண்டை ஓட்டில் இருந்து அவரது முகத்தை தடயவியல் ரீதியாக மீண்டும் உருவாக்கம் செய்து விஞ்ஞானிகள் பயன்படுத்தி உள்ளனர்.

1950ஆம் ஆண்டில் லூய்கி மார்டினோவோல் சேகரிக்கப்பட்ட தரவுகளை பயன்படுத்தியும், மண்டை ஓட்டை 3டி யில் வரைந்தும் நத்தார் தாத்தா உருவத்தை வடிவமைத்ததாக கூறி உள்ளனர்.

# கண்ணாமூச்சி: பெட்டிக்குள் வைத்து பூட்டியதில் காதலன் மரணம்!

## காதலிக்கு ஆயுள் தண்டனை

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள ஒர்லாண்டோ நகரை சேர்ந்த பெண் சாரா பூன் (வயது 47). இவரும் ஜார்ஜ் டோரஸ் (42) என்பவரும் காதலித்து வந்தனர். ஒரே வீட்டில் வசித்து வந்த இருவரும் கடந்த 2020அம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி வீட்டுக்குள் கண்ணாமூச்சி விளையாடினர். இருவரும் அதீத மதுபோதையில் இந்த விளையாட்டை விளையாடினர். விளையாட்டின்போது தனது காதலனை ஒரு சூட்கேசுக்குள் வைத்து பூட்டினார்.



பின்னர் போதை தலைக்கேறிய நிலையில் சாரா, காதலன் தாமாக சூட்கேசில் இருந்து வெளியே வருவார் என நினைத்துக் கொண்டு தூங்க சென்றுவிட்டார். மறுநாள் காலை எழுந்து காதலனை தேடியபோது அவரை சூட்கேசுக்குள் வைத்து பூட்டியது நினைவுக்கு வந்ததும் பதறியடித்துக் கொண்டு சூட்கேசை திறந்தார். அப்போது ஜார்ஜ் டோரஸ் சூட்கேசு க்குள் பிணமாக கிடந்தார். அத்துடன் அவர் மூச்சு திணறி இறந்தது தெரியவந்தது. இந்த விவகாரத்தில் சாராவை கைது செய்த பொலிஸார் அவர் மீது கொலை வழக்குப்பதிவு செய்தனர். இது தொடர்பான வழக்கு கடந்த 4 ஆண்டுகளாக நடந்து வந்த நிலையில் சாரா மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதையடுத்து அவருக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.




# “மிகப்பெரிய தவறு செய்துவிட்டேன்” கைலியன் எம்பாப்பே புலப்பல்

லா லிகாவில் போட்டியின் சம்பியன்களான ரியல் மாட்ரிட்டின் 2-1 தோல்வியில் முக்கியமான பெனால்டியை தவறவிட்டதால், “பெரிய தவறுக்கு” முழுப்பொறுப்பேற்பதாக கைலியன் எம்பாப்பே கூறினார்.

இதேவேளை, கடந்த வாரம் நடைபெற்ற லிவர்பூலுக்கு எதிரான சம்பியன்ஸ் லீக்கில் போட்டியிலும் எம்பாப்பே தோல்வியடைந்தார். அதைத்தொடர்ந்து தற்போது ஒரு பெனால்டி வாய்ப்பை தவறவிட்டமை தனக்கு வருத்தமளிப்பதாக தெரிவித்துள்ளார்.

ரியல் மாட்ரிட் தோல்வி மற்றும் எம்பாப்பேவின் பெனால்டி தவறவிடப்பட்டமை என்பன சமீபத்திய வாரங்களில் ஏராளமான விமர்சனங்களுக்குப் பின்னர் முன்னாள் பாரிஸ் செயிண்ட்-ஜெர்மைன் ஸ்ட்ரைகரான போட்டி எம்பாப்பேவின் மீது மேலும் அழுத்தத்தை குவிக்கும் என்றே தெரிகின்றது. இது தொடர்பில் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் எம்பாப்பே கூறும்போது ஒவ்வொரு போட்டியும் மிகவும் முக்கியம். அப்படிப்பட்ட ஒரு போட்டியில் நான் மிகப்பெரிய தவறு செய்துவிட்டேன் என தெரிவித்துள்ளார்.



## 2ஆவது டெஸ்ட்: பந்துவீச்சில் இலங்கை சொதப்பல்

# ரிக்கல்டனின் சதத்துடன் தென்னாபிரிக்கா 150/360



தென்னாரிக்காவுக்கு சுற்றுப்பயனம மேற்கொண்டுள்ள இலங்கை கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்று முடிந்த முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில் இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கெபேஹாவில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. இதில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணியின் தலைவர் பவுமா துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார். அதன்படி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. அந்த அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான டோனி - டி - சோர்சி சந்தித்த முதல் பந்திலேயே டக் அவுட் ஆனார். அடுத்ததாக களமிறங்கிய ஸ்டப்ஸ் 4 ஓட்டங்களிலும், மற்றொரு தொடக்க வீரரான எய்டன் மார்க்ரம் 20 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

இந்த இக்கட்டான சூழலில் ஜோடி சேர்ந்த ரியான் ரிக்கல்டன் - பவுமா ஜோடி சிறப்பாக விளையாடிது இந்த இருவரும் அரைசதம் அடித்ததுடன் அதன் பின்பும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பவுமா 78 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அடுத்ததாக களமிறங்கிய பெடிங்காம் வெறும் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து ரிக்கல்டனுடன், ஜோடி சேர்ந்த கைல் வெர்ரைன் நிதானமாக விளையாட ரிக்கல்டன் சதமடித்ததுடன் 101 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார். அவரை தொடர்ந்து களமிறங்கிய மார்கோ ஜோன்சன் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க முதல் நாள் போட்டி முடிவுக்கு வந்தது. இந்நிலையில் முதல் நாள் முடிவில் தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுகளை இழந்து 269 ஓட்டங்களை பெற்றது. இதில் கைல் வெர்ரைன் 48 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். இந்நிலையில் பந்து வீச்சில் இலங்கை அணியின் சார்பில் லஹிரு குமாரா 3 விக்கெட்டுகளையும், அசித பெர்ணாடோ 2 விக்கெட்டுகாலையும் கைப்பற்றியிருந்தனர்.

இந்நிலையில் வெள்ளியன்று ஆரம்பமான 2ஆம் நாள் போட்டியின் முடிவில் தெ.ஆபி 358ஓட்டங்களை பெற்றபோது போட்டி முடிவுக்கு வந்தது. இந்நிலையில் இரண்டாவது இனிங்ஸ் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இலங்கை அணி அன்று மாலைவரை 40 ஓவர்களுக்கு 138 ஓட்டங்களை பெற்றதுடன் 1 விக்கெட்டை இழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விராட் கோலியின் ஆர்சிபி இல்லை...

# ஐ.பி.எல் வரலாற்றில் மிக மோசமான அணி எது தெரியுமா?

( ஆர்.மனோசங்கர்)

ஐபிஎல் கிரிக்கெட் தொடரின் 18வது பதிப்பு அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி முதல் இடம்பெறவுள்ளது. இதற்கான மெகா ஏலம் கடந்த மாதம் 24 மற்றும் 25ஆம் திகதிகளில் நடந்து முடிந்துள்ளது.

ஒவ்வொரு அணிகளும் தங்களுக்கு தேவையான வீரர்களை பெருந்தொகை கொடுத்து வாங்கியுள்ளனர். இந்நிலையில், எதிர்வரும் ஐபிஎல் தொடர் பெரும் எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐபிஎல் வரலாற்றில் மும்பை இந்தியன்ஸ் மற்றும் சென்னை சூப்பர் கிங்ஸ் ஆகிய இரண்டு அணிகள் மிகவும் வெற்றிகரமான அணிகள் என்பது அனைவருக்கும் தெரியும். இவ்விரு அணிகளும் தலா ஐந்து முறை கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது.

ஆனால் ஐபிஎல் வரலாற்றில் அதிக தோல்விகளை சந்தித்து மிகவும் மோசமான அணி என்ற பெயரை ஒரு அணி பெற்றுள்ளது. இது எல்லோரும் எதிர்ப்பார்க்கும் நட்சத்திர வீரர் விராட் கோலி விளையாடு ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் (ஆர்சிபி) இல்லை.

2008 ஆம் ஆண்டு முதல் ஐபிஎல் போட்களில் விளையாடி வந்தாலும், பெங்களூரு அணி இன்னும் பட்டத்தை வெல்லவில்லை. இரண்டு முறை இரண்டாம் இடம்பிடித்துள்ளது.

இந்தியன் பிரீமியர் லீக்கில் மிகவும் மோசமான அணி உண்மையில் டெல்லி கேபிடல்ஸ் ஆகும். டெல்லி அணி இதுவரையில் ஒரு முறை மட்டுமே இறுதிப் போட்டிக்கு தகுதிப் பெற்றுள்ளது.

2020ஆம் ஆண்டு மும்மை அணிக்கு எதிராக இறுதிப் போட்டியில் டெல்லி அணி விளையாடியிருந்தது.

டெல்லி கேபிடல்ஸ் இதுவரை ஐபிஎல் பட்டத்தை வென்றதில்லை என்பதுடன், 2020ஆம் ஆண்டுக்கு பின்னர் கடந்த நான்கு ஆண்டுகளில் பிளேஓப் சுற்றுக்கு கூட தகுதிபெறவில்லை.

உண்மையில், ஐபிஎல் 2020 இல் இறுதிப் போட்டிக்கு தெரிவானதற்கு முன்னர் நான்கு முறை மட்டுமே



(2008, 2009, 2012 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில்) பிளேஓப் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஐபிஎல் தொடரில் அதிக போட்டிகளில் தோல்வியடைந்த அணி

**அப்படியானால் ஐபிஎல்லில் அதிக போட்டிகளில் தோல்வியடைந்த அணி எது?**

இந்த விடயத்தில் ப்ரீத்தி ஜிந்தாவுக்கு சொந்தமான பஞ்சாப் கிங்ஸை டெல்லி கேப்பிட்டல்ஸ் பின்னுக்கு தள்ளியுள்ளது.

இதுவரை 252 போட்டிகளில், டெல்லி கேபிடல்ஸ் (முன்னதாக டெல்லி டேர்டெவில்ஸ்) 134 போட்டிகளில் தோல்வியடைந்து 112 ஆட்டங்களில் வெற்றி பெற்று 44.44 என்ற வெற்றி சதவீதத்தை மட்டுமே பெற்றுள்ளது.

எட்டவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

**ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் சாதனை என்ன?**

பெரிய நட்சத்திர வீரர்களை கொண்ட ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணி இதுவரை ஐபிஎல் கிண்ணத்தை வென்றிருக்கவில்லை என்றாலும், மற்ற இரு அணிகளை விட சற்று சிறந்த சாதனையை அவர்கள் பெற்றுள்ளனர்.

256 போட்டிகளில், 121 ஆட்டங்களில் வெற்றியும், 128ல் தோல்வியும் அடைந்து 47.26 சதவீதத்தை கொண்டுள்ளனர்.

எவ்வாறாயினும், சென்னை சூப்பர் கிங்ஸ் ஐபிஎல் தொடரில் இதுவரை 239 போட்டிகளில் 138 வெற்றிகள் மற்றும் 98 தோல்விகளுடன் மிக வெற்றிகரமான அணியாக உள்ளது.

252 போட்டிகளில் 130 வெற்றிகள் மற்றும் 117 தோல்விகளுடன் நடப்பு சம்பியனர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் இரண்டாவது வெற்றிகரமான அணியாக திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிய கிரிக்கெட் பேரவையின் தலைவராக ஷம்மி சில்வா!



ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் தலைவர் ஷம்மி சில்வா ஆசிய கிரிக்கட் பேரவையின் தலைவராக உத்தியோகப்பூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டுள்ளதாக ACC அறிவித்துள்ளது.

இது தொடர்பில் இன்று (06) அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள ஆசிய கிரிக்கெட் பேரவை (ACC) ஷம்மி சில்வா பல ஆண்டுகளாக ACC யின் நிதி மற்றும் சந்தைப்படுத்தல் குழுவின் தலைவராக பணியாற்றியதால், இந்த பொறுப்புக்கு விரிவான நிபுணத்துவத்தை கொண்டுள்ளார். ஆசிய கிரிக்கெட்டின் முக்கிய நேரத்தில் சில்வா தலைமைப் பொறுப்பை ஏற்கிறார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடிலெய்ட் டெஸ்ட்: ஸ்டொக் அபார பந்துவீச்சு..

# இந்திய அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களுக்கு 180 ஓட்டங்கள்

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி “போர்டர்-கவாஸ்கர்“ கிண்ணத்துக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் பெர்த்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்டில் இந்தியா 295 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்த நிலையில் இந்தியா-அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் பகல்-இரவு போட்டியாக அடிலெய்டு ஓவலில் நேற்று முன்தினம் 9.30 மணிக்கு (இந்திய நேரப்படி) ஆரம்பமானது.

இந்நிலையில் இந்த போட்டிக்கான நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் ரோகித் சர்மா துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார். அதன்படி அவுஸ்திரேலியா முதலில் பந்துவீச ஆரம்பித்தது.



இந்திய அணியின் சார்பில் முதலில் துடுப்பெடுத்தாட ஜெய்ஸ்வால், கே.எல். ராகுல் ஆகியோர் களம் இறங்கினர். முதல் ஓவரை ஆசி வீரர் ஸ்டார்க் வீசினார். தனது முதல் பந்திலேயே அவர் இந்தியாவுக்கு அதிர்ச்சிகொடுத்தார். அதாவது ஸ்டார்க் வீசிய முதல் பந்தில் ஜெய்ஸ்வால் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து கே.எல். ராகுல் உடன் சுப்மன் கில் ஜோடி சேர்ந்தார். சுப்மன் களம் இறங்கியது முதல் தனது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய அதேவேளை கே.எல். ராகுல் நிதானமாக விளையாடி அதன்பின் அடித்து விளையாட தொடங்கினார்.

இந்த ஜோடி சிறப்பாக விளையாடிய நிலையில் இந்தியா 69 ஓட்டங்கள்ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து களமிறங்கிய விராட் கோலி வெறும் 7 ஓட்டங்களுடன் ஏமாற்றம் அளித்தார். இந்த இரண்டு விக்கெட்டையும் ஆசிவீரர் ஸ்டார்க் வீழ்த்தினார்.

மறுமுனையில் விளையாடிய சுப்மன் கில் 31 ஓட்டங்கள் எடுத்த நிலையில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழக்க இந்தியா 81 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 4 விக்கெட்டுகளை இழந்தது.

இந்நிலையில், 5ஆவது விக்கெட்டாக களமிறங்கிய ரிஷப் பண்ட் உடன் ரோகித் சர்மா ஜோடி சேர்ந்தார். இந்தியா 23 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 82 ஓட்டங்கள் எடுத்திருக்கும்போது இரவு உணவு இடைவேளை விடப்பட்டது. ரிஷப் பண்ட் 4 ஓட்டங்களுடனும், ரோகித் சர்மா 1 ஓட்டத்துடனும் களத்தில் இருந்த இந்திய 180 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை சகல விக்கெட்டையும் இழந்தது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 08ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

# ஒருவன்

ஆண்டு : 01 இதழ் : 09 குரோதி வருடம்
கார்த்திகை மாதம் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (08.12.2024)


**ஆளும் தேசிய மக்கள் சக்தியினர் மாகாண சபை ஆட்சி முறையை நீக்குதல் எனும் தோரணையில் கருத்துக்களை கூறி வருவது புதிய பிரச்சினைகளுக்கான வழியினை தோற்றுவித்து விடுமோ என்ற அச்சம் தற்போது எழுந்துள்ளது**

# மாகாண சபை ஆட்சி முறை ஒழிக்கப்படுமா?

# வலுக்கும் தமிழ் - முஸ்லிம்களின் சந்தேகங்கள்!

**வி.ரெட்லி ஹெரிசன்**

மாகாண சபை ஆட்சிமுறை ஒழிக்கப்படுமா? என்ற வாத விவாதங்கள் கடந்த சில நாட்களாக இடம்பெற்று வருகின்றன. நாடாளுமன்றத்திலும் இந்த விடயம் எதிரொலித்துள்ளது. இது விடயமாக மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ராசமாணிக்கம் சாணக்கியன் நாடாளுமன்றில் விசேட கூற்றொன்றை முன்வைத்து கேள்வியொன்றை எழுப்பியிருந்தார். அதற்கு பதிலளித்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க அத்தகைய நிலைப்பாட்டில் அரசாங்கம் இல்லை என பதிலளித்திருந்தார். அதேபோல் அமைச்சரவை கூட்டத்தில் இது தொடர்பாக ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அமைச்சரவை பேச்சாளரான நலிந்த ஜயதிஸ்ஸ மாகாண சபை முறையை நீக்குவதற்கு அரசாங்கம் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை எனவும் அது தொடர்பில் மக்களுடனான கலந்துரையாடலின் பின்னரே புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஆக! இந்த கூற்றுக்கள் மூலம் ஏதோ ஒரு வகையில் மாகாண சபை ஆட்சி முறையில் சில மாற்றங்கள் நிகழவுள்ளமை பூடகமாக தெரிகின்றது. இவற்றை அவதானித்து பார்க்கையில் தமிழ் – முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால நலன் சார்ந்து சில விடயங்களை ஆராய வேண்டியே உள்ளது.

இம்முறை ஜனாதிபதி தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் அமோக வெற்றிகளை ஈட்டிய அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தேர்தல் பிரச்சார பணிகளின் போது இனப்பிரச்சினை தொடர்பில் தாம் எவ்வகையான அணுகுமுறைகளை



கையாளவுள்ளோம் என்ற விடயம் தொடர்பில் அப்போது எவ்வித கருத்துகளையும் கூறாத நிலையில், தற்போது தேர்தல் முடிந்துள்ள கையோடு மாகாண சபை ஆட்சிமுறை நீக்கப்படும் என்பது போன்ற தொனியில் கூறி வருவது தற்போது தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் பாரிய அதிருப்தி அலையை ஏற்படுத்தியுள்ளது.

1987 ஆம் ஆண்டு இலங்கை – இந்திய ஒப்பந்தத்தினூடாக உருவாக்கப்பட்டதே இணைந்த வடக்கு – கிழக்கு என அமைந்த மாகாண சபை ஆட்சிமுறையாகும். அன்றைய நாட்களில் இந்த ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்த ஜே.வி.பி. கட்சியினரே இன்று தேசிய மக்கள் சக்தி எனும் மறு உருவம் எடுத்து ஆட்சி அமைத்துள்ளமை யாவரும் அறிந்ததே. மாற்றம் வேண்டும் என்று எண்ணிய தமிழ் – முஸ்லிம் மக்களில் ஒரு பிரிவினரும் கால ஓட்டத்தில் இவர்களின் நிலைப்பாடுகளில் நல்ல மாற்றங்கள் வரும் என்ற நம்பிக்கையில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியில் தமது பங்கினையும் செலுத்தினர். எனினும், தேர்தல்கள் முடிந்ததையடுத்து இனி மாகாண சபை தேர்தல் நடைபெறும் திகதி எப்போது என எதிர்பார்த்துள்ள நிலையில் மாகாண சபை ஆட்சிமுறையை கேள்விக்குறியாக்கும் விதமாக ஆளும் தரப்பிலிருந்து கருத்துக்கள் வெளிவருகின்றமை, மாற்றத்தை எதிர்பார்த்த மக்களுக்கு ஏமாற்றத்தை தருவதாகவே அமைந்துள்ளது எனலாம்.

இன ரீதியிலும் மத ரீதியிலும் பெரும்பான்மையான மக்கள் வாழும் பகுதிகளாக வடக்கு – கிழக்கு மாகாணங்கள் இருப்பதன் காரணமாகவே அப்பகுதி மக்களுக்கு அதிகாரப்பரவலை வழங்கும் விதமாக மாகாண ஆட்சிமுறை கொண்டுவரப்பட்டது. இதனை அடைவதற்காக தமிழ் – முஸ்லிம் இனங்கள் முகம் கொடுத்த இழப்புக்கள் ஏராளம். இத்தகைய மாகாண ஆட்சி முறையொன்றின் தேவை கருதியே

**“சமஷ்டி” யில் தொடங்கி “தேசியம்” என்ற வார்த்தை வரை எல்லாமே பிரிவினை வாதங்கள் என்ற சாயம் பூசிவருவதன் அடுத்த கட்டமாக “மாகாண சபை” என்ற வார்த்தை கூட பிரிவினைவாதம் என கூறும் நிலை எழக்கூடாது...**



அப்போதைய அரசாங்கம் இணக்கம் தெரிவித்து மேற்படி மாகாண சபை ஆட்சிமுறையை கொண்டு வந்தது. அந்த வகையில் பிந்தி வருகின்ற அரசாங்கங்களும் அதனை மீறாத வகையில் நடந்து கொள்வதற்கான தார்மீக கடமை உள்ளமை மறுக்க முடியாததே.

இத்தகைய சூழ்நிலையில் ஆளும் தேசிய மக்கள் சக்தியினால் மாகாண சபை ஆட்சி முறை நீக்கப்படுமா? என்ற சந்தேகங்கள் புதிய பிரச்சினைகளுக்கான வழியினை தோற்றுவித்து விடுமோ என்ற அச்சம் தற்போது எழுந்துள்ளது. அதிகாரப் பரவலாக்கம் என்பது பிரிவினையின் அடையாளம் என கருதுவதன் காரணமாகவே இத்தகைய அணுகுமுறைகள் கையாளப்படுன்றன எனலாம். ஒருவகையில் பார்க்கையில் இந்த மாகாண ஆட்சி முறையைக்கூட தமிழ் – முஸ்லிம் மக்கள் குறைந்த பட்ச அதிகாரங்களாகவே கருதி வருகின்றனர். அப்படியான ஒரு நிலையில் குறைந்த பட்ச அதிகாரங்களைக் கூட தர விரும்பாத கொள்கையின் தோற்றப்பாடாகவே மாகாண ஆட்சி முறை குறித்த சந்தேகங்கள் அர்த்தப்படுத்தும் நிலையை தோற்றுவித்து விடும்.

நீண்டகால போர் சூழலிலிருந்து மக்களை காக்கும் நோக்கிலேயே 1987 ஆம் ஆண்டில் இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதில் இரண்டு அரசாங்கங்களினதும் தனிப்பட்ட நலன்கள் அடங்கியிருந்த போதிலும் தமிழ் – முஸ்லிம் சமூகங்களுக்கு குறைந்த பட்ச அதிகாரமாவது உள்ளதே என்ற ஒரு



ஆறுதலையாவது இந்த ஒப்பந்தம் தான் தந்து கொண்டிருந்தது, இதில் கூட எத்தனையோ அதிருப்தி தரும் விடயங்கள் உள்ளன என்ற நிலையில் பலத்த இழுபறிகள் இற்றை வரையில் தொடர்ந்த வண்ணமே இருந்து வந்துள்ளது. அந்த அதிருப்திகளுக்கான காரணம் இந்த



மாகாண ஆட்சி முறையில் போதிய அதிகாரங்கள் இல்லை என்பதும், இதில் இணக்கம் காணப்பட்டுள்ள அதிகாரங்கள் கூட முறையாக வழங்கப்படவில்லை என்பதுமான குற்றச்சாட்டுக்களாகவே இருந்து வந்துள்ளன. அந்தவகையில் பார்க்கையில் சிங்கள மக்கள் கூட பெரிதாக எதிர்ப்புக்களை காட்டாத நிலையில் தேசிய மக்கள் சக்தி அல்லது ஜேவிபி யினர் கடிவாளம் தம் கையில் உள்ளதென்பதற்காக பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தின் தேவைகளை சரிவர கணிக்காது எழுந்தமானமாக தீர்மானங்களை எடுக்கக்கூடாது என்பதே அநேகரின் கருத்தாக உள்ளது எனலாம்.

அப்படி அல்லாமல், மாகாண சபை ஆட்சிமுறையை ஒழித்து விட்டு மாற்று தீர்வுகளை நாடுவோம் என கூறுவார்களானால் அது மீண்டுமொரு காலம் கடத்தல் நடவடிக்கையின் ஆரம்பமாகவே பார்க்கப்படும். தமிழ் – முஸ்லிம் சமூகங்கள் நீண்ட காலமாக காத்திருத்தல் மூலமாக காலத்தை கடத்திய ஒரு சமூகமாகும். இவ்வாறு சலிப்படைந்துள்ள அந்த சமூகத்திடம் மீண்டும் தொடக்கத்திலிருந்து ஆரம்பிக்கின்றோம் என கூறும் நிலையை ஆட்சியாளர்கள் ஏற்படுத்துவார்களேயானால் ஆட்சி காலம் முடியும் வரையில் அவை வெறும் செய்தித் தலைப்புக்களாகவும், இனவாதிகளுக்கு தீனி போடுபவையாகவும் மட்டுமே அமைந்திடும்.

கடந்த கால அரசாங்கங்கள் விட்ட தவறுகள் மீண்டும் தொடரக்கூடாது என்பதற்காகவே மாற்றம் நாடி மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் மக்கள் இந்த அரசாங்கத்தை தெரிவு செய்துள்ளார்கள். புதிய ஆட்சி என ஒன்று அமையும் போது அதில் சில ஆரம்ப கால தலம்பல்கள் ஏற்படுவது சகஜமே,ஆனால் , இங்கு இயல்பான ஒரு தளம்பல் நிலை இருப்பதாக தோன்றவில்லை, மாறாக வலியவே ஒரு இக்கட்டான சூழ்நிலையொன்றை தோற்றுவித்து அதனூடே இனப்பிரச்சினைக்கான தீர்வையோ அல்லது அதிகாரப் பரவலாக்கல் முனைப்புகளையோ முடங்கிவிடச் செய்ய எத்தனிப்பதாகவே அது நோக்கப்படும்.

இவ்வாறான ஒரு நிலை எழுமாயின் அது வீணே வெளிநாட்டு தலையீடுகளுக்கு வழிவகுப்பதாகவும் அமையும். குறிப்பாக மாகாண சபை ஆட்சிமுறையை ஏற்படுத்திக் கொடுத்த இந்தியா இந்த விடயத்தில் தமது கரிசனையை காட்ட முயலலாம், அல்லது தமிழ் – முஸ்லிம் தரப்பினர் இந்தியாவிடம் இது தொடர்பில் முறையீடு செய்ய முயற்சிக்கலாம். அவ்வாறான நிலையில் இது கடைசியில் உள்நாட்டில் மீண்டும் இனரீதியிலான பிளவுகளை உயிர்ப்பிக்கக்கூடிய நிலையை தோற்றுவிக்கும் நிலை எழலாம்.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இணைந்திருந்த வடக்கு – கிழக்கு மாகாணசபை ஆட்சி முறையை நீதிமன்றத்தினூடே பிரிப்பதற்கு காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் ஜேவிபி யினர் தான். அதன்படி பார்க்கையில் புரிந்தோ புரியாமலோ மாகாண சபை ஆட்சி முறையை அவர்கள் ஒப்புக்கொள்வதாகவே அது அமைந்ததாக வாதிட முடியும். ஆக, அரைமனதுடனாவது ஏற்றுக்கொள்ளப்பட்ட மாகாண சபை ஆட்சிமுறையை மேலும் பலப்படுத்துவதே சமயோசிதமாகும். இல்லையேல், “சமஷ்டி “ என்ற வார்த்தையில் தொடங்கி “தேசியம் “ என்ற வார்த்தை வரை எல்லாமே பிரிவினை வாதங்கள் என்ற சாயம் பூசிவருவதன் அடுத்த கட்டமாக “மாகாண சபை“ என்ற வார்த்தையை பிரயோகிப்பது கூட பிரிவினைவாதம் என கூறும் நிலையை ஏற்படுத்தி விடக் கூடாது.

---

# இளசுகளின் ‘ட்ரெண்ட்’

முன்னரெல்லாம் திசையருவி கருவியைக் கொண்டு பாதை தேடிப்போன ஒரு காலம் இருந்தது. ஆனால், இன்றோ மொபைல் ஃபோனை வைத்துக்கொண்டு சுற்றுமுற்றும் பார்க்காமல் வீதியெங்கிலும் நடந்துத் திரியும் இளசுகளை காணமுடிகின்றது. உற்றுப்பார்த்தால் தான் தெரியும் அவர்கள் பார்ப்பது ஃபேஸ் புக், யூடியூப், டிக்டொக் போன்றவை தான். வாகனங்கள் ஹோர்ன் அடித்தாலும் இவர்களின் காதுகளில் அது கேட்பதில்லை



இரவென்றாலே, இரவின் மடியில் என கூறிக்கொண்டு மென்மையான பாடல்களை ரசித்த காலமொன்று இருந்தது. ஆனால், இப்போதோ இரவென்றாலே கத்தலோ கத்தல், இரைச்சலோ இரைச்சல் என வருகின்ற உறக்கத்தையும் இல்லாமல் செய்யும் பாடல்களே கேட்கப்படுகின்றன.. கேட்டால் இது தான் ட்ரெண்ட் என்பார்கள். ஆக இதுதான் உறங்காத தலைமுறை என்பதோ .. ?

மாமியார் கையிலிருந்த சாவிக்கொத்து மருமகள் கைக்கு போனது போல், இப்போதெல்லாம் வீடுகளில் டீ.வி. ரிமோட் கொன்ட்ரோல் இளசுகளின் கைகளில் தான் உள்ளன. அவர்கள் எதனை பார்க்கின்றனரோ அதனை தான் பெரியவர்களும் பார்க்க வேண்டும்.. ஆக மொத்தத்தில் வீடுகளுக்குள்ளும் ஒருவித ஆக்கிரமிப்பு..

ஃபெஷன் – என்பது இளம் சமுதாயத்திற்கென அறிமுகமாவதாகும்.. ஆனால், வயதில் மூத்தவர்கள் சிலர் இதனை புரியாமல் இளசுகளின் ஆடைகளை உடுத்திக்கொண்டு அலங்கரித்து திரிவது இன்று பலரின் ஏளனத்திற்கும் நகைப்பிற்கும் ஆளாகியுள்ளது. இளசுகளுக்கு உரியதை இளசுகளுக்கே விட்டு விடுவோம்.



ஃபாஸ்ட் ஃபுட் தான் இன்றைய இளசுகளின் அபிமான உணவு .. அதுவே அவர்களுக்கு விருப்பு ..சத்தான உணவுகள் அவர்களுக்கு வெறுப்பு.. மொத்தத்தில் “ஃபாஸ்ட் ஃபுட் “ நாவின் சுவை நரம்புகளை அறுத்து விட்டுள்ளன போலும்..

மொபைல் ஃபோனில் மெசேஜை சுருக்கமாக தட்டுத்தட்டி இப்போது பலருக்கும் ஆங்கில எழுத்துக்கூட்டல் மறந்து போய்விட்டது.. இதுவும் ட்ரெண்ட் ரகத்திற்குள் தான் சேரும் போலும்..

வீதி ஓரங்களில் இன்று பரவலாக இலைக்கஞ்சி விற்பனை நடப்பதை காணக்கூடியதாக உள்ளது.. இலைக்கஞ்சியை பருக வருவோரில் அநேகர் நடுத்தர வயதை தாண்டியவர்களே.. இளசுகளை ஆசைக்குக்கூட இங்கு காண முடிவதில்லை.. பெக்கெட் சிற்றுண்டிகள் மற்றும் பெக்கெட் பானங்களை விற்கின்ற இடங்களில் தான் அவர்களை காணலாம்.. இதுவும் ட்ரெண்ட் தான் போங்கள்..

– ரிஷா –

# எழுத்தாளருக்கு ஏற்பட்ட சந்தேகம்



புதிதாக ஆரம்பிக்கப் போகும் பத்திரிகை ஒன்றுக்கு எழுத்தாளர்களைத் தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சை நடந்து கொண்டிருந்தது. பத்திரிகையின் ஆசிரியர் நேர்முகப்பரீட்சையை நடத்திக்கொண்டிருந்தார். அங்கு பலர் வருகை தந்திருந்தனர்

அவ்வேளையில், நேர்முகப் பரீட்சைக்கு வந்திருந்த எழுத்தாளர் ஒருவரிடம் ஆசிரியர் கேட்டார், "நீங்கள் என்னவெல்லாம் எழுதி இருக்கிறீர்கள்?"

**எழுத்தாளர்:** நிறைய நிறைய எழுதி இருக்கிறேன்.

**ஆசிரியர்:** அப்படியா? என்னென்ன பத்திரிகைகளில் உங்களுடைய ஆக்கங்கள் வெளிவந்திருக்கின்றன?

**எழுத்தாளர்:** ஒன்றில் கூட வரவில்லை.

**ஆசிரியர்:** ஏன் அப்படி?

**எழுத்தாளர்:** நான் எந்தப் பத்திரிக்கைக்கும் அனுப்புவதில்லை.

**ஆசிரியர்:** ஏன் அப்படிச் செய்கிறீர்கள்?

**எழுத்தாளர்:** ஒரு முறை நான் எழுதிய கதையை எடுத்துக்கொண்டு பத்திரிகை அலுவலகமொன்றுக்குச் சென்றேன்.

**ஆசிரியர்:** அங்கு என்ன நடந்தது?

**எழுத்தாளர்:** அந்தப் பத்திரிகை ஆசிரியர் நான் எழுதிய கதையைப் பார்த்துவிட்டு இனிமேல் நீ பேனாவை தொடுவதைக் கண்டால் உன் கையை உடைத்து விடுவேன். போ வெளியே என்று ஏசி அனுப்பிவிட்டார்.

**ஆசிரியர்:** (நினைவு): ஓஹோ! இவர் ஒரு புரட்சிகரமான இலட்சிய எழுத்தாளராக இருக்கக்கூடும். இவரின் புரட்சிகர கருத்துக்கள் அந்த ஆசிரியருக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது. அதனால்தான் இவரை அப்படி ஏசி அனுப்பி இருக்கிறார். நம்முடைய பத்திரிகை புதியது. அதில் புரட்சிகர கருத்துக்களை எழுதும் எழுத்தாளர்களின் படைப்புக்களை போட்டால்தான் பத்திரிகைக்கு வெகு சீக்கிரமே வாசகர்களின் ஆதரவு கிடைக்கும்"

இப்படி நினைத்துக் கொண்டவர், "சரி அதற்குப் பின் நீங்கள் எழுதுவதை விட்டுவிட்டீர்களா?"

**எழுத்தாளர்:** இல்லை இல்லை எழுதுவதை ஒரு போதும் விடமாட்டேன். எழுதிக் கொண்டுதான் இருக்கிறேன்.

**ஆசிரியர்:** சரி, எழுதி அவற்றை என்ன செய்கிறீர்கள்?

**எழுத்தாளர்:** கசக்கிக் குப்பையில் போட்டுவிடுவேன்.

**ஆசிரியர்** (நினைவு): "அப்படியானால் நான் நினைத்தது சரி. தன் உள்ளக் கிடக்கைகளை எழுத வேண்டுமென்று ஆசைப்படுகிறார். அதே சமயத்தில் அவற்றை பத்திரிகைகள் ஏற்றுக் கொள்ளாது என்று நினைத்து குப்பையில் போடுகிறார். அப்படியானால் இவர் ஆத்ம திருப்திக்காக எழுதுகிறார். இப்படிப்பட்ட இலட்சியவாதிகள்தான் நமக்குத் தேவை. என்று நினைத்தவர் பின்னர் கேட்டார், "சரி இதுவரை உங்கள் பெயர் எந்தப் பத்திரிகையிலும் வரவில்லையா?"

**எழுத்தாளர்:** அதுவந்து..., ஒரே ஒரு பத்திரிக்கையில் எனது பெயர் வந்திருக்கிறது.

**ஆசிரியர்:** அப்படியா? அது எந்தப் பத்திரிக்கை?

**எழுத்தாளர்:** அது வந்து...,

**ஆசிரியர்:** சொல்லுங்கள்

**எழுத்தாளர்:** எனது திருமண பத்திரிக்கையில்

**ஆசிரியர்:** நீங்கள் பிரமாதமான எழுத்தாளர்தான். போய் வாருங்கள்.

**எழுத்தாளர்:** நான் எப்பொழுது வர வேண்டும்?

**ஆசிரியர்:** வந்தால் காலை உடைத்து விடுவேன். இனி இங்கே வர வேண்டாம்.

**எழுத்தாளர்** (நினைவு): என்னடா இது? அந்த ஆசிரியர் பேனாவைத் தொட்டால் கையை உடைப்பாராம். இவர் வந்தால் காலை உடைப்பாராம். கை காலை உடைப்பதுதான் இவர்கள் வேலையோ? ஒன்றும் புரியவில்லையே!

மனம் நொந்தபடி திரும்பிச்செல்கிறார்.



# 132 வருட பழைமைமிக்க கையெழுத்துச் செய்தி!



**209** வருடகால பழைமைமிக்க ஸ்கொட்லேண்ட் கலங்கரை விளக்கத்தில் ஆய்வு நடத்திய பொறியியலாளரும், அவரின் குழுவினரும் அங்கிருந்து 132 வருடகால பழைமைமிக்க கையெழுத்துச் செய்தி ஒன்றை போத்தலில் அடைக்கப்பட்ட நிலையில் கண்டுபிடித்தனர்.

றொஸ் ரஸல் என்னும் இந்தப் பொறியியலாளர் குழு சுவரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த போத்தலை கயிற்றையும், தும்புத்தடியையும் உபயோகித்து வெளியில் இழுத்து எடுத்தனர்.

"இது ஒரு புதையல் வரைபடமாக இருக்குமோ என்று நாங்கள் மிகவும் கவனமாக வெளியே எடுத்தோம்" என்று அவர்கள் நகைச்சுவையாகக் கூறினர்.

ஆனால் அந்த செய்தியில் செப்டம்பர் 4,1892 திகதி இடப்பட்டு சில பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன..

# உலகின் பழைமைமிகு இசைக்கருவி



உலகில் பலவிதமான இசைக்கருவிகள் உள்ளன. ஆனால், உலகில் முதன் முதலில் தோன்றிய இசைக்கருவி எதுவென்று தெரியுமா?

அதுதான் புல்லாங்குழல். உலகின் மிகவும் பழைமையான இசைக்கருவி புல்லாங்குழல்தான் என்று புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். பறவையின் எலும்பு, மிருகங்களின் தந்தம் என்பவற்றால் செதுக்கப்பட்ட புல்லாங்குழல்களை கிழக்கு ஜெர்மனியில் உள்ள குகை ஒன்றிலிருந்து புதைபொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இவற்றை ஆய்வு செய்த விஞ்ஞானிகள் இந்தப் புல்லாங்குழல்கள் 42 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் செய்யப்பட்டவை என்று கூறியுள்ளனர்.

இந்து சமயத்தின் முதன்மைக் கடவுளான கண்ணன் புல்லாங்குழல் வைத்திருப்பதை படங்களில் காண்கிறோம்.

இதுவரையான காலகட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புல்லாங்குழலில் பழைமையான புல்லாங்குழலானது, ஓர் இளம் குகைக் கரடியின் தொடை எலும்பால் ஆனதாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

பழைய இலக்கியங்களில் இசைக்கருவி பற்றிய ஏராளமான குறிப்புக்கள் உண்டு. சங்க இலக்கியங்களும் குழல் பற்றிப் பேசுகின்றன. சிலப்பதிகாரத்தில் குழல்களைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது.

குழல் என்றால் புல்லாங்குழல் என்று அர்த்தம். யாழ் செயற்கை வாத்தியம். குழல் இயற்கை வாத்தியம்.

**"குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர்"** என்று வள்ளுவர், முதலில் குழலைச் சொல்லிவிட்டுப் பிறகு யாழைச் சொல்லுகின்றார்.

"அடுத்த பிறவியிலயாவது நான் கரப்பான் பூச்சியா பிறக்கணும்னு ஆசப்படுறேன்"

"ஏன் அப்பிடி?"

"என் மனைவி அது ஒன்னுக்குத் தானே பயப்படுறா..."






# நியூசிலாந்து கடற்கன்னி "பனியா"

பனியா (Pania) என்பது மாவோரி புராணங்களில் காணப்படும் ஒரு கற்பனை உருவம் ஆகும். பனியா குறித்து நியூசிலாந்தில் ஒரு பழங்கதை வழக்கத்திலுள்ளது. அந்தக் கதை இதுதான்...

பனியா – நியூசிலாந்தின் வடக்குத் தீவின் கிழக்குக் கடற்கரை கடலில் வாழ்ந்த ஒரு அழகான கன்னிப் பெண்ணாவாள். பகல் நேரத்தில் இவள் தனது பாறை உலகின் உயிரினங்களுடன் நீந்தி வருவாள். ஆனால், சூரியன் மறைந்தவுடன் நேப்பியர் நகரத்தின் விரிகுடாவில் ஓடும் நீரோடைக்குச் செல்வாள். இவள் ஆளி புதர்களுக்கு இடையில் ஓய்வெடுக்கக்கூடிய ஒரு பகுதிக்கு ஓடை வழியாக பயணிப்பாள்.

பனியா ஓய்வெடுக்கும் ஓடையின் நீர் இனிமையானதாக இருந்ததால், மாவோரி தலைவரின் மிக அழகான மகனான கரிடோகி, ஒவ்வொரு மாலையும் தனது தாகத்தைத் தணித்துக் கொள்ள அங்கு வருகிறான். பல வாரங்களாக பனியா தன்னைக் கவனித்துக் கொண்டிருப்பது அவனுக்குத் தெரியாது. ஒரு நாள் இரவு வரை அவள் மந்திரம் ஒன்றைச் சொல்கிறாள். அது கரிடோகியை காற்றில் பறக்கச் செய்கிறது. பின்னர் தனது மறைவிடத்திலிருந்து பனியா வெளிப்படுகிறாள்.

கரிடோகி, அழகான பனியாவை கண்டதும் காதலில் விழுகிறான். இவர்கள் இருவரும் இரகசியமாகத் திருமணம் செய்து கொள்கின்றனர். இரவு நேரத்தில் பனியாவை கரிடோகி தனது வீட்டிற்கு அழைத்துச் செல்கிறான். இருட்டாக இருந்ததால் அவர்கள் உள்ளே நுழைவதை யாரும் பார்க்கவில்லை. சூரிய உதயத்தில், பனியா வெளியேறத் தயாராகிறாள். ஆனால் கரிடோகி அவளைத் தடுக்க முயல்கிறான். கடலின் ஒரு உயிரினமாக வாழும் பனியா கடலுக்குள் செல்லாவிட்டால், தன்னால் உயிர்வாழ முடியாது என்று விளக்குகிறாள். தான் தினமும் மாலை திரும்பி வருவதாக உறுதியளித்து கடலுக்குத் திரும்புகிறாள்.

கரிடோகி தனது அழகான மனைவியைப் பற்றி தனது நண்பர்களிடம் பெருமையாகக் கூறுகிறான். அவர்கள் யாரும் அவளைப் பார்த்ததில்லை என்பதால் அவனை நம்பவில்லை. அதனால் விரக்தியடைந்த கரிடோகி கிராமத்தில் உள்ள கௌமாதுவா (அனுபவமிக்க பெரியவர்) ஒருவரைக் கலந்தாலோசிக்கிறான்.

அவர் கடல் கன்னிகள் இருப்பதை அறிந்ததால், கரிடோகியை நம்புகிறார். அவள் ஒரு கடல் உயிரினமாக இருப்பதால், சமைத்த உணவை விழுங்கினால், பனியா கடலுக்குத் திரும்பச் செல்லமாட்டாள் என்று கரிடோகியிடம் கூறுகிறார்.

அன்று இரவு பனியா உறங்கும் போது, கரிடோகி சமைத்த உணவை எடுத்து பனியாவின் வாயில் வைத்து விடுகிறான். அப்போது, ஓர் ஆந்தை உரத்த எச்சரிக்கை விடுக்கிறது.

தூக்கத்திலிருந்து எழுந்த பனியா கரிடோகி தன் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தியதால் திகிலடைந்து தப்பி ஓடி கடலுக்குள் சென்று விடுகிறாள். கரிடோகி கடலுக்குள் நீந்தி சென்று அவளைத் தேடுகிறான். ஆனால் அவனால் அவளை மீண்டும் பார்க்க முடியவில்லை.

இது கதை.

இப்போது, பாறையின் மேல் உள்ள தண்ணீருக்குள் ஆழமாகப் பார்க்கும் போது, பனியா கைகளை நீட்டிய நிலையில் இருப்பதை பார்க்க முடியும் என்று நியூசிலாந்து மக்கள் தெரிவிக்கின்றனர். நியூசிலாந்தின் நேப்பியர் நகரத்தில் பனியாவுக்கு ஒரு சிலை அமைக்கப்பட்டுள்ளது.



# வேற்றுக்கிரக வாசிகளால் கால்நடைகள் அழிக்கப்படுகின்றனவா?

## பண்ணையாளர்களை அச்சுறுத்தும் மர்மம்



1970களிலிருந்து அமெரிக்காவில் பல பண்ணையாளர்களை அச்சுறுத்தி வரும் கால்நடைகள் அழிவுக்குக் காரணம் வேற்றுக் கிரகவாசிகளின் வருகையாக இருக்குமா அல்லது ஏதேனும் சமய சடங்குகளா என்று அவர்களை கலங்க வைத்துள்ளது.

விஞ்ஞானிகள் சிலர் ஓநாய் போன்ற ஓர் உருவமே இந்த கால்நடைகளை அழித்து வருவதாக அடையாளம் கண்டுள்ளதாகத் தெரிவித்தனர். அமெரிக்காவின் கன்சாஸ் முதல் நோவா மற்றும் ஒரேகன் வரையான பல மாநிலங்களிலுள்ள பண்ணையாளர்கள், தமது கால்நடைகள் மர்மமான முறையில் அழிவுற்று வருவதாக தெரிவித்துள்ளனர். இந்த கால்நடைகளின் இனப்பெருக்க உறுப்புகள், கண் என்பன அறுத்து எடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்ட கால்நடைகளில் ஒரு சொட்டு இரத்தமேனும் இருப்பதாக தெரியவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். வேற்றுக்கிரகவாசிகள் தான் இந்த கால்நடைகளை குறிவைத்து அவற்றின் அங்கங்களை அறுத்து எடுப்பதாகவும், அப்பகுதியிலிருந்து இரத்தத்தை வடித்து எடுப்பதாகவும் இவர்கள் நம்புகின்றனர்.

வேற்றுக்கிரகவாசிகளைப் பற்றிய அச்சம் ஏற்பட்டு இருக்கும் நிலைக்கு மத்தியில் முன்னாள் பண்ணையாளர் ஒருவர், அதிநவீன வலையமைப்பு மூலம் மனிதர்களால் இந்தப் பசுக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கருத்து தெரிவித்திருக்கிறார். மார்சல் என்பவர் கொல்லப்பட்ட ஐந்து பசுக்களில் அவற்றின் நாக்கு அறுத்தெடுத்திருப்பதைக் காண முடிந்தது என்றும் இது மிருக அங்கங்களை வைத்து சடங்குகள் செய்பவர்களால் நடத்தப்பட்டதாக இருக்கும் என்று கருதுவதாகவும் கூறினார்.

விலங்குகளுக்கு, செயல்படா தன்மையை ஏற்படுத்தும் நஞ்சு ஒன்றை அவர்கள் பயன்படுத்துவதாகவும், இதன் காரணமாக இந்த மிருகங்கள் செயல்படாத நிலையில் இருக்கையில் அவற்றை இலகுவாகக் குறி வைத்து தமது நோக்கத்தை அவர்கள் நிறைவேற்றிக் கொள்வதாக நம்புவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, வேற்றுக்கிரகவாசிகள் இங்கு வருகை தருவதைத் தாம் உறுதியாக நம்புவதாக சிலர் தெரிவித்தனர். பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் பல மாநிலங்களில் கொல்லப்பட்டுள்ளதாகவும் அவற்றில் இரத்தமற்ற நிலையே காணப்படுவதாகவும் பலரும் தெரிவித்தனர்.

# சந்திரிகாவை பிரதமராக்கிய ஜே.ஆர்; அதற்கு துணை போன ரணிலின் தந்திரம்

## அரசியல் களத்தில் அந்த நாளில் என்ன நடந்தது?

எம்.ஐ.முபாறக்

அதிகார போதை என்பது உறவு – இனம் – நட்பு என எதையும் பார்க்காது. பதவிக்காக எதையும் செய்யத்தக்கதே அதிகார போதை என்பதாகும். உதாரணத்திற்கு அவ்வாறு பல சம்பவங்கள் உள்ளன.. அவ்வாறானவற்றுள் ஒன்றுதான் பின்வரும் சம்பவமாகும்.

1977 இல் அறுதிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்த ஐக்கிய தேசிய கட்சி அரசு 1993 இல் ஆர். பிரேமதாசவின் கொலையுடன் ஆட்டங் காணத் தொடங்கியது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் சந்திரிகாவின் மீள் நுழைவே இதற்குக் காரணம். அப்போது ஐ.தே.க அரசு மீதான மக்களின் அதிருப்திக்கு சரியான மாற்றுத் தீர்வாக அமைந்திருந்தார் சந்திரிகா.

அதற்கமைய, சுதந்திர கட்சியின் தலைமையிலான கூட்டணி கட்சியாக களமிறங்கிய பொதுஜன முன்னணி, சந்திரிகா தலைமையில் மாகாண சபைத் தேர்தலை எதிர்கொண்டது. இந்தத் தேர்தலில் ஐ.தே.க வின் வசமிருந்த பல மாகாணங்கள் சந்திரிகா தரப்பின் வசமாகியது. இதன்படி மேல் மாகாண முதலமைச்சரானார் சந்திரிகா. அடுத்து இடம்பெறவிருப்பது ஜனாதிபதி தேர்தலா... நாடாளுமன்றத் தேர்தலா? என்ற கேள்வி எழுந்தது. ஆனால், ஒரு சிக்கல். என்ன அது? பொதுஜன முன்னணியின் தலைவராக இருப்பவர் சந்திரிக்காவின் தாயாரான சிறிமாவோ பண்டாரநாயக்க. எதிர்கட்சித் தலைவரும் அவரே. அவர் தலைவராக இருக்கும் போது சந்திரிகா எப்படி களமிறங்குவது? ஒருவேளை சிறிமா களமிறங்கினால் என்ன செய்வது? நிச்சயம் தோல்விதான். ஐக்கிய தேசிய கட்சி ஆட்டம் காணத் தொடங்கியிருந்தமையால் அடுத்து இடம்பெறப் போகும் எந்தத் தேர்தலாக இருந்தாலும் அதில் ஐக்கிய தேசிய கட்சிக்குத் தோல்விதான் என்ற நிலையே இருந்தது. ஆனால், சந்திரிகா போட்டியிட்டால் மாத்திரமே ஐக்கிய தேசிய கட்சியைத் தோற்கடிக்க முடியும். சிறிமா போட்டியிட்டால் அவ்வளவுதான். நிச்சயம் வெல்ல முடியாது. சிறிமாவுக்கு வயதாகிவிட்டது. அவருக்கான மக்கள் செல்வாக்கும் சரிந்திருந்தது.

மாகாண சபைத் தேர்தலில் சந்திரிகாவை இறக்கியதன் மூலம்தான் பொதுஜன முன்னணியால் வெல்ல முடிந்தது. ஆகவே, அடுத்து வரும் தேர்தல்களில் எப்படியாவது சந்திரிகாவையே களமிறக்க வேண்டும். இதுதான் சந்திரிகா தரப்பின் நிலைப்பாடாக இருந்தது. ஆனால், சிறிமாவோ தான்தான் போட்டியிட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தார்.

இதன் காரணமாக அந்தக் கட்சிக்குள் சிறிமா அணி, சந்திரிகா அணி என இரண்டு அணிகள் உருவாகின. சிறிமாவின் மகன் அனுர பண்டாரநாயக்ககூட தாயாருக்கு சார்பாகவே இருந்தார். ஆனால், ஜனாதிபதி வேட்பாளருக்கு சந்திரிக்காதான் தகுதியானவர் என்ற பிரசாரம் சந்திரிகா ஆதரவு ஊடகங்கள் மூலம் நாடு முழுவதும் பரப்பப்பட்டது. இருப்பினும் சிறிமா தனது நிலைப்பாட்டை அறிவித்தார். ஜனாதிபதி தேர்தலில் நான்தான் போட்டியிடுவேன் எனவும், வெற்றிபெற்ற பின்னர் நாடாளுமன்றத்துக்கு அதிகாரத்தை வழங்குவேன் எனவும் அவர் அறிவித்தார்.

இதனால் சிறிமா – சந்திரிகா பதவி போட்டி உக்கிரமடைந்தது. சிறிமாவுக்கு இருவர் பக்க பலமாக இருந்தனர். ஒருவர் எதிர்க்கட்சி செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, மற்றையவர் எயார் வைஸ் மாஷல் ஹறி குணதிலக்க. இவர்களை வளைத்துப் போடுவதற்கு இவர்கள் இருவர் மீதும் குறிவைத்தது சந்திரிகா தரப்பு.

இந்த நிலையில், சிறிமாவுக்கு காலில் சிறியதோர் பிரச்சினை ஏற்பட்டிருந்தது. அதற்கு சிகிச்சை பெறுவதற்காக சிங்கப்பூர் செல்லத் தயாரானார் சிறிமா. செல்வதற்கு முன்னர் திவயின பத்திரிகையில் ஒரு பேட்டி வழங்கியிருந்தார். தேர்தலில் தான் போட்டியிடுவது உறுதி எனவும், வென்ற பின்னர் அடுத்த கட்டமாக செய்யப்போவது என்ன எனவும் அந்த பேட்டியில் சிறிமா தெரிவித்திருந்தார். இதனால் சந்திரிகா தரப்பு கலவரமடைந்தது.

### அரசியல் பின்னோக்கு

**ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி அமைத்தால் அதன் தலைவராக இருக்கும்காமினிதான்பிரதமராகநியமிக்கப்படுவார்.அதுமட்டு மல்ல, அடுத்து இடம்பெற வேண்டிய ஜனாதிபதி தேர்தலில் பிரத மராக இருக்கும் காமினிதான் வேட்பாளராக நிறுத்தப்படு வார், வெற்றியும் அடைவார். இதை ரணில் விரும்பவில்லை. இத னால் சந்திரிக்கா பிரதமராக வேண்டும் என்று விரும்பினார் ரணில்...**

உடனடியாக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்க ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்தார். அந்த ஊடக சந்திப்பில் சிறிமாவின் பிரத்தியேக செயலாளர் விக்டர் உனந்தவும் கலந்து கொண்டார். குறித்த பேட்டி தொடர்பாக சிறிமாவிடம் தான் தொலைபேசி அழைப்பில் பேசியதாகவும், அவ்வாறு எந்தவொரு பத்திரிகைக்கும் பேட்டி கொடுக்கவில்லை என சிறிமா கூறியதாகவும் அவர் தெரிவித்தார். இதைக் கேட்டதும் கலவரமடைந்தார் நந்தசேன சூர்யாராய்ச்சி. அவர் தான் 'திவயின' பத்திரிகை சார்பாக பேட்டி எடுத்த ஊடகவியலாளர் ஆவார். உடனே அவர் "நான்தான் சிறிமாவின் இந்தப் பேட்டியை எடுத்தேன், அவர் கூறிய விடயங்கள்தான் அதில் உள்ளன" எனவும் தெரிவித்தார். இதனால் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டது. இந்தக் குழப்பத்தை தீர்ப்பதற்கு முடிவெடுத்தார் சுதந்திர கட்சியின் செயலாளர். ஊடக அறிக்கை ஒன்றை அவர் விடுத்தார்.

### ஐ.தே.க. வின் வீழ்ச்சியும் சந்திரிகாவின் எழுச்சியும்..!

அதில், "ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் எந்த முடிவும் எடுக்கவில்லை எனவும், அது குறித்து உரிய நேரத்தில் முடிவெடுப்போம்" எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். இதைக் கேள்விப்பட்ட சிறிமா கோபமுற்றார். சிங்கப்பூரிலிருந்து தொலைபேசி அழைப்பு எடுத்து செயலாளர்மீது பாய்ந்தார் சிறிமா.







இந்த சந்தர்ப்பம் பார்த்து, ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க நாடாளுமன்றத்தை கலைத்தார். தேர்தலுக்கு இன்னும் ஒரு வருடம் இருந்த நிலையிலேயே இவ்வாறு நாடாளுமன்றத்தை அவர் கலைத்திருந்தார். இந்த நிலையில், சுதந்திர கட்சி தரப்பு ஜனாதிபதி வேட்பாளர் பிரச்சினையை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முகம் கொடுக்கத் தயாராகியது.

சிறிமா நாட்டில் இல்லாத நிலையில் இந்தத் தேர்தல் தொடர்பில் சுதந்திர கட்சி உயர்பீடம் தீர்மானமொன்றை எடுத்தது. அதாவது, இந்தத் தேர்தலை சந்திரிக்காவின் தலைமையில் எதிர்கொள்வது என்பதே அந்தத் தீர்மானமாக அமைந்தது. இதேவேளை, லலித் இறந்ததும் விஜயதுங்கவின் அழைப்பின்பேரில் கட்சிக்குள் மீண்டும் திரும்பிய காமினி திசாநாயக்க கட்சித் தலைவராகவும் நியமிக்கப்பட்டிருந்தார் .

இந்தத் தேர்தலில் சந்திரிகா தரப்பிலான பொதுஜன முன்னணி 105 தொகுதிகளை கைப்பற்றியது. ஐக்கிய தேசியக் கட்சி 94. ஆனால், ஏனைய கட்சிகளின் எம்பிக்களை வளைத்துப்போட்டு நாடாளுமன்ற ஆட்சியை அமைக்கும் முயற்சியில் காமினி இறங்கினார். வெற்றிபெற்ற கட்சியை ஆட்சி அமைப்பதற்கு வருமாறு ஜனாதிபதி அழைக்க வேண்டும். ஆனால், காமினியின் ஆட்சி அமைக்கும் முயற்சிக்கு தடங்கலை ஏற்படுத்துகின்றார் ஒருவர். அவர் வேறு யாருமல்ல, அது ரணில் விக்ரமசிங்க தான்.அதன்போது பிரதமராக இருந்தவர் ரணில்.

ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியை அமைத்தால் அதன் தலைவராக இருக்கும் காமினிதான் பிரதமராக நியமிக்கப்படுவார். அதுமட்டுமல்ல, அடுத்து இடம்பெற வேண்டிய ஜனாதிபதி தேர்தலில் பிரதமராக இருக்கும் காமினிதான் வேட்பாளராக நிறுத்தப்படுவார். வெற்றியும் அடைவார். இதை ரணில் விரும்பவில்லை. இதனால் சந்திரிகா பிரதமராக வேண்டும் என்று விரும்பினார் ரணில். இதற்காக உடனடியாக தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்த ரணில் தான் தங்கி இருந்த அலரிமாளிகையில் இருந்தும் உடனடியாக வெளியேறினார். காமினிக்கு இது கடும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.

ரணிலின் இந்த பதவி விலகல் வேலையால் சந்திரிகா தரப்பு ஒரு சிக்கலைத் தாண்டியாகிவிட்டது. இருந்தாலும் இன்னொரு பிரச்சினை... அது என்ன? ஆட்சி அமைக்குமாறு ஜனாதிபதி பொதுஜன முன்னணிக்கு அழைப்பு விடுத்தால் யாரை அழைப்பது? கட்சியின் தலைவி சிறிமாவையா அல்லது பிரதி தலைவி சந்திரிகாவையா ? இதுதான் பிரச்சினை. இதனை எவ்வாறு தீர்ப்பது? யோசிக்கிறது சந்திரிகா தரப்பு. அப்போது ஒரு யோசனை பிறக்கின்றது. அதுதான் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆரின் ஊடாக உதவியைப் பெறுதல் என்ற திட்டமாகும்.

ஜே.ஆரை வைத்து எப்படி உதவி பெறுவது? அவர்தான் ஐக்கிய தேசிய கட்சி ஆளாச்சே..? ஆனால், அவரை வளைப்பதற்கு ஒரு வழி இருந்தது. அதுதான் சிறிமாவுக்கும் ஜேஆருக்கும் இடையிலான பகை. ஜே.ஆர். ஜனாதிபதியாக இருந்தபோது சிறிமாவின் பிரஜா உரிமையை அவர் பறித்தார் அல்லவா? இப்போது சிறிமாவைப் பிரதமராக்கினால் ஓய்வில் இருக்கும் ஜே.ஆரை சிறிமா பழிவாங்குவார், அதிலிருந்து தப்புவதற்கு இருக்கின்ற ஒரே வழி சந்திரிக்காவை பிரதமராக்குவதுதான். இதை கூறித்தான் ஜே.ஆரை வளைக்க திட்டமிட்டது சந்திரிக்கா தரப்பு. இதற்கு முன்வருகிறார் திருக்குமார் நடேசன்.

யார் இந்த நடேசன்...??? இவர் மஹிந்த ராஜபக்ஸவின் உறவுக்கார பெண்ணும் – முன்னாள் எம்பியுமான நிருபமா ராஜபக்சவின் கணவர். இவர் ஜே.ஆருடன் மிகவும் நெருக்கமானவர்.,அவர்தான் அழைத்துச் செல்கிறார் சந்திரிகாவை ஜே.ஆரிடம். மேற்படி விடயத்தை விளக்கிச் சொல்கிறார் ஜே.ஆரிடம்.

அச்சம் பிடிக்கிறது ஜே.ஆருக்கு. உண்மைதான்... சிறிமா பிரதமரானால் தனக்கு எதிராக ஏதாவது செய்வார். அதைத் தடுப்பதென்றால் ஒரே வழி சந்திரிகா தரப்பு சொல்வதுபோல் சந்திரிகாவை பிரதமராக்குவதுதான் என்பதை உணர்கிறார். உடனே, ஜனாதிபதி விஜயதுங்கவுக்கு தொலைபேசி அழைப்பை எடுக்கிறார் ஜே.ஆர்.

நிலைமையை விளக்குகிறார். நிலைமையைப் புரிந்துகொண்ட விஜயதுங்க, தன்னிடம் சந்திரிகா குழுவினரை அனுப்புமாறு கூறுகிறார். பின்னர் என்ன...? இத்தோடு முடிகிறது எல்லாப் பிரச்சினையும். பிரதமராக சத்திய பிரமாணம் செய்கிறார் சந்திரிகா. என்னதான் தாய் –மகள் உறவாக இருந்தாலும் அரசியலில் பதவி என்று வரும்போது நீ யாரோ நான் யாரோ என்ற நிலைதான் ஏற்படும் என்பதை இந்த வரலாற்று சம்பவத்தில் இருந்து புரிந்துகொள்ள முடிகிறது.

## 78 ரெயில் என்ஜின்கள் வருடக் கணக்கில் பழுது பார்ப்பின்றி பயனற்று கிடக்கின்றன



பழுது பார்ப்புப் பணிகளுக்காக அனுப்பப்பட்ட 78 ரெயில் என்ஜின்கள் ஒரு வருடத்திற்கும் ஏழு வருடங்களுக்கும் இடைப்பட்ட காலமாக எவ்வித திருத்தங்களும் மேற்கொள்ளப்படாமல் கராஜ்களிலோ அல்லது இரத்மலானை பழுது பார்ப்பு தளத்திலோ வைக்கப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரயில்வே திணைக்களத்தில் M Class என்ஜின்கள் 103 உள்ளன, அவற்றில் 47 என்ஜின்கள் பழுதுபார்ப்பதற்காக சேவையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளன. இதில் M Class இயந்திரமொன்றின் பெறுமதி 15 முதல் 765 மில்லியன் ரூபா எனவும் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 08 முதல் 218 மில்லியன் ரூபா பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட M Class இயந்திரங்கள் 133இல் 31 இயந்திரங்கள் பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்டு ஏழு வருடங்களுக்கு மேலாகியும் அவை பழுதுபார்க்கப்படாமல் பழுது பார்ப்பு இடங்களில் வைக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி கணக்காய்வு மூலம் தெரியவந்துள்ளது.

2019 ஆம் ஆண்டு ரெயில்வே திணைக்களம் 7650 மில்லியன் ரூபாவை செலவு செய்து M 11 வகை என்ஜின்கள் கொண்ட 05 என்ஜின்களை தொழிற்பாட்டிலிருந்து அகற்றி பழுதுபார்ப்பதற்காக அனுப்பியது. M Class ரக என்ஜின்களின் செயல்திறன் உயர்ந்த நிலையில் காணப்பட்டாலும், சமீபத்தில் கொள்வனவு செய்யப்பட்ட என்ஜின்களின் செயல்திறனானது தொழில்நுட்ப மற்றும் பிற காரணங்களினால் செயலிழந்துள்ளதாகவும் கணக்காய்வு அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிலிண்டரில் நம்பிக்கை இழந்துள்ள மொட்டு கட்சியினர்; அரசியல் எதிர்காலத்திற்கான வழிகள் குறித்து ஆராய்வு

அண்மையில் பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களில் சுமார் ஐம்பது பேர் உறுப்பினர் ஒருவரின் கொழும்பிலுள்ள வீட்டில் ஒன்று கூடி அரசியலில் எதிர்கால வேலைத்திட்டம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரது ராஜகிரியவிலுள்ள இல்லத்திலேயே இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது. எஸ்.பி. திஸாநாயக்க, ரமேஷ் பத்திரன, காஞ்சன விஜேசேகர, பிரேமநாத் சி தொல வத்த, பிரசன்ன ரணதுங்க, மஹிந்தானந்த அலுத்கமகே உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

"சிலிண்டருக்கு எதிர்காலம் இல்லை. இனி சிலிண்டருடன் இந்தப் பயணத்தை செல்ல முடியாது, எனவே, புதிய அரசியல் கூட்டணியொன்றை நாம் உருவாக்க வேண்டும். இப்போதுள்ள அனைத்து அரசியல் கூட்டணிகளும் புதுப்புதுப் பிரச்சினைகளை உருவாக்கியுள்ளன. இனிமேல் சுதந்திர கட்சியையோ, மொட்டுக் கட்சியையோ நம்ப முடியாது...", எதிர்க்கட்சிகள் ஒற்றுமையாக இருக்க வேண்டும், பழமை சிந்தனைகளுடன் எதிர்கால பயணத்தை மேற்கொள்ள முடியாது. புதிய சிந்தனைகள் கொண்டவர்கள் மற்றும் ஆற்றல் மிக்க இளம் சந்ததியினரை இணைத்துக் கொள்ள வேண்டும். அப்படியானால் எதிர்க்கட்சிகளின் சக்திகளை ஒன்று திரட்டி புதிய பயணத்தை மேற்கொள்ளும் அரசியல் கூட்டணியொன்றை உருவாக்க ஆலோசிக்க வேண்டும்." போன்ற கருத்துக்கள் இங்கு பரிமாறப்பட்டன. இவ்வாறு நிறுவப்படும் குழுவின் தலைவராக ரமேஷ் பத்திரன பெயரிடப்பட்டார். ஆனால், ஒரு சட்டபூர்வமான உடன்பாட்டை கொண்டதாக இந்த கூட்டணி ஆரம்பிக்கப்படல் வேண்டும் எனவும் இணக்கம் காணப்பட்டது. அதற்கமைய பிரேம்நாத் சி தொலவத்த மற்றும் மதுர விதானகே ஆகிய இருவரும் கூட்டணி அமைப்பதில் உடன்பாடுகளை காண்பதற்கான சட்டங்களை இயற்றுவது தொடர்பான ஆவணங்களை தயாரிக்கும் பொறுப்பிற்கு நியமிக்கப்பட்டனர்.







இங்கு ஒவ்வொரு முன்னாள் எம்.பி.க்கும் உரையாற்றும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அவர்கள் அனைவரும் தாம் எவ்விடத்தில் தவறிழைத்தோம் என்ற நிலையிலிருந்தே உரையாற்றினார்கள். மேலும், அவர்கள் அனைவரும் காஞ்சன விஜேசேகரவை தேசிய பட்டியல் மூலமாக நாடாளுமன்றத்திற்கு அனுப்புமாறு முன்னாள் ஜனாதிபதியை வற்புறுத்துவதெனவும் இணக்கம் கண்டனர்.

**அத்தியாயம் 4**

பூங்குழலியைத் தேடிச்சென்ற தீபன், காட்டுக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தான். காட்டை விட்டு அவனால் வெளியேற முடியவில்லை. அப்போது அவனுக்கு ஒன்று புரிவதுபோல் இருந்தது. அதாவது பெரிய காடுகளில் ஒருவகை செடி இருக்குமாம். அதை தப்பித் தவறி மிதித்துவிட்டால் வழிதவறிவிடுமாம். பின்னர் யாராவது வந்து காப்பாற்றினால்தான், வழியை கண்டுபிக்க முடியுமாம். இல்லாவிட்டால் காட்டுக்குள்ளேயே அலைந்து திரியவேண்டியதுதானாம்.

நாமும் அப்படி எதையாவது மிதித்திருப்போமோ என்ற சந்தேகம் தீபனுக்கு ஏற்பட்டது. நேரம் செல்லச்செல்ல அவனுக்கு பயமாகவும் இருந்தது. கொடிய மிருகங்கள் பேய் பிசாசுகள் என்று பல எண்ணங்கள் ஏற்பட்டன.

இருள் சூழ்ந்துகொண்டிருந்தது.

அப்பொழுது..., அவனுக்கு முன்னால் பயங்கர சிரிப்புச் சத்தம் ஒன்று கேட்டது. அதிர்ச்சியுடனும், திகிலுடனும் அவன் சுற்றுமுற்றும் நோக்கினான்.

சிரிப்புச்சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்த தீபன் அங்கே அந்த இரண்டு முரடர்கள் நிற்பதைக் கண்டான். பூங்குழலிக்கு என்ன நடந்தது என்ற அச்சத்தில் அவன் அவர்களை நோக்கினான். அவளுக்கு ஏதும் ஆபத்து ஏற்பட்டிருக்குமோ என்று அவன் பயந்தான்.



ஆர். ராஜலிங்கம்

# கனவில் வந்த காரிகையைத் தேடி...?

"ஏன்டா உனக்கு என்ன துணிச்சல்? என் தங்கையோடு பழகுவதை விட்டுவிடு. இல்லையெனில் உன்னை முடித்துவிடுவேன்"

அவன்தான் பூங்குழலியின் அண்ணன் வரதன் என்று தீபன் புரிந்துகொண்டான். அதனால் அவன் சொன்னான்,

"நீங்கள் நினைப்பது போல் நான் தவறாக ஏதும் நடக்கவில்லை. உங்கள் தங்கையும், நானும் உயிருக்குயிராக நேசிக்கிறோம். உங்கள் தங்கையை நான் முறையாக திருமணம் செய்து கொள்கிறேன்"

"அது ஒருபோதும் நடக்காது. அவளை என் உற்ற நண்பனுக்கு திருமணம் செய்து வைப்பதாக வாக்களித்திருக்கிறேன். இதோ இவன்தான் அந்த நண்பன். அவளை மறந்துவிடு. என்ன புரிகிறதா?"

தீபன் முடியாது என்பதுபோல் தலையை ஆட்டினான்.

"என்ன நெஞ்சலுத்தமடா உனக்கு?" என்று பூங்குழலியின் அண்ணன் சொன்னான். அப்பொழுது மற்றவன்,

"மச்சான் இவனை இனியும் விட்டுவைப்பது நல்லதல்ல. இங்கேயே முடிச்சிடவேண்டியதுதான்" என்றவன் தீபன் சற்றும் எதிர்பாராத நிலையில் அவன் தலையில் ஒரு கட்டையால் ஓங்கி அடித்தான்.

தீபன் தடுமாறி விழுந்த நிலையில் அவர்கள் இருவரும் அவனை காலாலும், கையாலும் மாறி மாறி தாக்கினார்கள்.

தீபன் குற்றுயிராகத் துடிதுடித்துக் கொண்டிருந்தான். அவனால் எழுந்து நடமாடவும் முடியவில்லை. குற்றுயிராகக் கிடந்த தீபனைப் பார்த்து இருவரும் பேசிக்கொள்வது அவன் காதுகளில் நன்றாகக் கேட்டது.

"மச்சான் இவன் இன்னும் கொஞ்சநேரத்தில் செத்துப்போய்விடுவான். இவனை இப்படியே விட்டுட்டுப் போனா நாம மாட்டிவிடுவோம்" என்றான் அவன் நண்பன்.

"அப்ப என்ன செய்யலாம்னு சொல்ற?"

"எனக்கு ஒரு யோசனை தோன்றுது"

"என்ன அது?"

"இந்தக் காட்டுக்கு மத்தியில இருக்கே கருங்குகை?"

"ஆமா அது ரொம்ப பயங்கரமான இடம்னு சொல்றாங்க?"

"ஆமா. இவனை அங்க கொண்டுபோய்....!"

"சரி சரி அதுபற்றி பிறகு யோசிப்போம்"

"அதுசரி நாம அங்கிருந்து தப்பி வரணுமே?"

"அதுக்கெல்லாம் பயப்படாத. நாம ரெண்டுபேர் இருக்கோம்தானே?"

இருவரும் சேர்ந்து அவனை தூக்கிக்கொண்டு காட்டின் மத்திய பகுதிக்குச் சென்றனர். அங்கு மரங்கள் அடர்ந்த பகுதியில் அந்தக் குகை தென்பட்டது.

"இதுதான் மச்சான் கருங்குகை. இங்கு நிறையப்பேர் கொல்லப்பட்டிருக்காங்க. இதை பேய்க்குகை என்றும் சொல்றாங்க" என்றவன்,

"சரி வா உள்ளே இவனை தூக்கிட்டுப்போவோம்" என்று வரதனை அழைத்தான்.

இருவரும் சேர்ந்து தீபனைத் தூக்கிக்கொண்டு குகைக்குள் சென்றனர்.

"சரி மச்சான் இந்த இடம் இவ்வளவு பயங்கரமா இருக்கே. இதை எப்படி கண்டுபிடிச்ச?"

"எல்லாம் அனுபவம்தான். உனக்குத் தெரியுமா இது என்ன இடம் என்று?"

"தெரியல மச்சான். சொல்லு"

"அதாவது மச்சான் நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பு மரண தண்டனைக் கைதிகளை இங்கு கொண்டுவந்துதான் தண்டனையை நிறைவேற்றுவாங்களாம். இதுக்குள்ள ஒரு பாறை இருக்கு. அதுதான் கொலைக்களம்"

"அப்படியா?"

"ஆமா அதற்குமேல மரண தண்டனைக் கைதியை வச்சு கழுத்தை வெட்டி கொல்வாங்களாம்"

"ஆ! கேட்கவே பயமா இருக்கு மச்சான்"

"பயப்படாத, இவனுக்கும் நாம் அப்படித்தான் தண்டனை வழங்கவேண்டும். அப்பதான் நாம் தப்பலாம்"

குற்றுயிராகக் கிடந்த தீபனுக்கு அவர்கள் பேசிக்கொள்வது காதில் நன்கு விளங்கியது. "இவர்களிடமிருந்து தப்பமுடியாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால், கோழையாக செத்துவிடக்கூடாது. எதிர்த்துப்போராடவேண்டும்"என்று மனதில் தீர்மானித்துக்கொண்டான்.

குகைக்குள் ஒரு கற்பாறைக்குன்று தெரிந்தது. நண்பன் அதனை வரதனுக்குக்காட்டி "மச்சான் அதோ தெரியுது பார் கற்பாறை"

"ஆமா அதுக்கு எனனா இப்ப?"

"அதுதான் மச்சான் கொலைக்களம். அதுல வச்சிதான் மரணதண்டனைய நிறைவேற்றுவாங்களாம். செத்துப்போன கைதிகளோட எலும்புகள், எச்சங்கள்கூட இன்னும் அங்கு கிடக்குதாம்"

"அப்படியா மச்சான்?"

"அது மட்டும் இல்ல. இந்தக் குகைக்குள்ள ஏதோ அமானுஷ்யங்கள் எல்லாம் நடப்பதாக சொல்றாங்க"

"அமானுஷ்யங்களா?"

"ஆமா பயங்கர சத்தம் வருமாம். தலை இல்லாத முண்டம் நடமாடுமாம். இன்னும் எத்தனையோ மர்மங்கள் இருப்பதாக பேசிக்கொள்றாங்க"

"இவ்வளவு பயங்கரமான இடத்துக்கு போய் ஏன் மச்சான் என்னை கூட்டிட்டு வந்த?"

"நாம நெனைச்ச காரியத்தை முடிக்கணும்னா வந்துதான் ஆகணும். இவனை இப்ப அங்கதான் கொண்டுபோகப் போறோம்"

"எங்க மச்சான்?"

"அதுதான் சொன்னேனே கொலைக்களம். அங்கதான்"

"ஆனா பயமா இருக்கே மச்சான்"

"பயந்துகிட்டிருந்தா சரிவராது. சீக்கிரமா காரியத்தை முடிச்சிட்டு வந்திருவோம்"

அதன்பின்னர் அவர்கள் இருவரும் விரைந்து செயல்பட்டார்கள். இருவருமாக சேர்ந்து தீபனை தூக்கிக்கொண்டு சென்றார்கள்.

குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும் "மச்சான் இதுதான் கொலைக்களம்" என்று கூறி அதனைக் காட்டினான்.

அவன் காட்டிய இடத்தில் ஒரு பாறைக்குன்று இருந்தது. அதற்குமேல் தீபனைக் கிடத்தினார்கள். அவன் முன்னர் கூறியதுபோலவே அங்கு ஒரு பழங்கால பயங்கர கத்தி சாய்த்து வைக்கப்பட்டிருந்தது.

"மச்சான் அதோ கிடக்குது பார் மரணதண்டனைய நிறைவேற்ற பயன்படுத்திய கத்தி. அதை எடுத்து இவன் கதைய முடிப்போம்" என்றபடி போய் கத்தியை எடுக்கமுயன்றான். ஆனால், கத்தியை தூக்கமுடியவில்லை. அவ்வளவு பாரமாக இருந்தது.

"மச்சான் இது ரொம்ப பாரமா இருக்கு. வா ரெண்டுபேருமா சேர்ந்து தூக்கி காரியத்தை முடிச்சிடுவோம்"

இருவருமாக சேர்ந்து கத்தியை தூக்கிக் கொண்டு தீபனின் அருகில் வந்தார்கள்.

பின்னர், "சரி மச்சான் காரியத்தை முடிப்போம்" என்றபடி கத்தியை ஓங்கினார்கள்.

அப்பொழுது...? சரேலென தீபன் எழுந்து அவர்கள் மீது பாய்ந்தான் அவர்கள் இதனை சற்றும் எதிர்பார்க்கவில்லை. தடுமாறி விழுந்தனர். அடுத்த கணமே இருவரும் சுதாகரித்துக்கொண்டு எழுந்து தீபனைத் தாக்கலானார்கள். தீபனும் சளைக்காமல் அவர்களை உக்கிரமாகத் தாக்கினான்.

(தொடரும்...)

## குறுக்கெழுத்துப் போட்டி - 05

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | 4 | ■ | 5 |
| 6 | | ■ | | ■ | | ■ | |
| 7 | | 8 | | ■ | 9 | | |
| | ■ | | ■ | ■ | | ■ | |
| | ■ | 10 | | 11 | ■ | 12 | |
| 13 | | ■ | ■ | 14 | | | ■ |
| ■ | ■ | 15 | | | ■ | ■ | 16 |
| 17 | | | ■ | | ■ | 18 | |

**இடமிருந்து வலம்**

01. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று.
06. ஒப்புதல் சொல்லாகவும் பயன்படும். (திரும்பி)
07. திடகாத்திரமான தோற்றத்தைக் குறிக்கும்.
09. முகில் திரண்டு இருத்தலைக் குறிக்கும். (குழம்பி)
10. காதுக்கு இனிமை தருவது.
12. தூய்மைக்கு உதாரணமாகவும் இதனைக் கூறுவர்.
13. பறவைகளின் இல்லத்தைக் குறிக்கும். (திரும்பி)
14. கோபம் என்றும் பொருள்படும். (திரும்பி)
15. பழைமையைக் குறிக்கும்.
17. மழை நீரால் ஏற்படும் சிறு நீர் நிலையையும் இப்படிக் கூறுவர்.
18. நோய் என்றும் சொல்லலாம்.

**மேலிருந்து கீழ்**

01. அடர்ந்த இருளைக் குறிக்கும்.
02. இது ஒன்று போனால் வயது ஒன்று போகும். (குழம்பி)
03. இதன் அளவே ஆகுமாம் குணம் என்பது ஔவை வாக்கு. (குழம்பி)
04. உடல் ஆரோக்கியத்துக்கு இதுவும் தேவையாம்.
05. பாரம்பரிய காதல் சின்னம்.
08. வெற்றிலையுடன் சேர்த்துக் கொள்வது. (குழம்பி)
11. திருமணத்தை நகைச்சுவையாக இப்படியும் கூறுவார்கள்.
12. நீர் தாவரம் ஒன்று.
13. சேனை என்றும் சொல்வர்.
16. ஓசை தருவது.

**உங்கள் பதில்களை தபால் அட்டையில் ஒட்டி பெயர், முகவரியுடன் எமக்கு அனுப்பி வைக்கலாம்.**

ஒருவன் வாரவெளியீடு, ஆசிரியர் பீடம், பெல்லாட்ரிக்ஸ் கட்டிடம், 2ஆம் மாடி, டெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு - 09

## சென்ற வாரத்திற்கான விடை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | மு | 2 த | சு | 3 ர | 4 பி | ■ | 5 பி |
| றி | ■ | ங் | ■ | 6 வி | ழை | ■ | ல் |
| 7 வா | க் | கு | று | தி | ■ | 8 ப | லா |
| ளி | ■ | த | ■ | ய | ■ | டு | ■ |
| ■ | 9 ஆ | டை | ■ | 10 ம் | 11 ட | ன் | 12 அ |
| 13 சீ | ர் | ■ | 14 வ | ■ | னை | ■ | ந் |
| ■ | 15 க | ம | ம் | ■ | ண் | ■ | த |
| 16 வே | லி | ■ | 17 பு | த் | த | க | ம் |

## பாராட்டுப் பெறுவோர்

எம்.சுமையா, கந்தானை.
கே.ஸ்ரீ ஹாசினி, மன்னார்.
தி.இளங்கோவன், கொழும்பு.
திருமதி ஹஸீனா, வவுனியா.

# நன்மை கடலினும் பெரிது

மனமே
சுபா



"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலின் பெரிது" என்றார் திருவள்ளுவர்.

அதாவது, என்ன பயன் கிடைக்கும் என்று எண்ணிப் பார்க்காமல், நாம் ஒருவருக்கு செய்த உதவியின் பலனானது, கடலை விடப் பெரியதாம். ஆம்... நாம் பிரதிபலன் பாராது செய்யும் உதவி, நமக்கு சரியான நேரத்தில் மிகப்பெரிய நன்மையை ஏற்படுத்திக் கொடுக்கும்.

இந்தவகையில் நான் உணர்ந்த ஒரு நிகழ்வை எடுத்துக்காட்டாகக் கூற விரும்புகின்றேன்.

அவள் ஒரு இளம் தாய். பெயர் நிசா. அலுவலகம் ஒன்றில் பணிபுரிகின்றாள். அவளின் குழந்தைக்கு சுமார் இரண்டரை வயதுதானிருக்கும். அவள் அலுவலகத்துக்குப் பயணிப்பது ரயிலில்தான். அன்றொரு நாள் அலுவலகம் முடிந்து அவசர அவசரமாக ரயில் நிலையத்துக்குச் சென்று கொண்டிருந்தாள்.

அன்று அதிக வேலை காரணமாக, நன்றாகவே நேரம் பிந்திவிட்டது. அவள் பயணிக்கும் ரயிலைப் பிடிக்க ஐந்து நிமிடங்கள் மட்டுமே இருந்தன. அதைத் தவறவிட்டுவிட்டால், ஒன்றரை மணித்தியாலங்கள் காத்திருக்க வேண்டும். வீட்டில் அவளின் வருகைக்காக அந்த பிஞ்சுக் குழந்தை காத்துக் கொண்டிக்கும். அதனாலேயே, அவள் எப்படியாவது நேரத்துக்கு வீட்டுக்கு போய்விடுவதில் மிகவும் உறுதியாக இருந்தாள்.

ரயிலைப் பிடிக்க அவசரமாக ஓடிக்கொண்டிருந்தவளை இடையில் ஒரு பெண் வழிமறுத்தாள். அவளும் ஒரு இளம் தாய் தான். சுமார் ஒன்றரை வயது குழந்தையை சுமந்தபடி, கையில் சில புத்தகங்களை விற்பனை செய்து கொண்டிருந்தாள் அவள். நிசா, அந்தப் பெண் வழிமறித்ததைப் பொருட்படுத்தாமல், அவளைக் கடந்து சென்று கொண்டிருந்தாள். ஆனாலும் அங்கிருந்துபோக அவளால் முடியவில்லை.

ஏதோ நினைவு வந்தவளாக, திரும்பி வந்து அந்தப் பெண்ணிடம், அந்தப் புத்தகத்தின் விலையைக் கேட்டாள். 400 ரூபா என்றாள் அவள். ஆனால், நிசா கையில் இருந்ததோ 500 ரூபா தாள் ஒன்று மட்டும்தான். அதைக் கொடுத்துவிட்டால், போக்குவரத்துக்குக் கூட அவளுக்கு பணம் போதாமல் போய்விடும். நேரமும் சென்று கொண்டிருந்தது. என்ன செய்வதென்று அவளுக்குப் புரியவில்லை. பணத்தை மாற்றலாம் என்றால், அருகில் கடைகளும் இல்லை. பேசாமல் போய்விடுவோமா என்று யோசிக்கின்றாள்.

ஆனால், அதற்கு அவள் மனம் இடங்கொடுக்கவில்லை. செய்வதறியாது தவித்தவள், இறுதியில் அருகில் நின்றுகொண்டிருந்த இளைஞர் ஒருவரிடம் அந்தப் பணத்தைக் கொடுத்து, மாற்றித்தரும்படி கேட்டாள். அவனும் தன்னிடம் இல்லை என்று கூறி விடுகின்றான். நிசாவுக்கு என்னசெய்வதென்று புரியவில்லை. தடுமாறிக் கொண்டிருந்தாள். அப்போது, ஒரு சிறுவன், அந்தப் பணத்தை வாங்கி, மாற்றிக் கொடுத்தான்.

நிசா, தனக்கு போக்குவரத்துக்கு மட்டும் தேவையான பணத்தை எடுத்துக்கொண்டு, மிகுதிப் பணத்தை அந்தப் பெண்ணிடம் கொடுத்துவிட்டு, அவளின் குழந்தையை வருடிக்கொடுத்தபடி, ரயிலைப் பிடிக்க ஓடிச்சென்றாள். அவள் ரயில் நிலையத்துக்கு செல்லவும், ரயில் வரவும் சரியாக இருந்தது. அவதியாக ஓடிச்சென்று மிதிபலகையில் கால்வைத்த நொடி, ரயில் புறப்பட்டுவிட்டது. அந்த ஒரு நிமிடம் நிலை தடுமாறிய நிசா, கால் தவறி கீழே விழச்சென்றாள். ஆனால் என்ன அதிசயமோ, யாரோ ஒருவர் அவளை உடனடியாகப் பிடித்துக் காப்பாற்றினார்.

நிசாவுக்கு ஒரு நிமிடம் திக்கென்று ஆனது. அவள் எண்ணங்களில் வந்துபோனது ஒன்று மட்டும் தான். அவளுக்கு ஏதாவது நடந்திருந்தால் அவளின் குழந்தையின் கதி? அவளால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. மனம் பதைபதைத்தது.

அப்போது அன்று அவள் கடந்து வந்த அந்த தாயும், சேயும் கண்முன் தோன்றினார்கள். ஒன்று மட்டும் நிசாவுக்கு புரிந்தது. பிரதிபலன் பாராது அவள் அன்று செய்த உதவி தான், இப்போது அவளைக் காப்பாற்றியுள்ளது. அந்தப் பிஞ்சுக் குழந்தையின் கண்களைப் பார்த்து அவள் கொடுத்த ஒரு சொற்பப் பணம் தான், இவளின் குழந்தையை அநாதையாக்காமல் பார்த்துக்கொண்டது என்று அவள் உள்மனம் கூறியது.

இப்படித்தான், பிரதிபலன் பாராது நாம் செய்யும் சிறுசிறு உதவிகள், பல சந்தர்ப்பங்களில் நம்மை காக்கும் கவசமாக மாறும். வாழ்க்கை என்பது நிலையற்றது.

எப்போது, என்ன ஆகும் என்று யாராலும் கணிக்க முடியாது. இருக்கும் சொற்ப காலத்தில், அடுத்தவரை நிந்திக்காமல், நாமும் வாழ்ந்து, மற்றவரையும் வாழவைக்க, நம்மால் இயன்றதை செய்யலாம். முழுப்பொழுதும் நம்மைப் பற்றியே சிந்திக்கும் நாம், ஒரு நிமிடம் மற்றவர் பற்றியும் சிந்திக்கலாமே...!

# யாரை நம்புவது?

சிறுகதை

கலாபூசணம் எஸ்.டி.சாமி



யாரையாவது காதலித்து திருமணம் செய்துகொள்ளவும் அவள் விரும்பவில்லை. இத்தனைக் காலம் தன்னை பெற்று வளர்த்து ஆளாக்கி, தன் தேவைகள் அனைத்தையும் அறிந்து செயற்பட்ட தன் பெற்றோர், இதையும் பார்த்து செய்து வைப்பார்கள் என்ற நம்பிக்கையில் வாழ்ந்தாள் உமா.

திருமண வயதை அடைந்திருந்த உமாவுக்கு, எத்தனை இடங்களில் வரன் தேடியும், ஒன்றுமே சரிவந்ததாயில்லை. ஆரம்பத்தில் திருமணம் உறுதியாவது போல் இருந்தாலும், இடையில் ஏதேதோ காரணங்களால் அவை தடைபட்டுப் போவதும் அவள் வாழ்க்கையில் வாடிக்கையாகி போய்விட்டது.

உமா பணியாற்றும் நிறுவனத்தில் கடமையாற்றும், அவள் வயது பெண்கள் அனைவருமே, திருமண பந்தத்தில் இணைந்து கணவர், குழந்தைகளென்று வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தான் மாத்திரம் தனி மரமாய் இருக்கிறேனே என்ற மனவேதனை அவளுக்குள் இருந்தாலும், அதை அவள் வெளியில் காட்டிக்கொள்வதேயில்லை.

இப்படியிருக்கையில் ஒருநாள், உமாவின் அலுவலகத்துக்கு, கொழும்பிலிருந்து மாற்றலாகி புதிய மெனேஜர் வருவதாக அறியக் கிடைக்கின்றது. சரி நம்மையெல்லாம், அறிமுகம் செய்துகொள்ள புதிய மெனேஜர் அழைப்பார் தானே என்று எண்ணியவாறு வேலையில் மூழ்கினாள் உமா.

காலை பத்து மணியிருக்கும். அலுவலக பியூன், கையில் ஸ்வீட் பொக்ஸ்"டன் டிபார்ட்மெண்டில் நுழைந்தான். அதனைத் தொடர்ந்து மெனேஜர் ரூமிலிருந்து புதிய மெனேஜர், சிறு புன்னகையுடன் வந்து நின்றார். மன்மதனைப்போன்ற அழகிய தோற்றம். சிவந்த மேனி. கட்டான உடல்வாகு. சிரிக்கும்போது கன்னத்தில் விழும் குழி, முகத்துக்கு அமைவான அரும்பு மீசை... ஓர் ஆண் மகனுக்கான அனைத்து அம்சங்களும் அவனுள் அடக்கம் என்றே சொல்லவேண்டும். அவன் அழுகுக்கேற்ற அழகன். அட... அவன் பெயர் கூட அழகேசனாம்.

புதிய மெனேஜர் வந்த சிறிது நாட்களிலேயே, சக ஊழியர்கள் அனைவருடனும் நட்புடனும், மிக கண்ணியமாகவும் நடந்துகொண்டார். அந்தவகையில், அழகேசனிடம் காணப்பட்ட பண்பாடும், மனிதநேயமும் ஒரு சாதாரண மனிதனுக்கு இருக்கவேண்டியதை விட மேலதிகமாகவே இருந்தது.

அலுவலகத்தில் உயர் அதிகாரிகள் தொடக்கம் சிற்றூழியர்கள் வரை அனைவரும், அழகேசனிடம் ஒருவித மதிப்பும், மரியாதையும் கொண்டிருந்தனர். மும்மொழிகளிலும் சரளமாக உரையாடக் கூடிய அவனின் ஆற்றல், ஆளுமை நடவடிக்கைகள் அதற்கு ஒரு காரணமாய் அமைந்திருக்க வேண்டும்.

அழகேசனை அலுவலகத்தில் கண்ட நாள் முதலாய், உமாவுக்கு உள் மனதில் ஓர் எண்ணம் இருந்தது. அழகானவன். கண்ணியமான நடத்தை கொண்டவன். நல்ல பண்பாளன். ஆனால் இத்தனையிருந்தும், இந்த அழகேசன் ஏன் இன்னும் திருமணம் செய்யாமல் தனிமரமாகவே நிற்கின்றான் என்று தனக்குத் தானே கேட்டுக்கொள்வாள்.

அழகேசன் குறித்து உமாவுக்கு அதீத அக்கறையும் நாளுக்கு நாள் ஏற்பட்டது. அவனை தனது வாழ்க்கைத் துணையாக்கிக் கொள்ளலாமோ எனும் எண்ணம் உமாவின் உள்மனதில் இரவு பகலாக அலைமோதிக் கொண்டேயிருந்தது. அழகேசனை மனதுக்குள்ளே காதலிக்கத் தொடங்கினாள் உமா. இருப்பினும், அவளுடைய எண்ணத்தை எவரிடமும் சொல்லாமல் தன் இதயக் கதவில் பூட்டி வைத்திருந்தாள்.

அன்று திங்கட்கிழமை. காலை பத்து முப்பது மணி இருக்கும். அலுவலக 'செக்யூரிட்டி'யிடம் கையில் குழந்தையுடன் ஓர் இளம்பெண் வந்தாள்.

"நான் உங்கள் மெனேஜர் அழகேசனைப் பார்க்க வேண்டும்" என்றாள். அந்தப்பெண் அலுவலகத்தில் நுழையவும், அழகேசன் தன் ரூமிலிருந்து வெளியே வரவும் சரியாக இருந்தது.

அவளைக் கண்டதும் அழகேசனுக்கு வியர்த்துக் கொட்டியது. விறுவிறுத்துப் போய் சிலையாய் நின்றான். அலுவலகத்தில் உள்ள அத்தனைப் பேரின் கண்களும் அவர்கள் பக்கம் திரும்பின.

"டேய் பொறுக்கி ராஸ்கல். என்னை ஏமாத்திடலாம் என்று பார்த்தியா? என்னோட இருந்து குடும்பம் நடத்தி கையில ஒரு குழந்தையையும் கொடுத்திட்டு, பேச்சு மூச்சு இல்லாம எங்கேயோ ஓடித் தப்பிடலாமென்று தானே 'டிரான்ஸர்' வாங்கிட்டு இங்க ஓடி வந்துட்ட..."

பின்னர் அவள், அலுவலகத்தில் உள்ள எல்லாப் பெண்களையும் ஒருமுறை சுற்றிப் பார்த்துவிட்டு, "இங்கயும் பொம்பளைகள உன்ட நச்சு வலைக்கு ஆளாக்க பாத்தியா? இங்க யார் வாழ்க்கய கெடுக்க பார்த்துட்டு இருந்த? பொறுக்கி ராஸ்கல்"

அவள் மனதில் தேங்கிக் கிடந்த கவலைகளையெல்லாம் கண்ணீர் மல்க கொட்டிவிட்டு, 'வீர்... வீர்...' என்று அழுத கைக்குழந்தையை கட்டியணைத்தபடி நின்றாள்.

அனைத்து அலுவலர்களும் ஸ்தம்பித்து நின்றனர். அழகேசனின் முகமூடி கிழித்தெறியப்பட்டது. அவனின் சுயரூபத்தை அனைத்து ஊழியர்களும் கண்டுகொண்டனர். அனைவர் மத்தியிலும் அழகேசன் குற்றவாளிக் கூண்டில் நிற்பது போல் தலைகவிழ்ந்து நின்றான்.

இந்த உலகில் யாரை நம்புவதென்றே தெரியவில்லை. நல்லவேளை நான் தப்பித்துக் கொண்டேன் என்று சிந்தித்தாளோ என்னவோ? உமாவைத் தான் கேட்க வேண்டும். ■




# முட்டாளாக இருங்கள்



ஒரு கிராமத்தில் ஒரு அறிஞர் இருந்தார். அவர் ஒரு பொருளாதார மேதையாயிருந்தார். பல மன்னர்கள் தங்கள் நாட்டுப் பொருளாதாரத்தைச் சீர்படுத்த அவர் ஆலோசனையை நாடினர்.

ஒருநாள் ஊர்த்தலைவர் அவர் முன் வந்து அவரைப் பார்த்துக் கிண்டலாகச் சொன்னார்.

"ஐயா! அறிஞரே! நீங்கள் பெரிய அறிஞர் என்று உலகமே பாராட்டுகிறது. ஆனால் உங்கள் மகன் ஒரு அடிமுட்டாளாக இருக்கிறானே! தங்கம், வெள்ளி இவற்றுள் அதிகம் மதிப்பு வாய்ந்தது எது என்று அவனைக் கேட்டால் அவன் வெள்ளி என்று சொல்கிறான். வெட்கக்கேடு!" அறிஞர் மிகவும் கவலையடைந்தார்.

மகனை அழைத்தார், "தங்கம், வெள்ளி இவை இரண்டில் அதிகம் மதிப்பு வாய்ந்தது எது?"

மகன் சொன்னான் "தங்கம்"

அவர் கேட்டார் "பின் ஏன் ஊர்த்தலைவர் கேட்கும்போது வெள்ளி என்று சொன்னாய்?"

மகன் சொன்னான், தினமும் அவர் என்னிடம், ஒரு கையில் தங்க நாணயமும், மறு கையில் வெள்ளி நாணயமும் வைத்துக் கொண்டு "அறிஞரின் மகனே, இவ்விரண்டில் மதிப்பு வாய்ந்ததை நீ எடுத்துக் கொள்" என்பார்.

"நான் உடனே வெள்ளியை எடுத்துக் கொள்வேன். உடனே அவரும் சுற்றி இருப்பவர்களும் சிரித்துக் கிண்டல் செய்வார்கள். நான் அந்த நாணயத்துடன் போய் விடுவேன். இது ஓராண்டாக நடக்கிறது. தினம் எனக்கு ஒரு வெள்ளி நாணயம் கிடைக்கிறது. நான் தங்கம் என்று சொல்லி எடுத்துக் கொண்டால் அன்றோடு இந்த விளையாட்டு நின்று விடும். எனக்கு நாணயம் கிடைப்பதும் நின்று போகும். அதனால் தான் அவ்வாறு கூறினேன்" என்றான்.

வாயடைத்துபோனார் அறிஞர்.

# கடவுள் மீது நம்பிக்கை கொண்டிருப்பது ஒருவரை ஆன்மீகவாதியாக்குமா?

சத்குரு





கடவுள் மீது நம்பிக்கை இல்லாதவர் ஆன்மீகத்தில் இருக்க முடியாது. ஆனால், நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், கடவுள் மீது நம்பிக்கை உள்ளவர்களும் ஆன்மீகவாதியாகிவிட முடியாது என்பதாகும். ஏனென்றால், கடவுள் மீது நம்பிக்கை உடையவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் பெரிதாக வித்தியாசம் இல்லை. இரண்டு பேருமே தங்களுக்கு தெரியாத ஒன்றைப் பற்றி நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

உங்களது பிரச்சினை என்னவென்றால், உங்களுக்கு தெரியாததை, "தெரியாது" என்று ஒப்புக்கொள்ளும் நேர்மை உங்களிடம் இல்லை. அதனால் ஆத்திகருக்கும், நாத்திகருக்கும் பெரிதாக வேறுபாடு ஒன்றும் இல்லை. இரண்டு பேருமே தாங்கள் வெவ்வேறானவர்கள் என்று வேடம் போடுகிறார்கள். ஆன்மீகத் தேடலில் உள்ள ஒருவர், ஆத்திகனுமல்ல, நாத்திகனுமல்ல. தனக்கு ஒன்றும் தெரியாது என்ற புரிதலால், அவர் ஒரு தேடலில் இருக்கிறார்.

நீங்கள் ஏதோவொன்றின் மேல் நம்பிக்கை வைக்கும் அந்த கணத்தில், மற்ற அனைத்தையும் பார்க்கத் தவறி, குருடாகிவிடுகிறீர்கள். இப்போது இவ்வுலகில் உள்ள சண்டைகள் அனைத்தும், அவர்கள் காட்டிக் கொள்வதைப்போல நல்லதுக்கும் கெட்டதுக்கும் இடையில் நடப்பவை அல்ல. இது எப்போதுமே, ஒரு மனிதனின் நம்பிக்கைக்கும், இன்னொரு மனிதனின் நம்பிக்கைக்கும் இடையே உள்ள முரண்பாடாகும்.

**இப்போது இவ்வுலகில் உள்ள சண்டைகள் அனைத்தும், அவர்கள் காட்டிக் கொள்வதைப்போல நல்லதுக்கும் கெட்டதுக்கும் இடையில் நடப்பவை அல்ல. இது எப்போதுமே, ஒரு மனிதனின் நம்பிக்கைக்கும், இன்னொரு மனிதனின் நம்பிக்கைக்கும் இடையே உள்ள முரண்பாடாகும்**

நம்பிக்கைக்கான தேவை என்பது, ஆன்மீகத்தை விடவும், உளவியல் சார்ந்ததாக உள்ளது. உங்களுக்கு ஏதோவொன்றின் மேல் தொற்றிக்கொள்ள வேண்டும், பாதுகாப்பாக உணர வேண்டும், மற்றும் எல்லாமே தெரியும் என்ற உணர்வுடன் இருக்க வேண்டும் இவை அனைத்தும் ஒரு முதிர்ச்சியில்லாத மனதின் வெளிப்பாடாகும். இந்த பிரபஞ்சத்தைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை என்றால்தான் என்ன? உண்மையில், உங்களுக்கு ஒன்றும் தெரியாது. இது அழகானதாகும்! நீங்கள், உங்களுக்குள் அழகாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பது எப்படி என்று பாருங்கள். அது உங்கள் கைகளில்தான் உள்ளது.

## ஆன்மீக அனுபவம் என்றால் என்ன?

கடலுக்குள் இருக்கும் மீன் அதனை ஆன்மீக அனுபவம் என்று எண்ணாது, மலைகளில் வாழும் ஆடுகளும் அதனை ஆன்மீக அனுபவம் என்று எண்ணாது, ஏனென்றால் அவை எப்போதுமே அங்குதான் இருக்கின்றன. மாறாக அவைகளை நகரத்திற்கு கொண்டுவந்தால், அவை அதனை ஆன்மீக அனுபவமாக எண்ணலாம்.

இது உங்களுக்குள் இருக்கும் தடைகளை உடைப்பது பற்றியதாகும் – உங்களுக்குள் ஏதோவொன்று உடைந்தது. நீங்கள் ஒரு ஓட்டிற்குள் இருந்தீர்கள். அது உடைந்து, ஒரு பெரிய ஓடாக ஆனது. நான் என்ன சொல்கிறேன் என்றால், நீங்கள் இந்த பெரிய ஓட்டிற்கு பழகிவிட்டால், அதையும் முந்தையதைப் போலவே உணர்வீர்கள்.

நீங்கள் எல்லையற்ற தன்மையாக மாறவேண்டும் என்றால், அதனை நீங்கள் உடலளவில் அடைய முயன்றால், எல்லையற்றதை அடைய நீங்கள் தவணை முறையில் முயற்சி செய்கிறவராக இருப்பீர்கள். ஒவ்வொரு மனிதருமே எல்லையற்றதாக ஆகவேண்டும் என்றே விரும்புகிறார்கள். அவருக்கு விரும்புவதையெல்லாம் கொடுத்துவிட்டாலும், ஒரு மூன்று நாட்களுக்கு அவர் சரியாக இருக்கலாம்.

ஆனால், நான்காவது நாள் அவர் வேறு எதையாவது தேடிக்கொண்டிருப்பார். இதை சிலர் பேராசை என்று முத்திரை குத்துவார்கள், ஆனால் நான் இதனை, தவறான திசையில் போகும் வாழ்க்கை செயல்முறை என்பேன்.

## எளிய பயிற்சி

எந்தவொரு உள்ளுணர்வு சார்ந்த தொழில்நுட்பத்தையும், ஈடுபாடில்லாத சூழல்களில் உங்களுக்கு கற்றுக்கொடுக்க இயலாது. ஈடுபாடும், கவனமும் செலுத்துவதற்கான ஒரு சிறிய அளவிலான இடத்தையும், நேரத்தையும் உங்களால் கொடுக்க முடியுமானால், உங்களை ஒரு எளிய பயிற்சியில் ஈடுபட வைக்கலாம். இதில், ஒரு நாளைக்கு வெறும் 21 நிமிடங்கள் முதலீடு செய்தால், உங்களது நாளை ஒரு மகத்தான ஆன்மீக அனுபவத்துடன் துவங்கலாம். இந்த மகத்தான அனுபவம், உங்களை நாள் முழுவதும் அமைதியுடனும், ஆனந்தத்துடனும் வைத்திருக்கும். ■



மனிதி

மனதை வென்ற மங்கையர்

# சாமஸ்ரீ கலைத் திலகம், கலைச் சுடர்
# திருமதி இளங்கோவன் செல்வராணி

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட திருமதி செல்வராணி அவர்கள், தனது மூன்றாவது வயதில் சிங்கப்பூரில் திரு, திருமதி. பாஸ்கர் அவர்களிடம் பரதக் கலையை கற்கத் தொடங்கினார். பின்னர் பண்டத்தரிப்பு மகளிர் மகா வித்தியாலத்தில் கல்வியைத் தொடர்ந்த அவர், நாட்டியக்கலைஞர் செல்வி. பத்மினி சின்னத்துரையிடம் பரதக் கலையைக் கற்றார்.

திருமதி செல்வராணி அவர்களுக்கு சிறுவயது முதலே கலையில் அதீத ஆர்வம். பாலர் பருவத்திலிருந்தே, பல கலை நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகளில் பங்குபற்றி, ஏராளமான பரிசுகளை வென்றுள்ளார்.

இராசாயன விஞ்ஞான பட்டதாரியான [B.Sc chem (Hons)] இவர், யாழ்ப்பாணத்தில் முனாய் 



மெய்கிண்டான் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகவும், யாழ்ப்பாணக் கச்சேரியில் பட்டதாரி பயிலுநராகவும் சேவை புரிந்துள்ளார்.

1992ஆம் ஆண்டு முதல் விஞ்ஞான பாட ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார். வத்தளை புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலத்தில் இருபது வருடகாலம் சேவையற்றிய திருமதி செல்வராணி அவர்கள், அங்கு நடன ஆசிரியராகவும் பணியாற்றி, பல மாணவர்களை கலைத்துறையில் ஈடுபடுத்தியுள்ளார்.

இவரின் நெறியாழ்கையில் மேடையேற்றப்பட்ட "சகுந்தலை", "தாட்சாயிணி கல்யாணம்", "அம்பாள் பெருமை" போன்ற



நாட்டிய நாடகங்கள் வெகுவான பாராட்டுக்களை பெற்ற நிலையில், "சகுந்தலை" நாட்டிய நாடகம், இலங்கை தொலைக்காட்சியான ரூபவாஹினியில் நேரடி நிகழ்ச்சியாக ஒலிபரப்பானமை சிறப்புக்குரியது.

அதுமட்டுமல்லாமல், தனி மற்றும் குழு நடனங்கள் பலவற்றை அரங்கேற்றியுள்ள இவர், வத்தளையில், 'கலைத்தென்றல்' எனும், நாட்டிய கலா நிலையத்தையும் நிர்வகித்து வருவதன் மூலம், பல மாணவ, மாணவியருக்கு கலைச்சேவை ஆற்றி வருகின்றார்.

கலைத்துறையில் தீராத தாகம் கொண்ட திருமதி செல்வராணி அவர்களின் கலைச்சேவையைப் பாராட்டி பல பட்டங்களும், விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன.

'சாமஸ்ரீ கலைத்திலகம்', 'நேசகீர்த்தி', 'கலாகீர்த்தி', 'கலைமணி', 'நாட்டிய கலாஜோதி', 'தேசபந்து' மற்றும், 'கலைச்சுடர்' போன்ற பட்டங்களுக்கு சொந்தக்காரரான இவர், நீதி அமைச்சு மூலம் சமாதான நீதவானாகவும் சத்தியப் பிரமானம் செய்து கொண்டுள்ளார்.

குறிப்பாக, ஒரே மேடையில் ஐந்து மாணவர்களை அரங்கேற்றத்தில் பங்கு பெறச் செய்து கலைச் சாதனை புரிந்துள்ள திருமதி செல்வராணி அவர்கள் மனதை வென்ற மங்கையாக மிளிர்கின்றார்.



# அடடா!
## ஈ, கொசு தொல்லை நீங்க...



உங்கள் சமையல் அறையின் மூலை முடுக்குகளில் மஞ்சள் மற்றும் உப்பை கலந்து தூவி விடுங்கள். இதன் கிருமி நாசினி தன்மை இந்த பூச்சிகளை முற்றிலுமாக அழித்து விடும். மேலும், உணவுகளை பாதுகாப்பாக வைக்கும் இடங்களிலும் இந்த கலவையை தூவி விடுங்கள். இது நல்ல தீர்வை தரும்.

கொதி நீரில் உப்பு மற்றும் மிளகு தூளை சேர்த்து, ஸ்பிரே செய்வது போல பூச்சிகள் இருக்கும் இடத்தில் செய்து வந்தால் உடனடியாக அவற்றை அழித்து விடலாம்.

மெல்லிய துணிக்குள் தோடம்பழ தோலை வைத்து, சமையல் அறையில் கட்டி தொங்க விட வேண்டும். இவ்வாறு செய்தால் இந்த வகை பூச்சிகளினால் தொல்லை நீங்கும்.

உடல் நலத்தோடு சேர்த்து வீட்டின் நலத்தையும் இஞ்சி பாதுகாக்கிறது. 1 தேக்கரண்டி சுக்கு தூளை வெந்நீரில் கலந்து அதை பூச்சிகள் இருக்கும் இடத்தில் ஸ்பிரே செய்தால் மிக எளிதாக அவற்றை அழித்து விடலாம்.

அப்பிளை அரிந்து அதன் பாதி பகுதியை மட்டும் எடுத்து கொள்ளவும். பிறகு இதில் இலவங்கத்தை சொருகி பூச்சிகள் இருக்கும் இடத்தில் வைக்கவும். இவ்வாறு செய்து வந்தால் பூச்சிகள் அழிந்து விடும்.

ஒரு சிறிய பாத்திரத்தில் எலுமிச்சை புல் எண்ணெய்யை ஊற்றி சமையல் அறையில் ஒரு ஓரமாக வைத்து விடவும். இதேபோல் ஓரிரு இடங்களில் வைத்தால் பூச்சிகள், கொசு, ஈ போன்றவை சாகும்.

வீட்டின் முற்றத்தில் இருந்து எப்படி நமது முழு வீட்டையும் துளசி பாதுகாக்கிறதோ அதே போன்று நமது சமையல் அறையில் வைத்தால் நமது ஆரோக்கியத்தையும் சேர்த்தே பாதுகாக்கும். சமையல் அறையில் ஒரு துளசி செடியை சிறிய தொட்டியில் வளர்த்தால் பூச்சிகளினால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் குறையும்.

நொச்சி இலையை சமையலறையில் ஓரமாக பரப்பி வைத்தால் கொசுக்கள் அண்டாது. இரண்டு நாட்களுக்கு ஒருமுறை இலையை மாற்ற வேண்டும்.



செய்து பாருங்கள்



## அன்னாசிப் பழ ஜேம்



**தேவையான பொருட்கள்**

- அன்னாசிப்பழம்
- சீனி
- எலுமிச்சை சாறு

**செய்முறை**

- அன்னாசிப் பழத்தைத் துண்டு துண்டாக வெட்டி, அதனை ஒன்றிரண்டாக அரைத்துக் கொள்ளவும்.
- அரைத்த அன்னாசிப் பழக் கூழுடன் சீனி சேர்த்து கெட்டியாகும் வரை 10 - 15 நிமிடங்கள் வரை நன்கு கிளறிக் கொண்டே இருக்கவும்.
- அன்னாச்சிப்பழ சிரப் கெட்டியாக ஆரம்பித்து, தண்ணீர் நன்கு வற்றும் வரையும் 5 - 8 நிமிடங்கள் வரை வேகவைக்கவும்.
- நன்கு கெட்டியானதும் அடுப்பை அணைத்து விட்டு, அதில் சிறிது எலுமிச்சை சாற்றைச் சேர்க்கவும். எலுமிச்சை சாறு சேர்ப்பதால் அதில் சேர்க்கப்படும் சீனி, உறையாமல் இருக்கும்.
- ஆறியதும் கண்ணாடி போத்தலில் அடைத்து அதனை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து தேவையான நேரங்களில் சப்பாத்தி, தோசை, பாண் ஆகியவற்றுடன் சேர்த்து சாப்பிடலாம்.

FASHION

## Trending Saree Blouse









அழகு



## சருமத்தில் இறந்த செல்களை நீக்கும் பசும்பால்

- நம் சருமத்திற்கும், முகத்திற்கும் இயற்கையிலேயே நன்மை பயக்கக் கூடிய ஒரு பொருள், பால் எனக் கூறலாம். பால் நமது உடல் ஆரோக்கியம் மட்டுமல்லாது சரும ஆரோக்கியத்தையும் பாதுகாப்பதற்கு உதவுகிறது. பாலை நேரடியாக முகத்தில் பயன்படுத்தும் போது அது பல்வேறு சரும பிரச்சினைகளுக்குத் தீர்வு அளிக்கிறது.
- காய்ச்சாத பசும்பாலை நேரடியாக முகத்தில் பயன்படுத்தும் போது அது பல்வேறு நன்மைகளை தருகிறது. சருமத்தில் ஈரத்தன்மையையும் பளபளப்பையும் தக்க வைக்க உதவுகிறது.
- வயது முதிர்வு காரணமாக ஏற்படும் சுருக்கங்கள் போன்றவற்றை சரி செய்யவும் உதவுகிறது. தினசரி பாலை நமது சரும பராமரிப்பு பயன்பாட்டில் பயன்படுத்தும் போது, சிறந்த தீர்வுகளை காண முடியும்.
- சருமம் வறட்சியடையாமல் காப்பதற்கு ஈரப்பதம் என்பது மிகவும் முக்கியம். நாம் பாலை நேரடியாக முகத்தில் பயன்படுத்தும்போது வறட்சி தடுக்கப்பட்டு முகத்தில் ஈரப்பதம் தக்க வைக்கப்படுகிறது.
- பாலில் உள்ள விட்டமின்கள் மற்றும் தாதுக்கள் இயற்கையான மொய்ஸரைசராக செயல்பட்டு சருமத்தில் ஈரப்பதத்தை தக்க வைக்கும்.
- பாலில் உள்ள பக்டீரியா எதிர்ப்பு பண்புகள் சருமத்தில் முகப்பருவை ஏற்படுத்தக்கூடிய பக்டீரியாக்களை எதிர்த்து போராட உதவுகிறது. இதனால் முகப்பருக்கள் ஏற்படுவது தடுக்கப்படுகிறது.
- பாலில் 'லொக்டிக்' அமிலம் அதிகளவில் நிறைந்துள்ளது. இது இயற்கையான முறையில் நமது சருமத்தில் உள்ள இறந்த செல்களை நீக்க உதவுகிறது.
- குறைந்தது வாரத்திற்கு இருமுறை நீங்கள் பாலை பயன்படுத்துவது கூட சிறந்த பலனை தரும்.
- காய்ச்சாத பால் நமது சருமத்தில் உள்ள இறந்த செல்களை நீக்கி சருமத்தில் ஆரோக்கியமான செல் வளர்ச்சிக்கு உதவுகிறது.
- சரும நிறத்தை மேம்படுத்தவும் இது உதவுகிறது. தினசரி, பாலை சருமத்தில் பயன்படுத்துவதன் மூலம் கரும்புள்ளிகள், முகப்பரு காரணமாக ஏற்படும் தழும்புகள், ஹைபர் பிக்மென்டேஷன், இளமையிலேயே வயதானது போன்ற தோற்றம், சுருக்கம் போன்றவற்றை சரி செய்யலாம்.

கூந்தல் பராமரிப்பு



## தலைமுடி பிரச்சினைகளுக்கு தீர்வு தரும் தக்காளி





தலைமுடி உதிர்வு, பொடுகு தொல்லை போன்ற பிரச்சினைகளில் இருந்து தீர்வு கொடுத்து கூந்தல் ஆரோக்கியத்தை மேம்படுத்த தக்காளி உதவும். பெரும்பாலான உணவுகளில் நாம் தக்காளியை சேர்த்துக் கொள்கிறோம் என்றாலும் தக்காளியை கூந்தலிலும் நேரடியாக பயன்படுத்தும் போது அவை மிகச் சிறந்த பலனை தருகின்றன.

தக்காளியில் உள்ள 'அன்டி எக்சிடன்ட்' பண்புகள் முடி உதிர்வு போன்ற பிரச்சினைகளை தடுக்க உதவுகிறது. முடி உதிர்வு பிரச்சினைக்கு வழிவகுக்கும் ஒக்சிஜனேற்ற அழுத்தத்தை எதிர்த்து போராடக்கூடிய தன்மை தக்காளியில் உள்ள பண்புகளுக்கு உள்ளது.

நமது கூந்தல் பராமரிப்பு பொருட்களில் தக்காளி சேர்த்த பொருட்களை பயன்படுத்துவதன் மூலம், சிறந்த பலனை பெற முடியும். இது நமது கூந்தல் மயிர்க்கால்களை வலுப்படுத்தி முடி உதிர்வை குறைக்க உதவுகிறது. எனினும் இரசாயனங்கள் அற்ற பராமரிப்பு பொருட்களை தேர்ந்தெடுத்து வாங்க வேண்டியது மிகவும் அவசியம்.

தக்காளியில் விட்டமின் 'ஏ' மற்றும் விட்டமின் 'சி' அதிகளவில் நிறைந்துள்ளதால் இவை முடி வளர்ச்சியை ஊக்குவிக்க உதவுகின்றன. இவை நமது உச்சந்தலையில் வறட்சி ஏற்படாமல் தடுத்து கூந்தலில் ஈரப்பதத்தை தக்க வைக்க உதவுகிறது.

விட்டமின் 'சி' மயிர்க்கால்களை வலுப்படுத்த தேவையான கொலாஜன் உற்பத்தியை அதிகமாக சுரக்கிறது. எனவே முடி உதிர்வு தடுக்கப்பட்டு முடி வளர்ச்சி ஊக்குவிக்கப்படுகிறது. நாம் எவ்வளவுதான் கூந்தல் பராமரிப்பில் முழு கவனம் செலுத்தினாலும் பொடுகு பாதிப்பு இருந்தால் முடி உதிர்வு அதிகமாக இருக்கும். எனவே முதலில் முடி ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு பொடுகு பிரச்சினைகளை சரி செய்ய வேண்டியது அவசியம்.

தக்காளியில் நிறைந்துள்ள இயற்கையான அமிலத்தன்மை நமது உச்சந்தலையின் 'பிஹெச்' அளவை சீர் படுத்த உதவுகிறது. உச்சந்தலையில் பிஹெச் அளவு சமநிலையில் வரும் போது பொடுகு பிரச்சினைகள் தடுக்கப்படுகிறது. தக்காளி சாற்றினை எடுத்து நேரடியாக உச்சந்தலையில் தேய்த்து சிறிது நேரம் மசாஜ் செய்யலாம். வாரத்திற்கு இருமுறை இவ்வாறு செய்து வர, உச்சந்தலையில் ஏற்படும் அரிப்பு, பொடுகு பிரச்சினைகள் போன்றவை சரி செய்யப்படும்.

இயற்கையான முறையில் பளபளப்பு தன்மையை பெறுவதற்கு நாம் இந்த தக்காளியை பயன்படுத்தலாம். தக்காளி சேர்க்கப்பட்ட கூந்தல் பராமரிப்பு பொருட்களை பயன்படுத்துவதன் மூலம் இந்த பளபளப்பை நம்மால் பெற முடியும். கூந்தலில் உள்ள வெடிப்புகள் மறைந்து கூந்தல் பளபளக்கும்.

தக்காளியில் உள்ள விட்டமின்கள் மற்றும் தாதுக்கள் உச்சந்தலை ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகிறது. ஆரோக்கியமான முடி வளர்ச்சிக்கு உச்சந்தலை ஆரோக்கியமாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம். உச்சந்தலையில் வறட்சி ஏற்படாமல் தடுத்து பொடுகு தொல்லை முடி உதிர்வு போன்ற பெரும் பிரச்சினைகளை சரி செய்வதற்கு தக்காளியில் உள்ள நன்மைகள் உதவுகின்றன. நாம் தக்காளியை பயன்படுத்துவதன் மூலம் நமது ஒட்டுமொத்த கூந்தல் ஆரோக்கியத்தையும் மேம்படுத்த முடியும்.




பி.நிதின், தரம் 03, நுவரெலியா





சு.தருஷிகா, தரம் 06, பண்டாரவளை



அ.நவாஹிர், தரம் 08, கொட்டாஞ்சேனை



ந.நஸீர், தரம் 08, வத்தளை



கே.ரோகித், தரம் 03, கல்முனை



வா.பாத்திமா, தரம் 04, மாத்தளை



குறளும் பொருளும்

அதிகாரம் 2 : வான்சிறப்பு

**குறள் 17:** நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி தான்நல்கா தாகி விடின்

**பொருள்:** ஆவியான கடல்நீர் மேகமாகி அந்தக் கடலில் மழையாகப் பெய்தால்தான் கடல்கூட வற்றாமல் இருக்கும். மனித சமுதாயத்திலிருந்து புகழுடன் உயர்ந்தவர்களும் அந்தச் சமுதாயத்திற்கே பயன்பட்டால்தான் அந்தச் சமுதாயம் வாழும்

**குறள் 18:** சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு

**பொருள்:** வானமேபொய்த்துவிடும்போது,அதன்பின்னர்அந்தவானத்தில்வாழ்வதாகச் சொல்லப்படுகிறவர்களுக்கு விழாக்கள் ஏது? வழிபாடுதான் ஏது?



# முட்டாள்களுக்கு வீணன் உபதேசம்

ஒரு ஊரில், சலவைத் தொழிலாளி ஒருவர் இருந்தார். அவரிடம் இரண்டு கழுதைகள் இருந்தன. அவை இரண்டும் ஒரு நாள் மிகவும் கவலையாகப் பேசிக் கொண்டன.

“நாம் சுமந்து வரும் அழுக்குத் துணிகள் மட்டும் சலவை செய்ததும் அழுக்கெல்லாம் போய் வெண்மையாக தெரிகின்றதே! ஆனால், நாம் மட்டும் ஏன் அந்த துணிகளைப் போன்று வெண்மையாக மாற முடியவில்லை?” என்று தங்களுக்குள் கேட்டுக் கொண்டன.

அந்தப் பக்கமாக வந்த ஆடு கழுதைகளின் பேச்சை கேட்டுவிட்டது. கழுதைகளின் முட்டாள்தனமான பேச்சை கேட்டு அந்த ஆட்டுக்கு சிரிப்பே வந்துவிட்டது. அது கழுதைகளைப் பார்த்து இப்படி கேட்டது,

“கழுதைகளே! நலம்தானா? நீங்கள் இருவரும் உங்களுக்குள் ஏதோ இரகசியம் பேசுவதுபோல் தெரிகின்றதே” என்று அவர்கள் வாயை கிளறியது.

“ஆடே! நலம்தானே? எங்கள் சந்தேகத்தை தீர்க்க யாரும் வரவில்லையே என்று நினைத்தோம். நல்ல வேளை நீ வந்திருக்கிறாய்!” என்றவாறு கழுதைகள் இரண்டும் ஆட்டை நோக்கின.

“கழுதைகளே! நீங்கள் பேசிக் கொண்டிருந்ததை நானும் அறிவேன். உங்கள் சந்தேகம் என்னவென்று எனக்குப் புரிந்துவிட்டது. முட்டாள்தனமான உங்கள் சந்தேகத்தை எப்படிப் போக்குவதென்று எனக்குத் தெரியவில்லை...” என்று கூறியது ஆடு.

இதைக் கேட்ட கழுதைகளுக்கு கோபம் வந்துவிட்டது. “ஆடே எங்களைப் பார்த்து முட்டாள்கள் என்று கூறுகிறாயா? எங்கள் சந்தேகத்திற்கு உன்னால் விடை கூற முடிந்தால் கூறு... இல்லையேல் இந்த இடத்தை விட்டு ஓடு... அதை விட்டு விட்டு முட்டாள்தனமான சந்தேகம் எனக் கூறி எங்களை ஏளனம் செய்யாதே” என்று கோபமாக கூறின.

“கழுதைகளே! நீங்கள் என் மீது ஏன் இப்படி கோபப்படுகிறீர்கள்? துணிகளும் நீங்களும் ஒன்றா? அப்படியிருக்க முட்டாள்தனமான உங்கள் கேள்விக்கு என்னால் எப்படி பதில் கூற முடியும்? அப்படியே நான் பதில் கூறினால் நானும் உங்களோடு சேர்ந்து முட்டாளாகி விடுவேன்” என்று கூறியது.

கழுதைகள் இரண்டும் பொறுமை இழந்தன. தங்களின் ஆத்திரத்தை எல்லாம் ஒன்று திரட்டி ஆட்டை எட்டி உதைத்தன.

கழுதைகள் உதைத்த வேகத்தில் ஆடு எங்கோ சென்று விழுந்தது. வலி தாங்காமல் நொண்டி நொண்டி நடந்து சென்றது.

■






# அட்சய பாத்திரம்

அள்ள அள்ள குறையாத உணவினைத் தரக்கூடிய பாத்திரம் அட்சய பாத்திரம். இதனைப் பற்றி புராணக் கதைகளில் கூறப்பட்டுள்ளது. இந்தப் பாத்திரத்தில் உணவு இட்டால் எடுக்க எடுக்க கொடுக்கும் தன்மைக் கொண்டதாம். மகாபாரத்தில், சூதாட்டத்தில் அனைத்தையும் இழந்த பாண்டவர்கள் வனவாசம் மேற்கொள்கின்றனர். ஆரம்பத்தில் காட்டிலுள்ள காய், கனிகளை உண்டு வாழ்ந்த அவர்கள் பின் மிகுந்த வறுமையில் வாடினர். அப்போது ஸ்ரீ கிருஷ்ண பகவான் அட்சயப் பாத்திரத்தின் மகிமையையும் அதனை சூரிய பகவானிடம் இருந்து பெறும் வழியையும் கூறிகின்றார். பாண்டவர்களும் சூரியனை நோக்கி கடும் தவம் செய்து அட்சய பாத்திரத்தை பெறுகின்றனர். மணிமேகலை காப்பியத்திலும் அட்சய பாத்திரத்தை ஒத்த அமுதசுரபி என்னும் பாத்திரம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கு.அவினாஷ், வத்தளை**



**“மொத்த உலகையும் உங்கள் சொந்தமாக்கிக் கொள்ளப் பழகுங்கள். எவருமே அந்நியர் அல்லர். இந்த மொத்த உலகமும் உங்கள் சொந்தம்”**

**– அன்னை ஸ்ரீ சாரதா தேவி**

அன்னை ஸ்ரீ சாரதா தேவி, ஆன்மிகவாதியும், இராமகிருஷ்ணரின் மனைவியும் ஆவார். இராமகிருஷ்ண இயக்கத்தின் வளர்ச்சிக்கு முக்கியத் தூணாக இருந்தவர். அந்த இயக்கத்தின் ஆணிவேராகத் திகழ்ந்து ஏராளமான சீடர்களை ஆன்மிகப் பாதையில் வழி நடத்தினார்.

அன்னை அவர்கள், மேற்குவங்க மாநிலத்தின் ஜெயராம்பாடி கிராமத்தில் 1853ஆம் ஆண்டு பிறந்தார். தந்தை கோயில் பூசாரி. இவர், பாடசாலைக்குச் சென்று கற்றதில்லை. இளம் வயதிலேயே தனித்தன்மையுடன் விளங்கினார். கழுத்து வரை நிற்கும் தண்ணீரில் இறங்கி, பசுக்களுக்குப் புல் வெட்டி வருவார்.வயலில் வேலை செய்பவர்களுக்கு சாப்பாடு கொண்டுவந்து கொடுப்பார். பருத்தித் தோட்டத்தில் தாயுடன் சேர்ந்து பருத்தி எடுப்பார். ஒருமுறை கடும் பஞ்சம் ஏற்பட்டபோது, அப்பா பத்திரப்படுத்தி வைத்திருந்த அரிசியை எடுத்து சமைத்து, ஏழைகளுக்குப் பரிமாறி, பசியாற்றினார்.

■



புது உயிர்

# கொன்றுண்ணிப்பறவை கழுகு

பறவைகளின் வண்ணமயமான சிறகுகள் தான் அவற்றை மற்ற உயிரினங்களிலிருந்து தனித்துக் காட்டுகின்றன என்று சொல்லலாம். அந்தவகையில் வலுவான கால்களும், அகண்ட நீண்ட இறக்கைகளும், பெரிய கண்களும், கூரிய நுனியுடைய வளைந்த அலகும் கொண்ட பறவை தான் கழுகு.

கழுகு (EAGLE) என்பது அக்சிபிட்ரிடே (ACCIPITRIDAE) என்னும் பறவைக் குடும்பத்தைச் சேர்ந்த வலுவான பெரிய கொன்றுண்ணிப் பறவையாகும். கழுகுகளில் மொத்தம் 74 வகையான இனங்கள் உள்ளன. அவற்றில் சுமார் 60க்கும் மேற்பட்ட வகைகள் யூரேசியா மற்றும் ஆபிரிக்காவில் உள்ளன. தமிழில் ஏழால், கழுகு, கங்கம், கூளி, பருந்து, பணவை, பாறு, பூகம், வல்லூறு என பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. கழுகு அதிகாரம், சுதந்திரம், மேன்மை, கம்பீரம் ஆகியவற்றின் அடையாளமாகக் கருதப்படுகிறது. இதனால் அதைப் பறவைகளின் அரசன் என்று சிறப்பித்துக் கூறுகின்றனர்.

மேலும் கழுகு அமெரிக்காவின் தேசியப் பறவையாகும். பறவை இனத்திலேயே கழுகு மட்டும் தான் சுமார் 70 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றது. கழுகுதான் வானில் மிக உயரத்தில் பறக்கக் கூடியது. மேலும் கழுகுகள் புயலை விரும்புகின்றன. புயல் காற்றினால் அவை மேகங்களுக்கு மேலே உயர்த்தப்படுகின்றன. இதனால் அவை சிறகினை விரித்துக் காற்றில் மிதக்கவும், அதன் மூலம் இளைப்பாறவும் செய்கின்றன.

கழுகின் கண்கள் அளவில் பெரியவை. அதன் கண் பார்வை மிகக் கூர்மையானது. வட்டமடித்துக் கொண்டே உயரே பறந்து கொண்டிருந்தாலும் கீழே நகரும் எலி, கோழிக் குஞ்சு போன்ற சிறு உயிரினங்களைக் கண்டால் “விர்” என்று கீழ் நோக்கிப் பாய்ந்து வந்து தனக்கான உணவை, தன் வலுவான கூரிய நகங்களால் பற்றிப் பிடித்து தன் கூர்மையான அலகினால் கொத்திக் கொத்தி தின்னும்.

இவ்வாறு கொன்று தின்பதால் இப்பறவை கொன்று தின்னிப் பறவை அல்லது கொன்றுண்ணிப் பறவை எனவும் அழைக்கப்படுகிறது. கழுகின் கண்கள் மற்றும் கால்பகுதிகள் மஞ்சள் நிறத்திலும், உடல் மற்றும் இறக்கைகள் பழுப்பு நிறத்திலும். தலை மற்றும் வால் பகுதிகள் வெள்ளை நிறத்திலும் காணப்படுகின்றன.







ஒருவன் மின்மினி

அன்பு தம்பி, தங்கையரே, இது உங்களுக்கான பக்கம். இதில் உங்கள் சித்திரங்கள், ஆக்கங்கள், பிறந்தநாள் வாழ்த்துகள், உங்கள் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் இப்பகுதி பற்றிய உங்கள் கருத்துகளை நீங்கள் எங்களுடன் வட்ஸப் அல்லது தபால் மூலம் பகிர்ந்துகொள்ளலாம். அவை, ஒருவன் மின்மினி பக்கத்தில் வெளியாகும்.

ஆசிரியர் பீடம், வெல்லாட்ரிக்ஸ் கட்டிடம், 2ஆம் மாடி, டெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு – 09 0740162534



ஒருவன் மருத்துவம்

# பச்சிளம் குழந்தைகளுக்கான குளியல்




- ஷெம்போ மற்றும் பொடி வொஷ் போன்றவற்றை குழந்தை சுகமாக உணருகிறதா என்பதை முக்கியமாக அறிய வேண்டும்.
- குளிப்பாட்டும் நீர் வெதுவெதுப்பாக இருக்க வேண்டும். குழந்தை உணவு அருந்தி அரை மணி நேரம் கழித்தே குளிப்பாட்ட வேண்டும்.
- முதலில் குழந்தைக்கு எண்ணெய் மசாஜ் செய்து மெல்லிய விரிப்பில் 15 நிமிடம் கிடத்தலாம்.
- எண்ணெய் மசாஜ் செய்த பிறகு குழந்தை வழுக்கும் என்பதால் அதை கையாள்வதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.
- குளிப்பாட்ட வைத்திருக்கும் தண்ணீரை கை வைத்து தொட்டுப் பார்த்து குளிக்க தகுந்த சூட்டுடன் இருப்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும்.
- பேசினில் குழந்தையின் உடல் பகுதி நனையும் வரை மட்டுமே நீர் இருக்க வேண்டும்.
- குழந்தையின் தலை மற்றும் கழுத்தைப் பிடித்துக் கொண்டு மெதுவாக பேஷினில் வைக்கவும். ஒரு கையால் குழந்தையை பிடித்துக் கொள்ளவும்.
- முதலில் குழந்தையின் கண்களை சுத்தம் செய்ய மெல்லிய இதமான துணியை, தண்ணீரில் நனைத்து மெதுவாக வெளிப்புறமாக துடைக்கலாம்.
- பின்னர் வாய், கழுத்து மற்றும் காதுகளை சுத்தம் செய்ய மென்மையான பருத்தித் துணியை தண்ணீரில் நனைத்துப் பயன்படுத்தலாம். காதின் வெளிப்பகுதியை சுத்தம் செய்துவிட்டு உள்பகுதியில் எதுவும் செய்யக் கூடாது.
- தொப்புள் காயவில்லை என்றால் மிகவும் கவனமாக அந்தப் பகுதியை ஈரம் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தெரியாமல் ஈரம் பட்டுவிட்டால் உடனடியாக நன்கு உலர்ந்த மெல்லிய பருத்தித் துணியால் துடைத்து விட வேண்டும்.
- தொப்புள் அருகில் இருந்து துடைக்க ஆரம்பித்து வெளிப்புறமாக தொடர வேண்டும். பிறகு கைகளை சுத்தம் செய்து அக்குள் மற்றும் கைகளின் மடிப்புகளை சுத்தம் செய்யலாம்.
- பிறகு உடலின் மற்ற பகுதிகளை வெந்நீரில் நனைத்து பிழிந்து வேறொரு சுத்தமான துணியால் சுத்தம் செய்துவிட்டு டப்பில் இருக்கும் தண்ணீரை மாற்றிவிட்டு தலையை மேல்நோக்கி பிடித்து பின்பக்கம் வழியுமாறு நீரை ஊற்றவும்.
- குழந்தையின் முகத்தில் நீர் வடியாதபடி நம் கையை குழந்தையின் நெற்றியில் தடுப்பு போல் வைத்துக் கொள்ளலாம்.
- தலையை மிருதுவான சோப் அல்லது ஷெம்போ போட்டு சுத்தம் செய்யலாம்.
- பிறகு உலர்ந்த துணியால் துடைத்து விட்டு புதிய சட்டையை அணிவிக்கலாம்.

### தவிர்க்க வேண்டியவை

- காது, மூக்கு, கண்ணில் எண்ணெய் ஊற்றக்கூடாது, தொண்டையில் கையை விட்டு சளியை எடுக்க கூடாது,
- தலையில் எண்ணெய் தடவி கடலை மாவு, பயத்த மாவு போன்றவற்றை தேய்க்கக் கூடாது.
- தற்போதைய சாம்பிராணி, பவுடர், கண்களின் புருவத்தில் மை மற்றும் நெற்றியில் விபூதி, குங்குமம் போன்றவற்றில் இரசாயனக் கலப்பு இருப்பதால் அவற்றை முற்றிலும் தவிர்ப்பது நல்லது. ■



ஹெல்த் டிப்ஸ்

# மாதவிடாய் சுகாதார குறிப்புகள்

- ஒவ்வொரு பெண்ணின் மாதவிடாய் சுழற்சியும் வேறுபட்டிருக்கும். தங்கள் சொந்த சுழற்சியை கண்காணிப்பதன் மூலம், மாதவிடாய் தொடர்பான மாற்றங்களை முன்கூட்டியே அறிந்து அணிவது மற்றும் கைகளை அடிக்கடி கழுவுவது போன்ற சுகாதார பழக்கங்களை கடைபிடிக்க வேண்டும்.
- இரும்புச்சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்வது இரத்த இழப்பை ஈடுசெய்ய உதவும். பச்சை இலை காய்கறிகள், பழங்கள், சிறுதானியங்கள் போன்ற உணவுகளை உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.
- மிதமான உடற்பயிற்சி உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும். இது மாதவிடாய் வலியை குறைக்கவும் உதவும்.
- மன அழுத்தம் மாதவிடாய் தொடர்பான பிரச்சினைகளை அதிகரிக்க செய்யும். யோகா, தியானம் போன்ற மனதைத் தளர்த்தும் பயிற்சிகளை மேற்கொள்ளலாம்.



கொள்ளலாம். இது மன அழுத்தத்தை குறைத்து, திட்டமிடலுக்கு உதவும்.

- சந்தையில் பல்வேறு வகையான மாதவிடாய் தயாரிப்புகள் கிடைக்கின்றன. தனிநபரின் தேவை, வசதி மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப சரியான தயாரிப்பைத் தேர்ந்தெடுப்பது முக்கியம்.
- மாதவிடாய் தயாரிப்புகளை குறிப்பிட்ட இடைவெளியில் மாற்றுவது மிகவும் முக்கியம். இது தொற்று நோய்கள் ஏற்படுவதைத் தடுக்கும்.
- மாதவிடாய் காலத்தில் தினமும் குளிப்பது, சுத்தமான உள்ளாடைகளை
- பொது இடங்களில் கழிப்பறைகளை பயன்படுத்தும் போது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.
- மாதவிடாய் தொடர்பாக ஏதேனும் பிரச்சனை இருப்பின், உடனடியாக மருத்துவரை அணுகுதல் அவசியம்.
- மாதவிடாய் குறித்த தகவல்களை மற்ற பெண்களுடன் பகிர்ந்து கொள்ளுதல் முக்கியம். இது மாதவிடாய் குறித்த தவறான கருத்துக்களை நீக்கி, சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும்.



"என் கண்ணுக்குள்ள சித்திரகுப்தன் தெரிகிறான் டொக்டர்"

"கவலையே படாதீங்க. இப்பதான் வைத்தியம் ஆரம்பிச்சிருக்கேன். கொஞ்சநேரத்துல எமதர்மனே தெரிவான்"



ஆய்வு

# நீண்ட நேரம் அமர்வது இதய நோய்க்கு வழிவகுக்கும்

நீண்ட நேரம் அமர்ந்திருப்பவர்கள் உடற் பயிற்சி செய்தாலும் இதய நோய் ஏற்படுவதற் கான வாய்ப்புகள் அதிகம் என சமீபத்திய ஆய்வுகள் கண்டறிந்துள்ளன.

போஸ்டனைச் சேர்ந்த இதவியல் நிபுணரான மருத்துவர் எஸிம் அஜிம்ஃபோ (Ezim Ajufo), நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்காக டயட், உடற்பயிற்சிகளை மேற்கொண்டாலும் நாள் முழுவதும் அமர்ந்திருப்பது இதயநோய்களை உண்டாக்கக்கூடும் எனக் கண்டறிந்துள்ளார்.

மேலும், "நாம் உடல் ரீதியான செயற்பாடு களை மேற்கொள்வதில்லை என்றாலும் கூட நீண்ட நேரம் அமர்ந்திருப்பதையாவது குறைக்க வேண்டும்" என்கிறார்.

'ஜேர்னல் ஒஃப் அமெரிக்கன் கொலேஜ் ஒஃப்' கார்டியோலஜி என்ற இதழில் இந்த ஆய்வு வெளி யாகியிருக்கிறது.

90,000 பேரிடம் ஆக்செலோமீற்றர்கள் பொருத்தி அவர்கள் அமர்ந்திருக்கும் போதும், பிற வேலைகள் செய்யும்போதும் ஏற்படும் உடலியல் மாற்றங்களை வைத்து ஆய்வு மேற் கொண்டுள்ளனர்.

நீண்ட நேரம் அமர்ந்திருப்பது உடலுக்கு நல்லதல்ல என்ற கருத்து பொதுவாக இருக்கிறது. ஆனால் என்னென்ன பிரச்சினைகள் எதனால் ஏற்படுகின்றன என்பதை துல்லியமாக அறிய முடியவில்லை.

மேலும் ஒரு நாளில் எவ்வளவு நேரம் அமர்ந்திருப்பது மோசமானது என்பதை விளக்கும், வழிகாட்டு நெறிமுறைகளும் இல்லை. இதனால் இந்த தளத்தில் இன்னும் அதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கர்ப்பகால கால் வீக்கம்

கர்ப்பகாலத்தில் கால் வீக்கம் என்பது இயல்பான விடயம்தான் என்றாலும், வீக்கத்தை பொறுத்து, அது சாதாரணமா அல்லது ஆபத்தானதா என்பதை கண்டறியலாம்.

கருவிலுள்ள குழந்தைக்கு ஆரம்ப நாட்களில் தாயிடமிருந்துதான் இரத்த ஓட்டம் செல்ல வேண்டியிருக்கும். அதனால் இரத்தத்தின் அளவு அதிகமாகும். இரத்த ஓட்ட அளவு அதிகரிப்பதன் விளைவாக, கர்ப்பிணிகளுக்கு உடலில், குறிப்பாக கால்களில் அதிக அளவில் நீர் கோர்த்துக் கொள்ளும். அதனால் கால்களில் வீக்கம் ஏற்படுவதும் இயல்பாகவே நடக்கும்.

மேலும், கர்ப்ப காலத்தில் கால் வீக்கம் உள்ள பெண்கள், கால்களில் வலி இல்லாதவரை அதுகுறித்து பயப்படத் தேவையில்லை. கர்ப்பிணிகளுக்கு கர்ப்பத்தின் 12ஆவது அல்லது 13ஆவது வாரங்களில் கால்கள் வீங்க ஆரம்பிக்கும். 28 வாரங்களில், அதாவது கர்ப்பத்தின் 7ஆவது மாதத்தில் பெரும்பாலான கர்ப்பிணிகளுக்கு கால் வீக்கம் இருக்கும்.

கர்ப்பத்தில் ஒரு குழந்தைதான் இருக்கிறது, இரத்த அழுத்தம் இல்லை என்ற நிலையில், கால் வீக்கம் இருந்தால், அது குறித்துக் கவலைப்படத் தேவையில்லை. அதுவே ஒரு காலில் மட்டும்தான் வீக்கம் இருக்கிறது, இன்னொரு கால் சாதாரணமாக இருக்கிறது, வீக்கமுள்ள காலில் வலியும் இருக்கிறது என்றால் அதை சாதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டாம். வீக்கமுள்ள காலில் இரத்தம் உறைவதற்கான வாய்ப்புகள் உண்டு என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இரட்டை அல்லது மூன்று என ஒன்றுக்கு மேலான குழந்தைகளைச் சுமக்கும் பெண்களுக்கு கால் வீக்கம் என்பது சாதாரணம். எப்படிப்பட்ட கால் வீக்கமும் இரத்த அழுத்தத்தின் காரணமாக ஏற்படவில்லை என்றால் பொறுத்திருந்து பார்க்கலாம்.

அதுவே, கர்ப்பிணிக்கு இரத்த அழுத்தம் அதிகரிக்க ஆரம்பித்தால், அவரது உடலிலிருந்து அதிக அளவிலான புரதச்சத்து வெளியேறுவதாக அர்த்தம். அந்நிலையில் அவர்கள் மருத்துவரை அணுகி, இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்கான சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் கால் வீக்கமானது கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பித்தால் பிரச்சினையில்லை. திடீரென ஏற்பட்டால்தான் கவனமாக இருக்க வேண்டும். உடல் முழுவதும் வீங்கினாலோ, முகம் வீங்கினாலோ, உடைகள் இறுக்காமானாலோ அதெல்லாம் அசாதாரண அறிகுறிகள் என உணர வேண்டும்.

முக்கியமாக, கர்ப்ப காலத்தில் பெண் உடலில் என்ன மாற்றம் நிகழ்ந்தாலும் அது கருவிலுள்ள குழந்தையையும் பாதிக்கும் என்பதால் எந்த அறிகுறியையும் அலட்சியம் செய்யாமல் இருப்பதே பாதுகாப்பானது.





# 12,000 கிலோமீற்றர் இடைவெளியில் ரொபோ மூலம் அறுவை சிகிச்சை

சீனாவின் ஷங்காயில் இருந்து 12000 கி.மீ தூரத்தை கடந்து மொரோக்கோவில் ரொபோவை பயன்படுத்தி ரிமோட் புரோஸ்டேட் புற்றுநோய் அறுவை சிகிச்சையை, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மருத்துவர்கள் செய்து முடித்துள்ளனர்.

சீனாவின் ஷாங்காயில் இருந்து 12000 கி.மீ தூரத்தை கடந்து மொரோக்கோவில் ரோபோவை பயன்படுத்தி ரிமோட் புரோஸ்டேட் புற்றுநோய் அறுவை சிகிச்சையை, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மருத்துவர் செய்து முடித்துள்ளனர்.

30000 கிலோமீட்டருக்கும் அதிகமான இருவழி பரிமாற்றத் துடன் இந்த கண்டங்களுக்கிடை யான அறுவை சிகிச்சையானது உலகிலேயே மிக நீண்ட தொலை வில் நடைபெற்ற மனித அறுவை சிகிச்சை என்ற சாதனையை படைத் துள்ளது.

இதற்கு முன்பு 27,000 கி.மீ பரி மாற்ற தூரத்துடன் ஷாங்காய் மற் றும் பெனினில் இடையே 'Toumai' ரொபோவின் உதவியுடன் கடந்த ஒக்டோபரில் அறுவை சிகிச்சை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.




கனுஷியா புஷ்பகுமார்

# போதிய அரசியல் தெளிவு இல்லை!



ஐக்கிய மக்கள் கூட்டணி சார்பில் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள லக்ஷமன் கிரிஎல்லவின் மகளுக்கு இலங்கை அரசியல் வரலாறுகள் தொடர்பில் போதிய தெளிவு இல்லை என அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகிறது.

நாடாளுமன்ற அமர்வு ஆரம்பித்த கடந்த 03ஆம் திகதி அவர் ஆற்றிய உரையின் பின்னரே இவ்விடயம் வெளிவந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கைக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி வாக்களித்ததாக அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த நாடாளுமன்றத்தில் மக்கள் விடுதலை முன்னணி பிரதிநிதித்துவப் படுத்தப்படவில்லை. தேசிய மக்கள் சக்தியின் இரண்டு எம்.பி.க்கள் மற்றும் ஒரு பெண் எம்.பி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இருந்த போதிலும், மக்கள் விடுதலை முன்னணி இந்த ஒப்பந்தத்தை எதிர்த்தது என தெரிவிப்பது, உண்மைகளை திரிபுபடுத்தும் திட்டமிட்ட முயற்சியா என அரசியல் விமர்சகர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

## அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை கோரும் நீதிபதிகள்

அமைச்சர்களின் பாவனைக்காக ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களை தங்களது பாவனைக்கு வழங்குமாறு மூன்று நீதிமன்ற நீதிபதிகள் முன்வைத்த கோரிக்கை தொடர்பில் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக, இந்த அமைச்சகங்களும் பல நிறுவனங்களும் இந்த உத்தியோகபூர்வ இல்லங்களை வாடகைக்கு வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தன. தற்போது, அந்தந்த உத்தியோகபூர்வ இல்லங்களில் மறுசீரமைப்பு பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

தற்போது அரசாங்கத்தின் கீழ் உள்ள அமைச்சர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை முப்பத்தைந்து ஆகும்.



## அரசாங்கம் மீது பழி சுமத்தல்கள்

அரசாங்கத்தால் உடனடியாக தீர்க்க முடியாத அரிசி மற்றும் தேங்காய் விலையேற்றம் உள்ளிட்டவை தொடர்பில் தோற்கடிக்கப்பட்ட கட்சிகள் திட்டமிட்டு அரசாங்கம் மீது குற்றம் சுமத்தி வருவதாக திரைக்கு பின்னால் பேசப்பட்டு வருகிறது. அரசியல் சார்ந்து செயற்படும் சில ஊடகங்களும், அரசாங்கத்தை எதிர்க்கும் சில எதிர்க்கட்சிகளும் இந்த விடயத்தில் அரசாங்கம் மீது போலியான பழிசுமத்தல்களை மேற்கொள்வதாக கூறப்படுகிறது. இதன்மூலம், நாட்டு மக்களுக்கு அரசாங்கம் மீது காணப்படும் நம்பிக்கை படிப்படையாக குறைவடையும் வாய்ப்புகள் உள்ளதாகவும் அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

## ராஜபக்சவின் ஆட்சியின் கடன் இன்னும் நிலுவையில்

மகிந்த ராஜபகஷ வின் ஆட்சி யின் ஆரம்ப காலத்தில் ஆரம் பிக்கப்பட்டு மூடப்பட்ட "மிஹின் லங்கா" நிறுவனம் ஏற்கனவே பாரிய செலவீனங்களைச் செய்து வருவதாக தெரியவந் துள்ளது.



திறைசேரியின் உத்தரவாதத் தின் பேரில் இலங்கை வங்கி 3,173 மில்லியன் ரூபாவையும், மக்கள் வங்கி 3,173 மில்லியன் ரூபாவையும் மிஹின் லங்கா நிறுவனத்திற்கு வழங்கியுள்ள தாக அறிக்கை ஒன்றில் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதனால், இவ்வாண்டு ஒகஸ்ட் 31ம் திகதி வரை இந்த கடன்கள் செலுத்தப்படவில்லை என தெரியவந்துள்ளது. மிஹின் லங்கா நிறுவனம் சிறிது காலத்தின் பின்னர் "ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ்" உடன் இணைக்கப்பட்டது.

எவ்வாறாயினும், மிஹின் லங்கா நிறுவனத்தின் கடன் இன்னும் நிலுவையில் உள்ள-தாக இந்த சமீபத்திய அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

## இனவாதத்தை விதைக்கும் முயற்சிகளுக்கு இடமளிக்கப் போவதில்லை

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட தலைவர்கள் தனிப்பட்ட முறையில் அவமதிக்கப்பட்டாலும், இனவாதத்தை விதைக்கும் முயற்சிகளுக்கு இடமளிக்கப் போவதில்லை என அர சாங்க தரப்பிலிருந்து




செய்திகள் வெளியாகி யுள்ளன.

அண்மையில் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வுகளின் போதும் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்திய தரப்பினரிடமிருந்து இவ்வாறான தொனியில் கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்தன. எனினும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இனவாதமாக செயற்படு-வதாக பல அரசியல் தலைமைகளும் நேரடியா-கவே குற்றச்சாட்டுக்களை முன்வைத்த நிலையிலேயே தற்போது இவ்வாறான தகவல்கள் வெளியாகியுள்ளன.






# மிரள வைக்கும் அலாஸ்கா முக்கோணம்-The Alaska Triangle

மர்மங்கள் நிறைந்த பெர்முடா முக்கோணம் பற்றி தெரியும். கப்பலிலும் விமானத்திலும் இந்த பகுதியை கடப்பவர்கள் மாயமாய் மறைந்துவிடுவார்கள். இந்த பெர்முடா முக்கோணத்தைப் போன்றே மற்றொரு மர்மம் நிறைந்த ஒரு பகுதி பூமியில் உள்ளது. அது தான் அலாஸ்கா முக்கோணம்.

அலாஸ்கா முக்கோணம் என்பது தெற்கு பகுதியில் ஏங்கரெஜ் முதல் ஜுனாவ் வரையிலும் வடக்கில் உட்கியாக்விக் புள்ளியிலும் இணையும் முக்கோண வடிவ உருவக பகுதியாகும். நிலம் முக்கோணமாக இருப்பதில்லை. ஆனால், மர்மங்கள் நிகழ்வது இந்த மூன்று இடங்களில். நடுவில் முக்கோணத்தை கற்பனை செய்து கொண்டால் சரியாக அந்த பகுதியில் சம்பவங்கள் நிகழ்கிறது.

அலாஸ்கா முக்கோணத்தில் 1950இல் டக்லஸ் சி-54 ஸ்கைமாஸ்டர் இராணுவ விமானம் ஒன்று 44 பேரோடு காணாமல் போனது. அதன் பின்னர் ஆயிரக்கணக்கான தன்னார்வலர்களின் உதவியோடு அமெரிக்க மற்றும் கனேடிய விமானங்கள் தேடுதல் முயற்சியில் ஈடுபட்டன. ஆனால் சி-54 விமானம் பற்றியோ பயணிகளைப் பற்றியோ எந்த தகவலும் கிடைக்கவில்லை.

அலாஸ்கா முக்கோணம் ஒக்டோபர் 1972இல் குறிப்பிடத்தக்க கவனத்தை ஈர்த்தது, அமெரிக்க ஹவுஸ் மெஜாரிட்டி தலைவர் தோமஸ் ஹேல் போக்ஸ் சீனியர், அலாஸ்கா காங்கிரஸின் நிக் பெகிச், பெகிச்சின் உதவியாளர் ரசல் பிரவுன் மற்றும்




பைலட் டான் ஜான்ஸ் ஆகியோரை ஏற்றிச் சென்ற விமானம் ஏங்கரேஜில் இருந்து ஜுனாவ் செல்லும் வழியில் மாயமானது. விமானம் பற்றி ஒரு தடயமும் இல்லாமல் காணாமல் போனது. தேடுதலில் விமானத்தின் சிதைவுகள் கூட கிடைக்கவில்லை.

மற்றொரு முக்கிய சம்பவம்... 25 வயதான கேரி ஃபிராங்க் சோதர்டன் முக்கோண நடுப்பகுதியில் வேட்டையாடச் சென்றார். ஆனால் வீடு திரும்பவில்லை. இரண்டு தசாப்தங்களுக்குப் பிறகு 1997இல், வடகிழக்கு அலாஸ்காவில் உள்ள முள்ளம்பன்றி ஆற்றின் ஓரத்தில் ஒரு மனித மண்டை ஓடு கண்டுபிடிக்கப்பட்டது. 'டிஎன்ஏ' சோதனைப்படி அந்த மண்டை ஓடு கேரி பிராங்கின் உடையது என்று முடிவு செய்யப்பட்டது. மேலும் அவர் கரடியால் கொல்லப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

அதன் பின்னர் இந்த முக்கோண பகுதியில் 20,000-க்கு மேற்பட்டோர் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளனர்.

இதுவரை அவர்கள் என்ன ஆனார்கள் என்பது இன்னும் மர்மமாகவே காணப்படுகின்றது. இதனால் தான் இந்த பகுதியில் மக்கள் தொகை குறைவாக உள்ளது. இதுகுறித்து எடுத்த புள்ளிவிவரப்படி, அலாஸ்காவில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியான 2,250 பேர் காணாமல் போயிருப்பது தெரியவந்துள்ளது.

அலாஸ்கா முக்கோணத்தில் அசாதாரண காந்த செயல்பாடு விமானத்தின் பறக்கும் திசையை விட்டு குழப்புவதாகவும், அங்கு வானில் தோன்றும் அதிசய ஒளி வீச்சுகள் விசித்திரமான வானத்தில் செயல்பாடுகளில் அவர்கள் சிக்கி விடுகிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

வழக்கமாக அமெரிக்கர்கள் நம்பும் வேற்று கிரகவாசிகள் இந்தப் பகுதியில் வசிப்பதாக கூறுகின்றனர். இன்னும் சிலர் பேய்கள் தான் இது போன்ற சம்பவங்களை நிகழ்த்துவதாகவும் நம்புகின்றனர். அலாஸ்காவின் பூர்வீகக்குடி மக்களான டிலிங்கிட் மற்றும் சிம்ஷியன் சமூக மக்கள் காணாமல் போனவர்கள் பற்றியும் கதையொன்றை கூறுகின்றனர்.

குஷ்டகா என்னும் நீர் நாய், தான் நினைத்த வடிவத்தை எடுக்கும் ஆற்றல் கொண்டதாம். அது, விபத்துகளால் மனிதர்களை பாதிக்க வைத்து அவர்களுக்கு உதவுவதைப் போல மனித வேடம் கொண்டு அவர்களை நடுக்காட்டுக்கு அழைத்துச் சென்று அவர்களை கிழித்து தங்களைப் போன்ற நீர்நாயாக மாற்றுகின்றது என, அலாஸ்கா முக்கோணம் பற்றி பல கதைகள் கூறப்படுகின்றன. இதில் எது உண்மை, எது பொய் என்பது இன்றுவரை மர்மமாகவே உள்ளது...!

■

# ஹைக்கூ கவிதைகள்



**நீதிமன்றம்**

எல்லா குற்றங்களையும் மன்னிக்கும்
ஒரே நீதிமன்றம்
அம்மாவின் இதயம்

**குழந்தை**

இருட்டில் இருவர்
செதுக்கிய சிற்பம்

**கவிதை**

உன்னை பற்றி எழுதியதை கவிதை
என்றால், உன்னை
பார்த்தால் என்ன சொல்வர்?

அப்துல் முஹம்மத், மாத்தறை.




# திருவாசகத்தின் மகிமை

லண்டனில் கர்ப்பிணி பெண்மணி ஒருவர் தன்னுடைய வயிற்றில் இருந்த சிசு கொஞ்சமும் நகராமல் இருப்பதை இரவில் திடீரென்று உணர்ந்தார். பதறிப்போன அவரும் அவருடைய கணவரும் உடனே மருத்துவரை அணுகினர். மருத்துவர் பரிசோதித்துவிட்டு காலையில் ஸ்கேன் செய்து பார்க்கலாம் என்றும், சிசு கர்ப்பப்பைக்குள் வட்டமடிக்காமல் இருந்தால் அது உயிருடன் இல்லை என்பதாகவே தனக்கு படுவதாக கணவரிடம் மட்டும் இரகசியமாக சொல்லிவிட்டு மனதை திடப்படுத்திக்கொள்ளுமாறு கூறிவிட்டார்.

குழப்பத்துடன் வீடு திரும்பிய கணவன், தன் மனைவிக்கு விடயத்தை சொல்லாமல் கொஞ்சம் அவளுடைய மனநிலையை



மாற்ற 'டேப் ரெக்கோர்டரில்' ஒரு பாடலை போட்டுவிட்டார். தன் வேதனையை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மனைவியின் அருகில் கண் மூடி அமர்ந்திருந்தார்.

திடீரென்று தன் மனைவி தன் தோளை தொட்டு உலுக்கவும் கண்ணை திறந்தார். மனைவி ஆனந்த கண்ணீரோடு சிசு கர்ப்பப்பையின் உள்ளே தற்போது நகர்வதாக சொல்லவும் உடனே மறுபடியும் மருத்துவமனைக்கு இருவரும் பயணப்பட்டனர். மீண்டும் பரிசோதித்த மருத்துவருக்கு பயங்கர ஆச்சர்யம். அவரும் சிசு நகர்வதை உறுதி செய்தார்.

எல்லாவற்றையும் ஒன்று விடாமல் விசாரித்தார். குறிப்பிட்ட பாடலை கேட்டவுடன்தான் குழந்தை நகர்ந்ததை உணர்ந்த அவர் அந்த இசையமைப்பாளரை தெய்வம் என்று வாயார புகழ்ந்தார்.

சிறிது நாட்கள் கழித்து, குழந்தை நல்லபடியாக பிறந்தது. அந்த தம்பதியினர் நேராக அந்த இசையமைப்பாளர் வீட்டுக்கு வந்து அவர் காலில் அந்த குழந்தையை போட்டு, அவர்களும் அவர் காலில் விழுந்து ஆசி வாங்கி சென்றனர்.

அந்த பாடல்கள் திருவாசகம் ஆகும்.

திருமதி ரஞ்சனி, ஹட்டன்.

# பாரதியை துருக்கிய மகாகவி நசீம் ஹிக்மெற்றுக்குள் இனங்காண்போம்!

## புதியதொரு ஒப்பீட்டுப் பார்வை




மகாகவி பாரதியாரை, அவர் உள்ளம் கண்டு கற்காது போனால் கேள்விகள் ஏராளம் எழும் . அவர் வாழ்ந்த சூழலுக்குள் "வேதம்" என்ற பொதுக் கருத்தால் – சொல்லால் குறியீட்டால் அவர் வாழ்ந்த காலத்தினை வரையறை செய்தல் வேண்டும். இந்திய தத்துவ ஞானம், விஞ்ஞானம், மதம், கல்வி அனைத்தையும் உள்ளடக்கியே "வேதம்" என பேராசிரியர் கா. சிவத்தம்பி கூறியுள்ளார்.

வேதம் என்பது, "எல்லாம் சேர்ந்த கலவை" அடக்குமுறை, ஒடுக்குமுறை, பொருள்முதல் வாதம், கருத்து முதல் வாதம் என்பனவெல்லாம் "வேதம்" என்பதுள் அடங்கும். நாம் எதையெதை எடுத்துக்கொள்வது என்பதைப் பொறுத்து நமது கண்ணோட்டம், வர்க்க சாதிய மதப் புரிதலைத் தரும்.

அன்றைய காலத்துப் பாரதியாரின் மனம் எங்ஙனம் உருவாகிறது. அவர் வாழ்நிலை என்ன? இடம், பொருள், ஏவல் என்பனவற்றை அறியும்வரை நாம் கேள்விகளோடு தாம் இருப்போம். அது, தப்பு கிடையாது. பாரதி, உணர்வு பூர்வமாகச் சிந்தித்து அறிவபூர்வமாக எழுதியவன். அவன் தான் வாழுங் காலத்துக் கண்ணாடி. அவனது முரண்பாடு, அவனுக்கு முந்தியவர்களது முரண்பாடு, அது என்னையும், உன்னையும், இனிவரும் தலைமுறையையும் தொடரும்.

இவ்வுலகில் எழுந்த அனைத்துக் கருத்துகளும், அறியப்பட்ட விஞ்ஞான கண்டுபிடிப்புகள், அறிவுகள், கல்விகள் விளக்கங்கள் யாவும் முழுமையானவை அல்ல. ஒரு கால கட்டத்து உண்மை. அது இன்னொரு கட்டத்தில் புனைவாகிவிடும். வேதம் என்பதைப் பார்ப்பனியத்துக்குள் அடக்கிவிட்டனர் நம்காலத்து அறிஞர் பெருமக்கள். நாம், இத்தகைய வட்டத்திற்குள் நின்று பாரதியாரை நோக்க முடியாது. பாரதி முரண்பாடுகளோடும், அபத்த வாழ்வு நிலைக்குள்ளும் வாழ்ந்த மனிதன்! அவனை அவனது காலத்தில் வைத்துப் புரிந்து கொள்வோம் !!

பாரதியார், "இருக்கு, யசுர், சாம, அதர்வண வேதம்" என்பதை மட்டும் கருத்திற் கொண்டு "வேதமுடையது இந்த நாடு" என்று சொன்னாலும் கூட அக்கால வாழ்நிலை அது என்பதனைப் புரிந்து கொள்வோமாக. இன்றும், மேற்குலகில் இலத்தீன் மொழி, அதன் சம்பிரதாயம், அறிவு, மருத்துவ-மொழி இலக்கணம் அனைத்தும் இன-மத சிந்தனைகள் பலவற்றைக் கொண்டிருப்பினும் அது ஐரோப்பிய விஞ்ஞானிகளுக்கு, மருத்துவர்களுக்கு, மொழி கல்விக்கு இலத்தீனை அடிப்படையாகக் கொண்டது. இந்தியாவிலும் இத்தகைய அடிப்படை உண்டு. அது மானுட வளர்ச்சிப் போக்கின் பொது அடிப்படை மானுட சமூக வளர்ச்சிப்போக்கைப் புதிதாகக் கோடு போட்டு உருவாக்க முடியாது. எம் முன்னோர்கள் வரைந்த கோட்டிலிருந்து நாமும் தொடர்வதே சாத்தியம் . பாரதியார், அங்ஙனம் கோடுகளைத் தொடர்ந்தார். அவர், பாப்பாக்களுக்கு எவ்வளவு அழகான அறங்களைச் சொல்கிறார் என்பதனைப் பாருங்கள். இயற்கையோடு நம்மை ஒன்றிக்க வைத்து சக உயிரினங்களின் வாழ்வோடு உறவாட வைக்கும் அழகைத் தரிசிக்கும் எனக்கு "வேதம்" இரண்டாம் பட்சமே.இயற்கைசார் வாழ்வு , காகம், கோழி, குயில் , பசு ஆடு மாடு விளையாட்டு என என்று இவை தாம் விழிமுன் நிழலாடுகிறது. இவற்றையெல்லாம் காட்டிய பாரதி, மானுடரை ஒரே குடைக்குள் கொணர முனைகிறார். "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று அன்றைய பெரும் ஒடுக்குமுறையாளருக்கு வகுப்பு எடுக்கிறார். அன்று, துரும்பைத் தன்னும் அசைக்க முடியாத பலர், பாரதியைப் பாடையில் அனுப்பும்போது கூட இரங்காத கூட்டத்தினர் என்பதனை வரலாறு நிரூபித்திருக்கிறது!



அந்த மகாகவிஞனை எனக்குக் கற்றுத் தந்த ஆரம்பக் கால ஆசிரியை "இரண்டு சிறு கண்கள் இறைவனைப் பார்க்க" என்று கற்பித்த போதும், எப்படிப் பாரதியாரின் "ஓடி விளையாடு பாப்பா" மட்டும் இன்றும் ஞாபகமாகத் தொடர்கிறது "இரண்டு சிறு கண்கள் தேவனைப் பார்க்க" என்ற பாடல் என்னை ஏன்,உடைத்துப் போடவில்லை?

பாரதி, எப்படி எம்மைப் பாப்பாப் பாட்டில் கட்டி வைத்து இயற்கையை, வீடு, வளவை, கோழியை, குருவியை, காகத்தை, பசுவை, வாழ்வை, தாயை, தந்தையை உணரவைக்கிறார். இன்றுவரை எமக்குப் பாரதியார் முண்டாசுடன் வரும் நிழலாகவே பின் தொடர்கிறார்!

இந்த விந்தையை நசீம் ஹிக்மற் (Nazım Hikmet) என்ற துருக்கிய மகா கவிஞனை வாசிப்பவர்கள் புரிவார்கள்! பாரதிக்கும், துருக்கிய மகாகவி நசீம் ஹிக்மெற் அவர்களுக்கும் இடையினில் எந்த முரண்பாட்டினையும் பார்க்க முடியாது! இதன் அர்த்தம் : இருவரும் மானுடர்கள் – இருவரும் ஒரே காலத்தில் வாழ்ந்த மக்கள் கவிஞர்கள் ! (பாரதியார் (1882 -1921), நசீம் ஹிக்மெற் (1902-1963) இவர்கள் சிறாரின் பாதுகாவலர்கள், நேசம் மிக்க பாட்டன்மார்கள்! என்று சொல்வது மிகப் பொருத்தமானது.



நசீம் ஹிக்மெற் அரசியல் கைதியாக வாழ்வின் பெரும் பகுதியினைக் கழித்தவர்.. நாடகம், கவிதை, திரை எழுத்து, நாவல் என பல்துறை விற்பன்னராகத் திகழ்ந்தவர். இவர் Romantic Communist (காதல் கம்யூனிஸ்ட்) எனவும் அழைக்கப்பட்டார். இவரது கவிதைகள் 50க்கு மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க் கப்பட்டுள்ளது. இவரின் சில கவிதைகள் Things I didn't know I loved,Some advice to those who will serve time in Prison, On Livng என்பனவாகும்.

-ப.வி.ஶ்ரீரங்கன் -




# பெண் சிசுக்கொலை, பெண்ணடிமைத் தனத்திற்கு எதிராக எழுதுகோலை ஏந்திய ராஜம் கிருஷ்ணன்



மூத்த தமிழக எழுத்தாளரான ராஜம் கிருஷ்ணன் (5/11/1925 - 20/10/2014), தன் கதை, கட்டுரைகளால் அன்றைய வாசகர் மத்தியில் பெரும் புகழ் பெற்றவர். பெண் விடுதலைக்காகக் குரல் கொடுத்த போராளி.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள முசிறியில் பிறந்த இவர் பள்ளிக்கு சென்று முறையான கல்வி பயிலாதவர். 15 வயதில் கிருஷ்ணன் என்பவருக்கு மணம் செய்விக்கப்பட்டார். மின் பொறியாளரான கணவரின் உதவியால் பல புத்தகங்களைப் படித்து, பின் தானே கதைகளை எழுத ஆரம்பித்தார். ஒரு நாவலுக்கான பொருளை முன்பே திட்டமிட்டு, சம்பந்தப்பட்ட இடங்களில் பிரயாணம் செய்து, மக்களின் வாழ்வைக் கண்டறிய அங்கேயே தங்கி உய்த்துணர்ந்த பின்னரே நாவலை எழுதுவார். இதுவே இவரது தனிச் சிறப்பாகும். பெண் சிசுக்கொலை, பெண்ணடிமைத் தனத்திற்கு எதிராக எழுதுகோலை ஏந்தியவர். உப்பில்லாத தொழிலாளர்களது நிலையைக் கண்டு "கருப்பு மணிகள்னும் நாவலைப் படைத்தார். 54 புதினங்கள், 15 சிறுகதைத் தொகுதிகள், 3 வாழ்க்கை வரலாற்று நூல்கள் என 80க்கும் மேற்பட்ட படைப்புகளை வெளியிட்டவர். உயிருடன் இருந்த போதே இவரது நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. "வேருக்கு நீர்" புதினத்துக்காக 1973 இல் இவர் சாகித்திய அகாடெமி விருதினை பெற்றிருந்தார்.










**இவர் பெற்றுள்ள விருதுகள்**

– 1952ல் நடந்த அகில உலகச் சிறுகதைப் போட்டியில் இவரது "ஊசியும் உணர்வும்" என்ற சிறுகதை தமிழ்ச் சிறுகதைக்குரிய பரிசைப் பெற்று "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" வெளியீடாக வந்து உலகச் சிறுகதை தொகுப்பில் அதன் ஆங்கில வடிவம் இடம் பெற்றது.

-1953ல் கலைமகள் நாராயணசாமி ஐயர் நாவல் பரிசைப் பெற்றது இவரது "பெண் குரல்" எனும் நாவல்.

-1958ல் ஆனந்த விகடன் நடத்திய நாவல் போட்டியில் இவரது "மலர்கள்" நாவல் முதல் பரிசைப் பெற்றது.

-1973ம் ஆண்டின் சாகித்ய அகாடமி விருதை "வேருக்கு நீர்" என்ற நாவலுக்காக இவர் பெற்றார்.

-1975ல் சோவியத்லாந்து – நேரு பரிசைக் கோவா விடுதலைப் போராட்டத்தைச் சித்தரிக்கும் இவரது "வளைக்கரம்" நாவல் பெற்றது. -1979ல் இலக்கியச் சிந்தனைப் பரிசை தனது "கரிப்பு மணிகள்" நாவலுக்குப் பெற்றார். -1982ல் பாரதீய பாஷா பரிஷத் பரிசையும் இலக்கியச் சிந்தனைப் பரிசையும் ஒரு சேர இவரது "சேற்றில் மனிதர்கள்" நாவல் பெற்றது.

-1987ல் தமிழ்நாடு அரசு பரிசை இவரது "சுழலில் மிதக்கும் தீபங்கள்" நாவல் பெற்றது. -1991ல் தமிழ்நாடு அரசின் திரு. வி.க. விருதைப் பெற்றார். இவரின் 59 தொகுதிகள் அமெரிக்க காங்கிரஸ் நூலகத்தில் கிடைக்கப் பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# "மூன்றாவது மனிதன்" எனும் இலக்கிய சஞ்சிகை ஒரு மீட்டல்

இலங்கையிலிருந்து வெளிவந்த "மூன்றாவது மனிதன்" இலக்கிய சஞ்சிகை எம்.பௌசரை ஆசிரியராகக் கொண்டு 1996 இலிருந்து 2007 வரையான காலப்பகுதியில் வெளிவந்தது. இத்தொகுதிகளின் உள்ளடக்கம் அன்றைய காலகட்டத்தில் காணப்பட்ட இலங்கையின் அரசியல், பொருளாதார பின்புலத்தினை அடிப்படையாகக் கொண்டு அவற்றை விமர்சிப்பனவாகவும் மக்களிடத்தில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் எழுத்துக்களாகவும் அமைந்திருந்தன. மூன்றாவது மனிதன் சிறு சஞ்சிகையானது இலக்கிய சஞ்சிகையாக மட்டுமல்லாது இனம் மொழி வர்க்க பேதங்களைக் கடந்து மக்களின் சுபீட்சத்தினை மையப்படுத்தியதாகவும் மாற்றுக் கருத்துக்களுக்கு களம் கொடுப்பதாகவும் அமைந்திருந்தது. ஆசிரியர் எம்.பௌசர் தனது முதலாவது இதழில் "மனித நேயமிக்க படைப்பாளிகளினதும் கலைஞர்களினதும் மௌனத்தைத் தகர்க்கும் குரலாக மூன்றாவது மனிதன் சஞ்சிகை திகழும்" என்கின்ற கருத்தினை ஆணித்தரமாக முன்வைதிருந்தார். அத்துடன் 'தென்னிலங்கையிலிருந்து எழுக குரல்கள், வடக்கிலிருந்து எழுக குரல்கள் ' என்று அப்போதைய அரசியல் யுத்த சூழலினைக் கருத்தில் கொண்டு அனைவருக்கும் அறைகூவல் விடுத்திருந்தார்.

"மூன்றாவது" மனிதன் சஞ்சிகையின் ஒவ்வொரு இதழினதும் அட்டைப்பட வடிவமைப்பு, ஓவியங்கள் என்பன றஷ்மியினதும் பௌசரினதும் கடினமான உழைப்பின் வெளிப்பாடு என்பதனையும் கவனத்திற் கொள்ளத்தக்கது. வாசகர்களை நவீனத்துவத்தின் வாசல் வரை கை பிடித்து அழைத்துச் செல்லும் பாங்கு அற்புதமானது.

மூன்றாவது மனிதன் 5வது இதழில் இருபதாம் நூற்றாண்டு ஈழத்து இலக்கியம் முழுமையாக ஆய்வு செய்யப்பட வேண்டும் என்கின்ற கருதுகோளை ஆசிரியர் கூற்றாக முன்வைக்கின்றார் எம்.பௌசர்.

இதன் தொடர்ச்சியாகவே பௌசர் பிரித்தானியாவிற்கு 2009 இல் புலம் பெயர்ந்து சென்ற பின்னர் "எதுவரை என்கின்ற இலத்திரனியல் சஞ்சிகையை (e Magazine) இரு மாத இதழாக வெளியிடுகிறார். மாற்றுக்கருத்துக்களுக்கு களம் அமைத்துக் கொடுத்த "எதுவரையின்" இரு இதழ்கள் அச்சிலும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

> மனித நேயமிக்க படைப்பாளிகளினதும் கலைஞர்களினதும் மௌனத்தைத் தகர்க்கும் குரலாக அமைந்த மூன்றாவது மனிதன் சஞ்சிகை

(05/04/2009, 03/02/2010) இதுவும் பல்வேறு பட்ட சமூக காரணிகளால் நின்றுபோய் விட்டது.

மூன்றாவது மனிதனில் வெளிவந்த ஆக்கங்களை உற்று நோக்கினால் பரந்து பட்ட எழுத்தாளர்களை இணைக்கும் ஒரு பாலமாக இந்த சஞ்சிகை அமைந்திருந்ததனை அவதானிக்கலாம். வடக்கு – கிழக்கு – மலையகம் – மற்றும் இலங்கையின் ஏனைய மாவட்டங்களில் இருந்தும் பலர் இதில் எழுதியிருக்கின்றனர். ஒவ்வொரு ஆக்கமும் காலத்தின் தேவையையும் உள்ளடக்கத்தின் கனதியினையும் கருத்தில்கொண்டு தேர்வு செய்யப்பட்டிருப்பதனையும் அவதானிக்க முடியும். வன்முறை, போர், இனவாதம் அடங்கலான கலைப்படைப்புகள் நீதியையும் சமத்துவத்தினையும் வற்புறுத்தியதோடல்லாது அவற்றின் மீதான எதிர்வினைகளையும் ஆங்காங்கே பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது, மாற்றுக்கொள்கைக்கான சஞ்சிகையாக மட்டுமல்லாது சிறுகதை, கவிதை, என்பனவற்றில் பரிசோதனை முயற்சிகளையும் மூன்றாவது மனிதன் செய்யத் தவறவில்லை. அத்துடன் புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் அது பின் நிற்கவில்லை. பேராசிரியர் சிவத்தம்பி "ரியலிசம் சோசலிஸ்ட் ரியலிசம் மார்க்சியம் ஒரு விமர்சனத் தலையீடு" என்ற தலைப்பிலும், "இலங்கை அரசியல் சூழலில் தமிழ் தேசியம்" என்ற தலைப்பிலும் இதில் எழுதி உள்ளதுடன், தி. மதுசூதனனின் மறுமலர்ச்சி கால கட்டுரை குறித்த மதிப்பீடும் நிறைய உசாத்துணைகளைக் கொண்டு எழுதப்பட்ட கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. இவை தவிர "மாற்று சினிமா" குறித்து கான்ஸ்டன்டைன், தீப மேத்தா வின் "நெருப்பு" குறித்து சசி கிருஷ்ண மூர்த்தி, "மலையக மக்களின் வரலாற்றில் "மீனாட்சி அம்மாள்" குறித்த கமலினி கதிர்வேலாயுத பிள்ளையின் கட்டுரையும். ஓவியங்கள் குறித்த கோ. கைலாசநாதனின் ஆக்கங்களும் குறிப்பிடத்தக்க அம்சங்களைக் கொண்டவை.



எம்.பௌசரினால், முக்கிய ஆளுமைகளின் நேர்காணல்கள் சமகாலத்தின் தேவை கருதி ஒவ்வொரு இதழிலும் வெளிவந்ததுடன். இவற்றின் முக்கியத்துவம் கருதி பின்னாளில் இவை தொகுப்பு நூலாக வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கது.

சிறு சஞ்சிகைகள் குறுகிய ஆயுளைக் கொண்டவை என்கின்ற வரைவிலக்கணத்தை மூன்றாவது மனிதனும் கொண்டிருப்பது துயர் தரும் விடயமே. ஆனாலும், மூன்றாவது மனிதன் சஞ்சிகை தனது காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்துள்ளது என்பதும் இங்கு மறுக்க முடியாத உண்மையே. புதிய இலக்கிய செல் நெறியை நோக்கி, இன்றைய தமிழ் இலக்கியம் பயணித்துக் கொண்டிருக்கிறது. இனி அடுத்த தலைமுறைக்கான காலம் இது. தொடர்ந்தும் மாற்றுக் கருத்துக்களும் சிந்தனைகளும் வாசகரிடத்தில் விதைக்கப்படல் வேண்டும். அதற்கான தளத்தினை இளையோர் ஆரம்பித்து வைத்தல் அவசியமாகிறது. பொருளாதார பலமும், பன்முகப்பட்ட எழுத்தாளரின் தரமான எழுத்துக்களுமே இதனை முன் நோக்கி நகர்த்தும் காரணிகளாக உள்ளன.

- சூரியகுமாரி ஶ்ரீதரன்-



(எஸ்.டொரின்)

# மூன்று வருடங்களாக தொலைபேசியை தேடாதது ஏன்?

# தாஜுதீனின் உடற்பாகங்கள் எவ்வாறு காணாமல் போயின?

வசீம் தாஜுதீன் கொலை செய்யப்பட்டதன் பின்னர் நடத்தப்பட்ட முதலாவது உடற்கூற்று பரிசோதனை அதாவது, ஆனந்த சமரகோனால் வெளியிட்ட அறிக்கை போலியானது என நிரூபிக்கப்பட்டது.

தாஜுதீன் கடத்தப்பட்டார் என கூறப்பட்டது. அவரது உடல் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக அறிக்கைகள் வெளியிடப்பட்டன. கொலையின் போது பயன்படுத்தப்பட்ட வாகனம் ஒரு பதிவுசெய்யப்பட்ட அரச வாகனம். (தாஜுதீன் பற்றிய பிரேத பரிசோதனை அறிக்கை தொடர்பான முழுமையான விடயங்களை இதற்கு முன்னரான பாகங்களில் மிகத் தெளிவாக



இதன்போது அவர் கைது செய்யப்பட்டுமிருந்தார். தொடர்ந்து சில காரணங்களை அடிப்படையாகக் கொண்டு அவருக்கு பிணையும் வழங்கப்பட்டது.

விசாரணையின் போது இது தொடர்பில் தனக்கு எதுவுமே தெரியாது என அவர் தெரிவித்திருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது. சுற்றிச் சுற்றி இந்த வழக்கு ஒரே இடத்துக்கு வந்தாலும் இந்த கொலையுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்பட்ட பலர் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

குறிப்பாக, 2020 ஆம் ஆண்டு உடல் நலம் குறைவு காரணமாக வைத்தியசாலையில்

கண்டெடுத்தவர் நாராஹேன்பிட்டி பொலிஸில் அதனை ஒப்படைத்திருத்தார்.

இருப்பினும், ஒரு நபர் காரில் சென்றிருக்கும் பட்சத்தில் அந்த பணப்பை வீதியில் விழுந்தது எப்படி? என்ற கேள்விக்கு இன்றுவரை பதில்

தேடப்படவில்லை என்ற கேள்வி அன்றைய நாட்களில் மிகவும் பேசுபொருளாகவே காணப்பட்டது.

மேலும், கொலை நடந்த நாளன்று தாஜுதீன் பெற்றோல்

**இந்த கொலையுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்பட்ட பலர் உயிரிழந்த சம்பவம் பெரும் மர்மத்தை ஏற்படுத்தியது**



குறிப்பிட்டிருந்தோம்.) இதனால் அந்த உடற்கூற்று அறிக்கை தொடர்பான சரியான விசாரணையை கூட முன்னெடுக்க முடியாத ஒரு நிலை இந்த வழக்கில் இருக்கின்றது. இவருடைய முரணான அந்த அறிக்கை பெரும் விமர்சனங்களை சந்தித்ததோடு, அதன் பின்னரான காலப்பகுதியில் மீண்டும் பிரேத பரிசோதனை நடத்திய வைத்தியர் அஜித் தென்னகோன் உண்மையான காரணங்களை கண்டறிந்து ஒரு அறிக்கையை சமர்பித்தார். அதன் பின்னர் தான் வழக்கு விசாரணை சூடுபிடிக்க ஆரம்பித்தது.

தொடர்ந்து, மாலபேயில் அமைந்துள்ள தனியார் மருத்துவ கல்லூரியான சயிட்டம் கல்லூரி விவகாரம் வெளிவரவே, இந்த விடயம் சூடுபிடிக்கத் தொடங்கியது.

ஆம்! ஆனந்த சமரகோன், தவறான பிரேத பரிசோதனை அறிக்கையை சமர்ப்பித்தது ஒருபுறம் இருக்கவே, அவர் மீது குற்றச்சாட்டுக்கள் அந்நாட்களில் அதிகமாகப் பதிவாகின. குறிப்பாக, சயிட்டம் மருத்துவ கல்லூரியின் முக்கிய பதவியான முதலாவது உபவேந்தராகவும் இவர் இருந்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு ராஜபக்சர்களின் ஆட்சியின் போது இந்த மருத்துவ கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி, 2011ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முறையான வைத்திய பட்டதாரிகளுக்கான பட்டப்படிப்பை (எம்.பி.பி.எஸ்) முன்னெடுக்கலாம் என சயிட்டம் கல்லூரி நிர்வாகத்திற்கு தரச்சான்றிதழையும் வழங்கியது.

இந்த வழக்கில் ஒட்டுமொத்த தவறையும் ஆனந்த சமரகோன் தான் திசை திருப்பியிருப்பதாக அந்நாட்களில் பேசப்பட்டது. காரணம், சயிட்டம் மருத்துவ கல்லூரிக்கு தான் தாஜுதீனின் உடற்பாகங்கள் கொண்டு செல்லப்பட்டது. அதன்போது தான் அவரது உடற்பாகங்கள் காணாமல் போயிருந்தன. 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்துக்கு பின்னர் குற்றப்புலனாய்வு திணைக்களம், உடற் பாகங்களை தேடி சோதனைகளை முன்னெடுத்திருந்தாலும் அவ்வாறு எதையுமே கண்டறிய முடியாத ஒரு சூழல் உருவாகியிருந்தது.

2017 ஆம் ஆண்டு ஆனந்த சமரகோன் விசாரணைகளுக்காக நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார்.

**சயிட்டம் மருத்துவ கல்லூரிக்கே தாஜுதீனின் உடற்பாகங்கள் கொண்டு செல்லப்பட்டிருந்த நிலையில், உடற் பாகங்களை தேடி சோதனைகளை முன்னெடுத்திருந்த போதிலும் அவ்வாறு எவையுமே கண்டறிய முடியாத சூழலே உருவாகியிருந்தது**

அனுமதிக்கப்பட்ட ஆனந்த சமரகோன், திடீரென உயிரிழந்தார். தாஜுதீன் விவகாரத்தில் ஓரளவு சாட்சியங்கள் கிடைத்துவிட்டது என்ற நம்பிக்கையில் அனைவரும் இருந்த தருணத்தில் தான் எதிர்பாராவிதமாக ஆனந்த சமரகோன் உயிரிழந்திருந்தார்.

மேலும், வசீமின் பணப்பை (பேர்ஸ்) கொலை நடந்த இடத்திலிருந்து சுமார் 2 கிலோமீற்றர் தூரத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட போது அதை

கிடைக்கப் பெறவில்லை. இதேவேளை, தாஜுதீனின் கையடக்கத் தொலைபேசி 2015 ஆம் ஆண்டு நுவரெலியா – அக்கரப்பத்தனை பிரதேசத்திலிருந்து குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. ஆனால், கையடக்கத் தொலைபேசியை ஷானி அபேசேகரவுடனான குழுதான் கண்டறிந்திருந்தது. இதன்போது இடம்பெற்ற விசாரணையில், நுவரெலியா – அக்கரப்பத்தனை பகுதியியை சேர்ந்த


ஆனந்த சமரக்கோன்

ஒருவரே கிருலப்பனையில் கால்வாய் ஒன்றிலிருந்து தாஜுதீனின் கையடக்க தொலைபேசியை எடுத்துள்ளதாக தெரியவந்தது.

தொடர்ந்து அதை அவர் அவருடைய மகனுக்கு பாவிப்பதற்காக கொடுத்திருக்கின்றார். ஆனாலும், கொலை நடந்ததோ 2012 ஆம் ஆண்டு. தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டதோ 2013 ஆம் ஆண்டு. இந்த இடைப்பட்ட காலத்தில் ஏன் தொலைபேசி

நிலையமொன்றிற்குச் சென்று எரிபொருளை நிரப்பிக் கொண்டு தண்ணீர் போத்தல் ஒன்றையும் வாங்கிச் செல்லும் காட்சிகளும் அதனைத் தொடர்ந்து அவருடைய காரை பின்தொடர்ந்து ஒரு டிபெண்டர் ரக வாகனம் செல்லும் காட்சிகளும் சீசிடிவியில் பதிவாகியிருந்தன.

கொலைச் சம்பவம் இடம்பெற்ற நாளில் டிப்பெண்டர் ரக வாகனமொன்று ஏன் தாஜுதீனின் வாகனத்தை பின்தொடர்ந்தது என விசாரணைகளில் கேள்வியெழுப்பட்டது. பின்னர், இதுகுறித்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்த போது ஹபரண பகுதியில் வைத்து அந்த டிப்பெண்டர் வாகனம் கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த டிப்பெண்டர் ரக வாகனம், ஜனாதிபதி செயலகத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டது மட்டுமன்றி எரிபொருள் கூட செயலகத்தின் வாயிலாகவும் நிரப்பப்பட்டுள்ளது என்ற அதிர்ச்சி தரும் தகவலும் வெளியாகியது.

அந்த டிபென்டர் வாகனமானது பொது மக்களின் சேவைக்காக சமூக மேம்பாட்டு அமைச்சுக்கு இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது என்பது சுட்டிக்காட்டத்தக்கது. ஆனால், இந்த வழக்கில் சிரந்தி ராஜபக்ஷ தொடர்புப்பட்டது எப்படி? அதாவது, அது பதிவுசெய்யப்பட்ட அரச வாகனம் என குறிப்பிட்டோம் அல்லவா..? ஆம் .. அந்த வாகனம் சிரந்தி ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டது என விசாரணைகளிலிருந்து தெரியவந்தது. அதுவும் சிரந்தி நடத்துகின்ற பொதுச்சேவைக்கான நிதியத்திற்கே அது வழங்கப்பட்டிருந்தது.

**அடுத்து நடந்தது என்ன?**

**(தொடரும்... )**

# தென்கொரிய ஜனாதிபதியின் இராணுவச் சட்டமும் ரணிலும்!

ரஷ்ய – உக்ரெய்ன் போர், இஸ்ரேல் – காஸா போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் உலக அரசியல் ஒழுங்குகளும் குழப்பியுள்ளன. தெற்காசிய நாடுகள் உள்ளிட்ட வளர்முக மற்றும் வளர்ச்சியடையாத நாடுகளும் பாதிக்கப்பட்டுள்ள சூழலில் சில தினங்களுக்கு முன்னர் தென்கொரிய ஜனாதிபதி இராணுவச் சட்டத்தை உள்ளூரில் பிறப்பித்திருந்தார்.

இப்பின்னணியில் இராணுவச் சட்டங்கள் பயங்கரவாதத் தடைச் சட்டங்கள் என்ற போர்வையில் உள்ளூரில் வாழும் ஏனைய தேசிய இனங்களை அடக்கி வரும் இலங்கை போன்ற நாடுகள் தென்கொரிய இராணுவச் சட்டத்திற்கு எதிராகக் கருத்திட்டிருக்கின்ற நிலைமை கவனிக்கத்தக்கது.

குறிப்பாக, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இராணுவச் சட்டம் மீளப் பெறப்பட்டதை வரவேற்றிருக்கிறார். 2009 இல் போர் இல்லாதொழிக்கப்பட்ட பின்னரான கடந்த 15 வருடங்களிலும் வடக்கு – கிழக்கில் இராணுவச் செயற்பாட்டுக்கு முக்கிய மளித்து வரும் இலங்கை அரச கட்டமைப்பின் முன்னாள் ஆட்சியாளரான ரணில் பாராட்டி யுள்ளதன் பின்னணியிலும் உலக அரசியல் பொதிந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

கொரியா இரண்டு நாடாக பிரிந்ததிலிருந்து தென்கொரியா நாடானது அமெரிக்கா, பிரித் தானியா உள்ளிட்ட நாடுகளின் கட்டுப்பாட்டிலும், வடகொரியா, சீனா மற்றும் ரசியா ஆகிய நாடுகளின் நட்புறவுடனும் இருந்து வருகின்றன.

வடகொரியா சொந்த மக்களுக்கு எதிராக தொடர்ச்சியான அடக்குமுறைகளை கையாள்வ தாக தென்கொரிய ஊடகங்களினூடாக அறிந் துள்ளோம். இவ்வாறிருக்க தற்போது தென்கொரி யாவில் அமுல்படுத்தப்பட்ட இராணுவ சட்டத் தால் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

## தென்கொரியா பேசு பொருளுக்கு உட்பட்டுள்ளது

தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோல் கடந்த செவ்வாய்க்கிழமை (03.12.2024) அந்நாட்டில் அவசரகால இராணுவ ஆட்சியை அமுல்படுத்தியதன் காரணமாகவே பாரிய விளைவுகளை எதிர்நோக்க வேண்டிய சூழ் நிலைக்கு தள்ளப்பட்டார்.

வடகொரியாவின் கொம்யூனிஸ்ட் படைகளின்





அச்சுறுத்தல்களிலிருந்து தென்கொரியாவை பாதுகாக்கும் நோக்கிலும் உள்நாட்டில் தேச விரோத சக்திகளை ஒழிக்கும் நோக்கிலும் இராணுவ ஆட்சியை அமுல்படுத்தியதாக அவர் விளக்கமளித்திருந்தார். எனினும், இந்நடவடிக்கை சட்டவிரோதமானது மற்றும் அரசியலமைப்பிற்கு எதிரானது என தென் கொரிய அரசியல்வாதிகள் இராணுவச் சட்டப் பிரகடனத்தை விமர்சித்தனர். ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலரும் இந்த இராணுவ ஆட்சி தீர்மானத்திற்கு எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

“இராணுவ ஆட்சி வேண்டாம்”, “சர்வாதி காரத்தை முறியடிப்போம்” போன்ற வாசகங்கள் பொறித்த பதாதைகளை ஏந்தியவாறும் கோஷங் களை எழுப்பியவாறும் மக்கள் போராட்டத் தில் ஈடுபட்டனர். அரசின் தீர்மானத்திற்கு எதிர்க் கட்சிகள் கடும் கண்டனத்தையும் எதிர்ப்பையும் வெளியிட்டன. அதுமட்டுமின்றி மக்கள் தொடர்ந்து ஜனாதிபதி யூன் சுக் யோல் பதவி விலக வேண்டும் என கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், மக்கள் பிரதிநிதிகளும் இந்த உத் தரவைத் திரும்பப் பெற வலியுறுத்தி வாக்க ளித்தனர். சட்டத்தைத் திரும்பப் பெற தேசிய சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மொத்தமுள்ள 300 பேரில் 190 பேர் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். இதனை தொடர்ந்து தென்கொரிய ஜனாதிபதி குறித்த அவசரநிலை இராணுவ சட்டத்தை மீளப்பெறுவதாக அறிவித்தார்.

ஆனாலும், தென்கொரிய ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்யும் தீர்மானத்தை அந்நாட்டின் எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தன. தென் கொரிய ஜனாதிபதி பதவி நீக்கம் செய்ய நாடாளுமன்றத்தில் 3 இல் இரண்டு பெரும்பான்மை ஆதரவும், குறைந்தபட்சம்

**இராணுவச் சட்டங்கள் பயங்கரவாதத்தடைச்சட்டங்கள்என்றபோர்வையில்உள்ளூரில்வாழும்ஏனைய தேசிய இனங்களை அடக்கி வரும் சில தெற்காசிய நாடுகள் தென்கொரியஇராணுவச்சட்டங்கள்தளர்த் தப்பட்டதை வரவேற்றிருக்கின்றமை வேடிக்கையே...**

6 அரசியலமைப்பு நீதிமன்ற நீதிபதிகளின் ஆதரவும் தேவை என்ற நிலை நிலவியது.

இதற்கமைய சனிக்கிழமையன்று (07) நடைபெற திட்டமிடப்பட்டிருந்த யூனுக்கு எதிரான பதவி நீக்க வாக்கெடுப்பின் முடிவுகள் இவ்வேளை வெளிவந்திருக்கும்.

## தேசிய சபையின் நடவடிக்கையை பாராட்டும் ரணில்

இதேவேளை, இராணுவச் சட்ட ஆட்சியை எதிர்ப்பதற்காக, கொரிய குடியரசின் தேசிய சபை எடுத்த துரிதமான மற்றும் ஒன்றிணைந்த நடவடிக்கையை பாராட்ட வேண்டும் என இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோலின் இராணுவச் சட்டப் பிரகடனம் கொரியக் குடியர சின் ஜனநாயக அமைப்பை அச்சுறுத்தியுள்ள தாக கூறிய அவர் நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சிகள் மற்றும் நிர்வாகத்தை ஆதரிப்பவர் களின் ஒற்றுமை சர்வதேச அளவில் அங்கீ கரிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருந் தார்.

## இராணுவச் சட்டம்

தென் கொரியாவில், முன்னாளைய சர் வாதிகாரி பார்க் சுங்-ஹீ ஆட்சிக் கவிழ்ப்பின் போது படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இறுதியாக 1979 ஆம் ஆண்டி லேயே அங்கு இராணுவச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டிருந்தது. அதற்குப் பின்னர் தென் கொரியாவில் இராணுவ ஆட்சி அறிவிக்கப்பட்டது இதுவே முதன்முறை ஆகும்.

மேலும், இராணுவ சட்டத்தை அமுல் படுத்துவதாக வெளியான அறிவிப்பைத் தொடர்ந்து தென் கொரியாவின் நாணய மதிப்பு பாரிய வீழ்ச்சியை கண்டுள் ளது. இந்த சர்ச்சை ஜன நாயக நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.


பாலகணேஷ் டிலுக்ஷா

தற்போது ஏற்பட்டுள்ள இந்த சர்ச்சை தென்கொரிய ஜனநாயகத்திற்கு மாத்திரமல்லாது பொரு ளாதாரத்திற்கும் மிகப்பெரிய சவாலாகும். இக்காரண – காரிய அடிப்படையில் இலங்கை யிலும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு பலரும் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர்.

அதாவது, இந்த சட்டம் நாட்டில் இராணுவ மயமாக்கலுக்கான அங்கீகாரத்தை வழங்க கூடும் என தெரிவிக்கப்படுகின்றது. இதன்மூலம் இராணுவத்திற்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. கைது செய்தல், தேடுதல் களை முன்னெடுத்தல் போன்ற அதிகாரங்கள் இராணுவத்திற்கு கொடுக்கப்படுகின்றது. அந்த சட்டத்திற்கு எதிர்ப்பு வெளியிடுவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம் என்பதை உணர வேண்டும்.

1979 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதி பதி ஜே.ஆர். ஜயவர்தனவினால் கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடுப்பு சட்டத்திற்கு பதிலாக, பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக் கது. இலங்கையில் தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. புதிய அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டியதொரு சட்டம் என்பதை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைவாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஒன்றை அமைத் துக் கொள்வதே தமது திட்டம் என்று கூறி யுள்ளது. இலங்கையில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை கடந்த அரசாங்கம் முன்னெடுத்த போதே அதற்கு எதிராக வடக்கு – கிழக்கு மக்கள் குரல் கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒருவன் சினிமா



## நாகசைதன்யா – சோபிதா துலிபாலா
## திருமண அல்பம்






**நடிகர்கள்:** அல்லு அர்ஜுன், ராஷ்மிகா மந்தனா, பகத் பாசில், ராவ் ரமேஷ், ஜகபதி பாபு, ஸ்ரீலீலா, அனுசுயா, சுனில்
**இசை:** தேவி ஸ்ரீ பிரசாத், சாம் சி.எஸ்
**இயக்கம்:** சுகுமார்

புஷ்பா திரைப்படம் நடிகர் அல்லு அர்ஜுனுக்கு சிறந்த நடிகருக்கான தேசிய விருதை பெற்றுத் தந்தது. இந்த படத்திலும் அதைவிட அதிக மெனக்கெடலுடன் அல்லு அர்ஜுன் நடித்துள்ளார். ஆனால், அவர் மட்டுமே படம் முழுவதும் கூடுதல் நடிப்பைத் தருவது போலவும், மற்ற நடிகர்களின் கதாபாத்திரங்கள் மொத்தமாக வலுவிழந்து காணப்படுவதும் புஷ்பா 2 படத்தை ஒரு சிறந்த படம் என சொல்லவிடாமல் செய்கிறது.

தனது மனைவி ஸ்ரீவள்ளி முதலமைச்சருடன் புகைப்படம் கேட்க, கள்ளக் கடத்தல் செய்றவன் கூட எல்லாம் நின்னு போட்டோ எடுக்க முடியாது என முதல்வராக வரும் ஆடுகளம் நரேன் அவமானப்படுத்திவிட அமைச்சர் பதவி கேட்டுச் செல்லும் ராவ் ரமேஷையே முதல்வராக புஷ்பராஜ் மாற்றும் ஒரு கதை ஒரு பக்கம் ஓடிக் கொண்டிருக்கிறது.

இன்னொரு பக்கம் சிறு வயது முதலே அண்ணனால் குலம் கோத்திரம் தெரியாதவன் என அவமானப்படுத்தப்பட்டு வரும் புஷ்பராஜ் அண்ணன் மகளுக்காக எடுக்கும் பெரிய ரிஸ்க் காரணமாக என்ன ஆகிறது என்கிற இன்னொரு கதை ஓடுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, முதல் பாகத்தின் வில்லனான பன்வர்சிங் செகாவத் (பகத் பாசில்) புஷ்பராஜின் எதிர்மறையான செஞ்சந்தனக் கடத்தலை பிடித்தாரா? இல்லையா? என இன்னொரு கதை என புஷ்பா 2 படத்தின் கதை உருவாக்கப்பட்டுள்ளது.

பகத் பாசில் செம்மரக்




கடத்தல்காரராக மாறு வேடத்தில் வரும் போது தான் படமே சூடு பிடிக்கிறது. முதல் பாகத்தை போலவே இந்த பாகத்திலும் கடத்தல் தொழிலை எப்படியெல்லாம் புஷ்பராஜ் சர்வ சாதாரணமாக செய்கிறார் என்பதை காட்டும் காட்சிகள் இரசிக்க வைக்கின்றன.

ஸ்ரீவள்ளியாக இந்த பாகத்திலும் தொடரும் ராஷ்மிகா மந்தனா முதலமைச்சருடன் ஒரு புகைப்படம் கேட்க, ஆட்சி மாற்றத்தையே கொண்டு வந்து ஸ்ரீவள்ளியின் பிறந்தநாளுக்கு ராவ் ரமேஷை முதலமைச்சராக்கி வீட்டுக்கே கொண்டு வந்து விருந்து கொடுக்கும் காட்சிகள் எல்லாம் நன்று.

**பிளஸ்:**

மொத்த படத்தையும் செஞ்சந்தனத்தை தோளில் சுமந்து ஒரு ஷோல்டர் ஏறியிருக்கும் புஷ்பாவுக்கு இன்னொரு ஷோல்டரிலும் பெரிய பாரம் வைத்தாலும் அதையும் சுமந்துக் கொண்டு நடிப்பில் மிரட்டி விடுகிறார். ராஷ்மிகா மந்தனா தனது கணவருக்காக விளாசும் காட்சிகள் ரசிக்க வைக்கின்றது. பாடல்கள், பின்னணி இசை அனைத்தும் படத்திற்கு தேவையான அளவிலேயே உள்ளன.

**மைனஸ்:**

ஒரே கதையில் பயணிக்காமல் ஏகப்பட்ட கிளை கதைகளை புஷ்பா ஷோல்டரில் ஏற்றியது தான் பெரிய பிரச்சினையாக மாறிவிட்டது. தனது அண்ணன் மகளை காப்பாற்றும் அந்த க்ளைமேக்ஸ் காட்சிகளெல்லாம், வழக்கமான படங்களிலேயே பார்த்து போரடித்து விட்டக் காட்சிகள் தான். கடைசியில் வரும் க்ளைமேக்ஸ் காட்சி மற்றும் 3ஆம் பாகத்துக்கான தலைப்பு எல்லாம் தேவையற்றது.

## பொலிவுட்டில் பகத்

மலையாளத்தில் நாயகனாக வலம் வந்த பகத் பாசில், 2017ஆம் ஆண்டு சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளியான வேலைக்காரன் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார். இப்படம் அவருக்கு இரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுக் கொடுத்தது. இந்த படத்தை தொடர்ந்து, பகத் சூப்பர் டீலக்ஸ், விக்ரம் மற்றும் மாமன்னன் ஆகிய படங்களில் நடித்தார். மேலும் சூப்பர்ஸ்டார் ரஜினியுடன் இணைந்து வேட்டையன் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

தற்போது, இவர் வில்லனாக நடித்த “புஷ்பா 2” திரைப்படம் வெளியாகியுள்ளது. இந்நிலையில் பகத், பொலிவுட்டில் அனிமல் படத்தின் புகழ் நடிகை திரிப்தி டிம்ரியுடன் நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது. இப்படத்தை இம்தியாஸ் அலி இயக்கவுள்ளார். இதன் மூலம் பகத் பாசில் பொலிவுட்டில் அறிமுகமாக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



“மாரி திரைப்படத்தில் தனுஷுடன் நடித்ததை என்னால் மறக்கவே முடியாது. அவர் மற்றவர்களை ஏற்றிவிட்டு அழகு பார்க்கும் ஒரு ஏணி. என்னுடன் பழகும் போது ஒரு குழந்தையாகவே தனுஷ் மாறிவிடுவார். அவர் ஒரு நடிகர் என்பதையும் தாண்டி ஒரு மனிதராக மிகப்பெரிய உயரத்தில் இருக்கின்றார்”

– ரோபோ ஷங்கர்

## பல வருடங்களின் பின் சூர்யாவுடன் இணைந்த பிரபல நடிகை



சிறுத்தை சிவா இயக்கத்தில் சூர்யா நடித்து சில தினங்களுக்கு முன் அண்மையில் வெளியான திரைப்படம் கங்குவா. இரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புடன் வெளிவந்த இப்படம் வசூல் ரீதியாக தோல்வி அடைந்தது.

தற்போது கங்குவா படத்தை தொடர்ந்து சூர்யா, கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் அவரது 44ஆவது படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்த படத்தை தொடர்ந்து, சூர்யா ஆர்.ஜே. பாலாஜி இயக்கத்தில் அவரது 45 ஆவது படத்தில் நடிக்கிறார்.

இந்நிலையில், சூர்யா 45 படத்தின் சூட்டிங்கில் நடிகை த்ரிஷா இணைந்துள்ளதாகவும், ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளார் எனவும் கூறப்படுகிறது. இது அதிகாரப்பூர்வ தகவல் என்றால் ஆறு படத்தை தொடர்ந்து சூர்யாவுடன் த்ரிஷா பல ஆண்டுகள் கழித்து மீண்டும் நடிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## நயன்தாராவை முந்திய த்ரிஷா

2024ஆம் ஆண்டு கொலிவுட்டில் அதிக சம்பளம் வாங்கும் நடிகையாக இருக்கிறார் த்ரிஷா. மணிரத்னம் இயக்கத்தில் கமல்ஹாசன், சிம்பு உள்ளிட்டோர் நடித்திருக்கும் ‘தக்லைஃப்’ படத்தில் நடித்துள்ளார் த்ரிஷா. இப்படத்தில் நடிக்க அவருக்கு ரூ. 12 கோடி சம்பளம் கொடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து கொலிவுட்டில் அதிக சம்பளம் வாங்கும் நடிகையாகிவிட்டார் த்ரிஷா.

த்ரிஷாவுக்கு அடுத்தபடியாக அதிகம் சம்பளம் வாங்கும் கொலிவுட் நடிகை நயன்தாரா. அவர் படம் ஒன்றுக்கு ரூ. 10 கோடி வாங்குகிறார்.

## ஆண்ட்ரியா ஜெரெமையா



அன்றும் இன்றும்

## அஜித் படத்துக்கு புதிய சிக்கல்




அஜித் நடித்துள்ள ‘விடா முயற்சி’ படம் தொடர்பாக விளக்கம் கேட்டு ஹொலிவுட் பட நிறுவனம் மின்னஞ்சல் அனுப்பியுள்ளது. அஜித் குமார், திரிஷா, ரெஜினா, அர்ஜுன் நடிப்பில் வெளியாகவுள்ள படம் ‘விடா முயற்சி’. மகிழ் திருமேனி இயக்கியுள்ளார். அனிருத் இசையமைக்கிறார். லைகா நிறுவனம் தயாரித்துள்ளது.

இப்படம் பொங்கலுக்கு வெளியாகவுள்ள நிலையில், இதன் டீசரைப் பார்த்த இரசிகர்கள் பலரும், இது ஹொலிவுட்டில் 1997இல் வெளியான ‘பிரேக் டவுன்’ படத்தின் தழுவல் என தகவல் பரப்பினர்.

சமூக வலைத்தளத்தில் இந்த தகவல் பரவியதையடுத்து, ‘பிரேக் டவுன்’ படத்தை தயாரித்த டினோ டி லோரன்டீஸ், மர்த்தா, டி லோரன்டீஸ் ஆகியோர் இது தொடர்பாக விளக்கம் கேட்டு படக்குழுவுக்கு மின்னஞ்சல் அனுப்பியுள்ளனர்.

இதுகுறித்து பட வட்டாரம் தெரிவிக்கையில், ‘பிரேக் டவுன்’ படத்தின் தழுவல் என தவறான தகவல் ‘விடா முயற்சி’ பற்றி பரவியுள்ளது. ஓரிரு காட்சிகள் அந்த படத்தை நினைவுபடுத்தலாம். ஆனால் அந்த படத்துக்கும் ‘விடா முயற்சி’க்கும் எந்த தொடர்பும் கிடையாது. இதன் கதையே வேறு. இது குறித்த விரிவான விளக்கம் ஹொலிவுட் நிறுவனத்துக்கு அனுப்பப்படும்’ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## Face of the week

மடோனா செபஸ்டியன்



இந்தப் பத்திரிகை கொழும்பு – 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 08ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.